விலை
ரூபா 20

பக்கங்கள்
28+XXIV

# உதயன்

சுடர் 31 | கதிர் 140 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 01, வியாழக்கிழமை 14.04.2016

உங்கள் நீர்
மாசடைந்துள்ளது
என்பதை அறிவீர்களா?
விவரம்
XVII ஆம் பக்கத்தில்

## ஆசிச் செய்திகள்

- இன்ப நல்வாழ்வு மலரவேண்டும்...
- நீதியோடு கூடிய சமாதானம்...
- பேதங்கள் மறையட்டும்...
- சமாதானம், மகிழ்ச்சி பொங்குக...
- நல்லுறவைக் கட்டியெழுப்புவோம்...
- தமிழ் மக்களுக்கு தீர்வு வரட்டும்...
- நல்லதோர் தீர்வு கிடைக்கட்டும்...

# வடக்கின் தீர்வு வரைவுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு

## தயாராகி வருகின்றது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு, ஏப்ரல் 14
வடக்கு மாகாண சபையின் பிரிவினைவாதச் செயற்பாடுகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.
வடக்கு மாகாண சபையால் அரசியல் தீர்வுத் திட்ட வரைவு கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டிருந்தது. இந்தத் தீர்வுத் திட்டத்தில், தமிழ்மொழி பேசுபவர்களை உள்ளடக்கிய வடக்கு - கிழக்கு ஒரு மாநிலமாகவும், ஏனைய மாகாணங்களை ஒன்றிணைத்து இன்னொரு மாநிலமாகவும் அமைக்கும் யோசனை உள்ளடக்கப்பட்டிருந்தது.
இந்தத் தீர்வுத்திட்ட வரைவு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-
மொழி அடிப்படையில் மாநிலங்களை உருவாக்குவதற்கான முன்மொழிவைச் செய்ததன் மூலம், வடக்கு மாகாணசபை பிரிவினைப் பாதையில் செல்கிறது. இந்த விவகாரத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
வடக்கு மாகாண சபையின் இந்த நடவடிக்கை அரசமைப்புக்கு எதிரானது. இந்த விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர், பக். 23




## வெடிபொருள் மீட்பு; மற்றொருவரை தேடுகிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஏப். 14
மறவன்புலோவில் தற்கொலை அங்கி உள்ளிட்ட வெடி பொருள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கு உடந்தையாக இருந்தார் என்று கூறப்படும் ஒருவரைத் தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த 30 ஆம் திகதி மறவன்புலோவில் உள்ள வீடு ஒன்றிலிருந்து தற்கொலை அங்கி, கிளைமோர்கள் உள்ளிட்ட வெடி பொருள்கள் பக். 23


# நுணாவிலில் ஞாயிறன்று முன்னாள் போராளி கைது

## வெள்ளை வானில் வந்த ரி.ஐ.டியினர் ஆவணங்களின்றி அழைத்துச் சென்றனர்

யாழ்ப்பாணம், ஏப். 14
பயங்கரவாத விசாரணைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டவர்களால், நுணாவிலில் முன்னாள் போராளி ஒருவர் கைதுசெய்யப்பட்டு வெள்ளை வானில் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.
இதன்போது குறித்த முன்னாள் போராளி கைது செய்யப்பட்டதற்கான எந்தவொரு ஆவணமும் உறவினர்களிடம் வழங்கப்படவில்லை.
சிவில் நிர்வாகத்தின் பக். 25

# நேற்று மாலை பிறந்தது துர்முகி தமிழ் வருடம்

## ஆலயங்களில் விசேட வழிபாடு வர்த்தக நிலையங்களில் கைவிசேடம்



யாழ்ப்பாணம், ஏப்.14
துர்முகி தமிழ் புத்தாண்டு நேற்று மாலை 6.30 மணிக்குப் பிறந்தது. இதனை முன்னிட்டு இந்து ஆலயங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. பக். 24

# ஏற்கனவே அடையாளமிட்ட காணிகளையே பறிக்கிறோம்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சொல்கிறார்

கொழும்பு, ஏப். 14
வடக்கில் பாதுகாப்புத் தேவைக்காக ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட காணிகளையே சுவீகரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.



புதிதாகக் காணிகள் எவற்றையும் சுவீகரிக்க வில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
வடக்கில் முன்னெடுக்கப்படும் காணிச் சுவீகரிப்புக்கு எதிராக, யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தை முற்றுகையிட்டுக் கடந்த திங்கட்கிழமை போராட்டம் நடத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
வடக்கில் இரா பக். 23

முச்சந்தி முரளி



துர்முகி வருடத்திலாவது கிடைக்குமா தமிழருக்கு உரிமை

## பரந்தன் விபத்தில் சிப்பாய் சாவு

கிளிநொச்சி, ஏப். 14
பரந்தன் - பூநகரி வீதியில் இடம்பெற்ற பவுசர் மற்றும் டிப்பர் விபத்தில் படுகாயமடைந்த இராணுவச் சிப்பாய் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த விபத்து நேற்று முன்தினமிரவு இடம்பெற்றது.
இதில் பூநகரி இராணுவ முகாமில் கடமையாற்றும் பெரேரா (வயது - 24) எனும் இராணுவச் சிப்பாயே உயிரிழந்தார். இராணுவத்தி பக். 23

# சுயாதீன ஊடகவியலாளரை அச்சுறுத்தியது இராணுவம்

## கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 14
செய்தி சேகரிக்கச் சென்ற சுயாதீன ஊடகவியலாளர் ஒருவர், இராணுவ அதிகாரியினால் அச்சுறுத்தப்பட்டதாகத் தெரிவித்துக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
பூநகரி வீதியில் குடமுருட்டி பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் பக். 24

# முல்லைக் கடலில் மீன்பிடிக்க புதிதாக அனுமதி வழங்கப்படா

## மீன்பிடித்துறை அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 14
முல்லைத்தீவுக் கடலில் ஏற்கனவே மீன்பிடியில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் மட்டுமே தொடர்ந்து அங்கு மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று மீன் பிடித்துறை பக். 23

# வடக்கு அமைச்சரவை மாற்றம் பல கோணங்களில் ஆராயப்படும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14
அமைச்சரவை மாற்றம் தொடர்பில் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாகப் பல கோணங்களில் ஆராய வேண்டி இருப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண பக். 23

# யாழ்.செயலகத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு

## வழங்குமாறு அரச அதிபர் பொலிஸ் அத்தியட்சகருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்.14
யாழ். மாவட்டச் செயலகத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு, பொலிஸ் அத்தியட்சகரிடம் அரச அதிபர் நா.வேதநாயகன் கேட்டுள்ளார்.
யாழ். மாவட்டச்செயலகத்துக்கும், கடமை நேரங்களில் அரச அதிபரின் அலுவலகத்துக்கும் நிரந்தரமாக பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பேதங்களும் பாகுபாடுகளும் இல்லாத தேசம் உருவாகட்டும்



இலங்கைவாழ் தமிழ் இந்துக்களினதும் சிங்கள பௌத்தர்களினதும் மிக முக்கியமான தேசிய கலாசார விழாவாகவே சித்திரைப் புத்தாண்டு கொண்டாடப்படுகின்றது. இவ் இருஇனத்தவர்களும் தத்தமது கலாசார தனித்துவங்களுக்கு முக்கியத்துவத்தை வழங்கி இப்பண்டிகையை கொண்டாடுவதே வழமையாகும்.

இப்புத்தாண்டின் போது ஒட்டுமொத்த சமூகமும் குறிப்பிட்ட ஒரு சுப நேரத்தில் உணவு சமைத்து உண்பது என்ற விடயம் சிறப்பான அம்சமாகும். அத்தோடு புத்தாண்டானது அர்ப்பணிப்பு. பாராட்டுதல், பகைமை மறத்தல், பெரியோரைக் கனம் பண்ணுதல், பரிசுப் பொருள்களைப் பரிமாறிக் கொள்ளுதல் ஆகியவற்றின் ஒட்டு மொத்த வடிவமாகும். சித்திரைப் புத்தாண்டில் இந்த நற்குணங்களைப் புரிந்து அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து கலாசார உரிமைகளைப் பேணிப் பாதுகாத்தவாறு மன மகிழ்ச்சியை ஏற்படுத்திக்கொள்ளும் வகையில் செயற்படுவது நம் அனைவரினதும் பொறுப்பாகும்.

சூரிய பகவான் மீன இராசியிலிருந்து மேட இராசிக்கு பயணிப்பதை குறித்து நிற்கின்ற அற்புதமான ஒரு பண்டிகையாகவும் சித்திரை வருடப் பிறப்பை குறிப்பிடலாம். புத்தாண்டுடன் புது பொலிவு பெறும் இயற்கையுடன் எமது தொடர்புகளையும் புதுப்பிக்கும் ஓர் அபூர்வ சந்தர்ப்பமாகவும் இப்புத்தாண்டு அமைகின்றது. விருந் தோம்பல் மூலம் அனைவரையும் ஒன்றிணைக்கின்ற மங்களகரமான இந்நிகழ்வு. தேசிய நல்லிணக்கத் துக்கு வலுவூட்டுகின்ற ஒரு முக்கிய பண்டிகையாகவும் கொள்ளலாம். இந்த வேளையில் அனைத்து இல்லங்களிலும் மங்கள ஒளி பிரகாசித்து அனைவரின் முகங் களும் மகிழ்ச்சியில் மலர்ந்து பகைமை உணர்வு தணிந்து தம் அயலவர்களை கருணை உள்ளத்துடனும் கனிவு மனதுடனும் பார்க்கப் பழகும் நற்குணங்களை மேலோங்கச் செய்யும் புத்தாண்டாக இந்தச் சித்திரைப் புத்தாண்டு அமைய வேண்டுமென மனமார பிரார்த்திப்பதோடு ஒரே தேசம், ஒரே மக்கள் என்ற ரீதியில் பேதங்களும் பாகுபாடுகளும் இல்லாத போதைப்பொருள் மற்றும் மதுபானப் பாவனை அற்ற ஒரு தேசத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்துக்கு உங்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பை நல்கும் வகையில் இச் சித்திரைப் புத்தாண்டை கொண்டாட உறுதி கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**மைத்திரிபால சிறிசேன.**
**ஜனாதிபதி**

## சமாதானம், மகிழ்ச்சி நிறைந்த புத்தாண்டாக அமையட்டும்



சுதந்திரமான புத்தாண்டை கொண்டாடும் சூழல் எமது நாட்டில் உருவாகியிருக்கின்றது. அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இத்திருநாளை ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக்கொள்கிறேன். உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் சமூக மற்றும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் எதிர்கால வேலைத்திட்டத்தோடு ஒன்றிணைந்து செயற்பட இந்நாளில் உறுதிபூணுவோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து, மானிட கௌரவத்தைப் பாதுகாக்கும், கலாசாரப் பல்வகைத் தன்மையை மதிக்கும் ஐக்கியம் மிகுந்த மக்களாக இவ்வாண்டின் சிங்களத் தமிழ் புத்தாண்டைக் கொண்டாடக் கிடைத்தமையானது இலங்கையரான நாமனைவரும் பெற்றுக்கொண்ட பாக்கியமாகும்.

தற்போது அனைவருக்கும் சுதந்திரமாக புத்தாண்டைக் கொண்டாடக் கூடியதொரு சூழல் நாட்டிலே உருவாகியுள் ளது. அதற்காக வேண்டி அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவும் இதனை ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக் கொள்கிறேன்.

பெற்றுக்கொண்ட சுதந்திரம் மற்றும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் சமூக மற்றும்பொருளாதார முன்னேற்றத்தைக் கட்டியெழுப்பும் எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டத்தோடு ஒன்றிணைந்து செயற்படவும் இப்புத்தாண்டில் உறுதிபூணுவோம்.

அனைத்து இலங்கையருக்கும் சமாதானம், மகிழ்ச்சி நிறைந்த சுபீட்சமிக்கதாக இப்புத்தாண்டு அமையட்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க**
**பிரதமர்**

## நல்லுறவைக் கட்டியெழுப்ப அனைவரும் முன்வர வேண்டும்



உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழ், சிங்கள மக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

மலர்ந்திருக்கும் இந்த இனிய ஆண்டானது உங்கள் அனைவருக்கும் செழிப்பு மிக்க ஆண்டாக அமைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

சித்திரைப் புத்தாண்டானது வெறுமனே ஒரு பண்டிகையாக அல்லாமல் எமது கலை, கலாசார, பாரம்பரிய விளையாட்டுக்கள் எனப் பல்வேறு அம்சங்களோடு பின்னிப் பிணைந்ததாகப் பலநூற்றாண்டு மேன்மையான எமது வரலாற்றுக்குச் சான்றாக இருப் பது ஒரு சிறப்பம்சம் ஆகும். அது மாத்திரமன்றி எமக்கே உரித்தான எமது பாரம்பரியங்களோடு தனித்துவமான சமூகங்களாக சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடும் நாம், சித்திரைப் புத்தாண்டானது தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் இணைக்கும் ஒரு பண்டிகையாக மட்டுமன்றி, எம் இரு சமூகங்களும் சேர்ந்து கொண்டாடும் ஒரே ஒரு பண்டிகை என்பதையும் பெருமையோடு நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே மலர்ந்துள்ள இந்தப் புதிய ஆண்டில் கடந்த காலங்களிலே பல்வேறு சம்பவங்களின் நிமித்தம் சிதைந்து போயுள்ள சமூகங்களுக்கு இடையேயான நல்லுறவைக் கட்டியெழுப்ப அனைவரும் முன்வர வேண்டும் என நான் அழைப்பு விடுக்கிறேன்.

மேலும், மகிழ்ச்சியோடு இந்தப் புத்தாண்டை வரவேற்றுக் கொண்டாடும் அதேவேளை, பல்வேறு சூழ்நிலைகளின் நிமித்தம் இந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாட முடியாத நிலையில் உள்ள எமது உறவுகளையும் நினைவில் வைத்துக்கொள்வோமாக.

மலர்ந்துள்ள இந்தப் புத்தாண்டானது உங்கள் அனைவரதும் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுகின்ற சுபீட்சமான ஆண்டாக அமைய வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன்.

**இரா.சம்பந்தன்**
**எதிர்க்கட்சித் தலைவர், தலைவர்**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

## நல்லதோர் தீர்வு கிடைக்கட்டும்



இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள். மன்மத வருடம் நிறைவு பெற்றுத் துர்முகி வருடம் பிறந்துள்ளது. தமிழினத்தின் துன்ப துயரங்கள் அனைத்தும் தீர வேண்டும் என்று பிரார்த்திப்பதுவே இறைவனிடம் நாம் வேண்டுவது. துன்பப்படும் துயருறும் நமது தமிழ் மக்கள் அத்துயர்களிலிருந்து விடுதலைபெற்று நிம்மதிப் பெருமூச்சு விட வேண்டும் என்பதே நமது இலட்சியம். அரசியல் ரீதியில் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு அதிகம் வேதனையில்லா விட்டாலும் இன்னும் நமது விடிவுக்கான பல கருமங்கள் செய்து முடிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. எத்தனை நல்லெண்ணம், புரிந்துணர்வு, சகவாழ்வு என்று கதைத்தாலும் செயல்வடிவில் தமிழ் மக்களின் மனதை வென்றெடுக்கக் கூடிய அரசியல் காரியங்கள் இனிமேல் தான் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது அனைவருக்கும் தெரிந்த பேருண்மை. பொது மக்கள் மட்டம், அரசியற் பிரமுகர் மட்டம், சர்வதேச மட்டம், இராஜதந்திர மட்டம் என்று பல வகையிலும் நமது கண்ணோட்டம் விசாலிக்க வேண்டிய தேவையுள்ளது. பிறந்துள்ள இப்புத்தாண்டு மனமாற்றத்தையேற்படுத்தி நல்லதோர் தீர்வைத் தந்து நிம்மதி வாழ்வை நல்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**ஈ.சரவணபவன்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.**

## துர்முகி ஆண்டில் தமிழ் மக்கள் பிரச்சினைகள் தீர வேண்டும்



மன்மத வருடம் எங்களை விட்டுப் போக துர்முகி வருடம் இன்று (நேற்று) மாலை ஆரம்பமாகின்றது. வருடங்கள் வந்து போனாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தாமதங்களே மிஞ்சி நிற்கின்றன. போரால் பாதிக்கப்பட்ட எம்முடைய மக்களில் பலர் சொந்த வீடுகளுக்கும் காணிகளுக்கும் செல்லமுடியாது வேறு இடங்களில் பல சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். சிறையிலடைபட்ட எமது இளைஞர்கள் சிலரைத் தவிர மற்றையோர் இன்னமும் விடுபட்டபாடில்லை. போரின்போது தமது உற்றார், உறவினர்களைப் பறிகொடுத்த எம்மவர்கள் அவர்களுக்கு என்ன ஆனது எனத் தெரியாது தவிக்கின்றார்கள். இராணுவம் தொடர்ந்து இருந்து எம்மக்களின் வாழ்வாதாரத்தையும் வளங்களையும் வளைத் தெடுத்து நிற்கின்றது. எமது மீனவர்கள் கடலில் சென்று தமது தொழிலைச் செய்யப் பல தடைகள் இடப்பட்டிருக்கின்றன. வெளிமாவட்டங்களிலிருந்து பலர் இராணுவ அனுசரணையுடன் எமது மாகாணத்துக்கு வந்து குடியேறுகின்றார்கள். குடிசனப் பரம்பலை மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. மாகாண அரசை மத்திய அரசு உதாசீனஞ் செய்து தான்தோன்றித்தனமாகப் பல வேலைத் திட்டங்களைச் செய்து வருகின்றது.

இப்பேர்ப்பட்ட இன்னோரன்ன பல பிரச்சினைகளின் மத்தியில் தான் துர்முகி வருடம் உதயமாகின்றது. எம்முடைய பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் இறைவன் அருளால் துர்முகி வருடத்தில் அவை தீர்க்கப்பட்டு, மக்கள் வாழ்வு சுமுகமான முறையில் நடத்தப்பட பிரார்த்திக்கின்றேன். வடமாகாண மக்கள் யாவரும் பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றேன். என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இன்ப நல்வாழ்வு மலரவேண்டும்



இன்று புத்தாண்டு பிறந்திருக்கின்றது. இன்று பிறந்துள்ள புது வருடத்துக்கு துர்முகி ஆண்டு என்று பெயர்.

இதுவரை காலமும் பட்ட துன்ப துயரங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோன்று மறைந்து இனிமேலாவது இன்ப நல் வாழ்வு மலர வேண்டுமென்று அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம்.


இன்று முதலாக நன்மைகள் பெருகி தீமைகள் விலகி இலங்கை வாழ்மக்கள் அனைவரும் ஆனந்தமயமான மகிழ்ச்சி நிறைந்த நல்வாழ்விற் திளைக்க வேண்டுமென்று வாழ்த்தி மகிழ்கின்றோம். இன மத வேறு பாடின்றி எல்லா மக்களும் ஒற்றுமையாக சந்தோசமும் சமாதானமும் நிறைந்து சுபீட்சமாக வாழ வழிபிறக்க வேண்டுமென்று இறையருளையும் திருவருளையும் இறைஞ்சி உளமாரப் பிரார்த்தித்து நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்.

எல்லோரும் நன்றாக வாழ அருளாசிகள் வழங்குவதோடு இன்று முதலாக அதாவது இந்தப் புத்தாண்டு தினம் முதலாக நாட்டில் மங்கலம் பொங்கி சுபீட்சம் மலர்ந்து மகிழ்ச்சியான வாழ்க்கை மலர வேண்டுமென்று பிரார்த்தித்து நிற்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
*இரண்டாவது குரு மஹா சந்நிதானம்*
*நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்*

# நல்லிணக்கம் ஏற்படட்டும்



ஒற்றுமையுடன் அனைத்து இனமக்களாலும் கொண்டாடப்படும் துர்முகி வருடத்தில் சமய விழுமிய மரபுகளையும் கலை, கலாசார விழுமியங்களையும் பேணிப்பாதுகாக்க முன்வர முயல்வோமாக. அனைத்து மதத் தலைவர்களும் தமது மதம் சார்ந்த கல்விப் போதனைகளையும், சமயப் பரப்புரைகளின் ஊடாக, நற்சிந்தனைகளையும் போதிப்பதன் மூலம் மக்கள் மனதில் தெய்வ வழிபாடுகள் மேன்மேலும் அதிகரிக்கும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

இதன் மூலம் நல்லிணக்கம் ஏற்பட்டு மக்கள் இழந்த உரிமைகள் கிடைக்கும் வருடமாக இறை பரம் பொருளைப் பிரார்த்தனை செய்வோமாக. அனைத்து இன மக்களுக்கும் புதுவருட நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

சிவஸ்ரீ. பரமேஸ்வர மனோகரக் குருக்கள்
*தலைவர், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்*

# நீதியோடு கூடிய ஒரு நிரந்தர தீர்வுக்கு புதிய ஆண்டு அழைத்துச் செல்லட்டும்

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவைக் கிறிஸ்தவர்கள் கொண்டாடும் வேளை தமிழ் – சிங்களப் புத்தாண்டு கொண்டாடப்படுவது வழமை என்றாலும் 2016ஆம் ஆண்டு உயிர்ப்பு பெருவிழா முன்பாகவே வந்துள்ளது. 2016ஆம் ஆண்டு தமிழ் – சிங்கள புத்தாண்டைக் கொண்டாடும் அனைவரையும் அவர்கள் எங்கிருந்தாலும் இவ்வேளை நினைவு கூர்ந்து அவர்கள் அனைவர்க்கும் புத்தாண்டு விழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். புதிய ஆண்டில் இவர்கள் அனைவரும் இறை அருளை நிறையப் பெற்ற நன்மனது கொண்ட மனிதர்களாக வாழ வாழ்த்துகிறோம்.

இலங்கையில் நல்லெண்ண அரசு ஒன்று உருவாகி – இலங்கை வாழ் மக்கள் அனைவரும் இலங்கை மண்ணில் சகோதர உறவுடனும் சம உரிமையுடனும் வாழவேண்டும் என்ற ஒரு எண்ணக் கரு என்றுமில்லாதவாறு இன்று தோன்றி உள்ளது. இந்நிலையில் உலகின் நான்கு பெரிய மதங்களான பௌத்தம் - இந்து - கிறிஸ்தவம் - இஸ்லாம் ஆகிய மதங்களையும் சிங்களம் – தமிழ் – முஸ்லீம் ஆகிய இனங்களையும் கொண்ட இலங்கை நாடு இங்குள்ள சமயங்களுக்கிடையேயும் இனங்களுக்கிடையேயும் அன்பையும் புரிந்துணர்வையும் விட்டுக் கொடுத்தலையும் அனுபவித்து வாழும் ஒரு நாடாக வேண்டும் என ஆசிக்கிறோம்.

எமக்கிடையே என்ன வேறுபாடுகள் இருந்தாலும் இலங்கை வாழ் மக்கள் என்ற நிலையில் இலங்கை மண்ணின் மைந்தர்கள் என்ற உறவு எம்மை எப்போதும் இணைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இனங்களையும் மதங்களையும் தாண்டி இலங்கை மண்ணின் மைந்தர்கள் என்ற பாலம் எம்மைப் பலப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

2016ஆம் ஆண்டின் உலகின் பிரபல்யமான மனிதர்களில் முதன்மையானவர் என மதிப்பிடப்பட்ட உலகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ், இனம் – மொழி – மதம் – நாடு – கலாசாரம் – வாழ்வுநிலை என்ற பல மனித எல்லைகளைத் தாண்டி இறை இரக்கத்தின் முகமாக அன்புப் பணியாற்றிய அன்னை திரேசாவை உலகம் முழுவதும் உரிமை கொண்டாடத் தகுதி பெற்ற புனிதராக இந்த இரக்கத்தின் ஆண்டில் உயர்த்தவுள்ளார் என்பது மகிழ்ச்சி தரும் விடயமாகும். எமது முதலாவது கிறிஸ்மஸ் செய்தியை 2015ஆம் ஆண்டு வெளியிட்ட போது நாம் தெரிவித்த பல கருத்துக்கள் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்பது வருத்தம் தருவதாய் இருப்பினும் சில விடயங்கள் நடைபெற்றிருக்கின்றது என்று ஆறுதற்படவே செய்கிறது.

மூன்று தசாப்த காலப் போரில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த தமிழ்மக்கள் போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் நல்லெண்ண அரசு பல விடயங்களை இன்னும் வேகமாக ஆற்ற வேண்டும் என்று எதிர் பார்ப்பது நீதியானதே. அதிலும் இயல்பு வாழ்வைத் தோற்றுவிக்கத் தேவையான விடயங்கள் வேகமாக முதலில் ஆற்றப்பட வேண்டும் என வலியுறுத்த விரும்புகிறோம்.



இடம் பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம் பல இடங்களில் நடைபெற்றாலும் அது முழுமையாக ஆற்றப்படவில்லை. தம் சொந்த மண்ணில் – சொந்த வீட்டில் வாழ முடியவில்லையே என்பது எல்லோருக்கும் வேதனை தரும் அடிப்படை விடயமாகும். பலாலி விமான நிலையம் வடபகுதியைப் பொறுத்தவரை மிக முக்கியமானதாகும். இது மேலதிக நில அபகரிப்பு இன்றி – மக்களின் நிலங்களைப் பறிக்காமல் – புனருத்தாரணம் செய்யப் படக் கூடிய வழி வகைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் அரசியற் கைதிகள் அளவுக்கு அதிகமான உடல் உளவேதனையை அனுபவித்துவிட்டார்கள். இனியும் அவர்கள் வேதனைப்பட அல்லது அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுக்க வழிசமைக்காமல் அனைவருக்கும் மனிதாபிமான அடிப்படையில் மன்னிப்பை வழங்கி விடுதலை செய்யுமாறு தமிழ் மக்கள் அனைவர் பேராலும் அன்பு வேண்டுகோள் வேண்டுகிறோம்.

முன்னாள் போராளிகளின் விடுதலையும் புனர்வாழ்வும் இங்கு விசேட கவனம் பெற வேண்டிய விடயமாகும். இவர்களின் இன்றைய நிலையினை பத்திரிகைகள் வாயிலாக அறியும் போது வேதனை அடைய வேண்டி உள்ளது. இவர்கள் மீண்டும் மதிப்புடன் வாழ ஆவன செய்யப்பட வேண்டும்.

போர்க்குற்ற விசாரணை நீதியான வகையில் நடைபெற வேண்டும் நீதி நிலை நிறுத்தப்பட வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அரசியல் யாப்பு விடயம் விசேட கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான மிக வாய்ப்பான காலம் இக்காலமேயாகும். இதனைக் கருத்திற் கொண்டு – அனைவர் கருத்தையும் பெற்று – இலங்கை நாட்டில் எல்லா மக்களும் சம உரிமையுடன் வாழ வழி சமைக்கப்பட வேண்டும்.

இரக்கத்தின் ஆண்டில் இறை இரக்கம் எம் அனைவரையும் வழிநடத்தி நீதியோடு கூடிய ஒரு நிரந்தர தீர்விற்கு அழைத்துச் செல்லட்டும்.

மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்
*யாழ். ஆயர்*

# மத, இன, மொழி, கலாசார விழுமியங்களை மதிப்போம்

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். மலரும் புதுவருடம் அனைவருக்கும் சர்வ மங்கலத்தைத் தருவதாக அமையட்டும். சிறப்பாக இவ்வருடம் சிறார்கள், மாணவர்கள், இளையோர், பெண்கள் பாதுகாப்பு வருடமாக அமையட்டும். இவர்களைப் பாதுகாப்பது எமது கடமையாக அமையட்டும். இவர்களும் வழிதவறாமல் இருக்க நாமும் வழிகாட்டுவோம். நல்லெண்ணங்களைச் சமூகத்தில் உருவாக்குவோம். அறநெறி வளர்ப்போம். இயன்றளவு பிறர் நலன் கருதி எமது பணிகளை ஆற்றுவோம். தமிழ்– சிங்கள புத்தாண்டு மலர்வது நாட்டில் மத, இன, மொழி, கலாசார விழுமியங்களை மதிப்பதாக அமையட்டும். அனைவருக்கும் புதுவருடம் நற்பொலிவுற வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.

வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள்,
*அமைப்பாளர், வீணாகான குருபீடம்,*
*சித்தன்கேணி, யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேர்ப்பவனி வரும் மருதடியாரின் திருவருள் கிடைக்க நல்லாசிகள்



சரித்திரப் பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. ஐந்து முகங்களும் பத்துக் கரங்களுமாய் கஜாசனம் எனப்படும் யானை முகம் தாங்கிய அழகிய பீடத்தில் ஆரோ கணித்து அற்புதமாய் ஆடிவந்து சித்திரத்தேரில் ஏறிவரும் மருதடியாரின் திருக்கோலம் காணக்கிடைக்காதது. சித்திரைமாதம் முதலாம் நாள் மருதடியான் தேரோட்ட நன்னாள். அடியவர்கள் எல்லோரும் தம் புதுவருட கடமைகளை முடித்துவிட்டு மருதடியான் தேர் வடம் பிடிக்க மருதடி நோக்கி அலையலையாக திரண்டு வரும் அடியவர்கள் கூட்டம் மக்கள் எல்லாம் மருதடியானே மருதடியானே என கோஷம் செய்து தேர்வடம் பிடித்து இழுத்து வருகின்ற இந்நன்நாள் எல்லோருக்குமே நல்லநாளாக அமைய வேண்டும் என ஆசி கூறி எல்லோரும் இன்புற்று வாழ புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

**அராலியூர் சிவஸ்ரீ சிவஸ்வாமிக் குருக்கள்**
**பரமேஸ்வர ஜெயகுமாரக் குருக்கள்,**
**மஹோற்சவ குருவும் தேவஸ்தான குருவும்.**

## வாழ்த்துச் செய்தி

மகிமை பொருந்திய மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் என்றால் பக்தர்கள் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் இங்கு வருகை தந்து மருதடியானின் அருளைப் பெற்றுக் கொண்டு மனநிறைவுடன் திரும்புவது வழமையான விடயம். அதுவும் விநாயகப் பெருமான் புதுவருட தினத்தில் அழகிய தேரேறி வீதி உலாவரும் அரும்காட்சியைக் காண்பதற்கு அலையலையாக ஆலயத்தின் வீதிகளில் திரண்டு நின்று தமது கஷ்டங் களை அவரிடம் கூறி, நேர்த்திக் கடன்களை நிறைவு செய்து எம்பெருமானின் அருளைப் பெற்றுச் செல்வர். புதுவருடப் பிறப் பன்று எந்தவொரு நற்காரியங்களை ஆரம்பிக்கும் ஒவ்வொருவரும் வினை தீர்க்கும் மருதடி விநாயகரிடம் வந்து அவரது பாதாரவிந்தங்களை வணங்கி அவரது ஆசிபெற்று ஆரம்பிப்பது வழமை.

இவ்வருடமும் வழமைபோல் எம்பெருமான் தேரேறி வீதி வலம் வந்து பக்தர்கள் அடியார்கள் யாவருக்கும் அருள்பாலிக்க உள்ளார்.

எனவே யாவரும் மானிப்பாய் மருதடி விநாயகரின் அருட்கடாட்சத்தைப் பெற்றுய்ய திரண்டு வருக.

**திரு. ஜனககுமார்**
**செயலாளர்,**
**யாழ்.வணிகர் கழகம், யாழ்ப்பாணம்.**

## ஆலய வரலாற்றுச் சுருக்கம்

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ் அரசர்களால் அரசாளப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் சைவ ஆலயங்களை அமைத்து வேதசிவாகமங்களையும் கற்றுணர்ந்த ஒழுக்க நெறி தவறாத சைவ அந்தணர்களை நியமித்து அத்திருக்கோயில்களில் நித்திய, நைமித்திய பூசைகளை நியமந் தவறாது செய்து வந்தனர். இத்திருத்தலங்களின் முன்னேற்றத்துக்காக சைவாபிமானிகளும், தனவந்தர்களும் அறிஞர்களும் ஆவன செய்தும் சமய வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வந்தனர். அதனால் ஆலயங்கள் எல்லாம் பெருஞ்சிறப்புற்று விளங்கின. அதேபோன்று தமிழரசர்களின் ஆதரவும் பெருமளவு கிடைத்தது. இவ்வாலயங்களுள் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமும் யோக நிஷ்டை கைவந்த சிவயோகி ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டு பூசித்து வந்த புண்ணிய ஸ்தலம் என்று ஒருவரலாறு உண்டு. அவரது நியமந்தவறாது வேதமந்திர சக்தியின் சாந்நித்தியத்தால் மருதடி விநாயகர் ஆலயம் மகத்துவமுடையதாயிற்று. பெருந்திரளென மக்கள் வந்து வணங்கி விநாயகரின் அருள் பெற்றனர். இவ் ஆலயத்தின் தென் திசையில் அமைந்த திருக்குளம் பிள்ளையார்குளம் என்னும் பெயருடையதாயிற்று என்றும் அவ்வரலாறு கூறுகின்றது. இவ்வாறாக சைவர்கள் வாழும் காலத்தில் போர்த்துக்கேயர் என்னும் பறங்கியர் இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றியதும் தமிழரசர்களின் ஆட்சி முடிவுற்றது. ஆட்சியைக் கைப்பற்றிய பறங்கியர்களால் சைவாலயங்கள் பல இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டன. கத்தோலிக்க மதத்தைத் தழுவுமாறு தமிழ் மக்களைத் துன்புறுத்தினர். கோவில்களைத் தகர்த்தால் சைவர்கள் சிவநெறியை மறந்து தங்கள் சமயத்தைத் தழுவுவார்கள் எனப் பறங்கியர்கள் எண்ணினர். அவர்கள் எண்ணியதற்கு மாறாக தமிழ் மக்கள் சிவநெறி வழிபாட்டில் ஊன்றிய பக்தி சிரத்தையுடையவராயினர். பூசைகள், பொங்கல்கள் வழிபாடுகளிலும் பறங்கியர் அறியாவண்ணம் நிகழ்த்தி வந்தனர். பறங்கியரின் ஆட்சி நெடுங்காலம் நிலைக்கவில்லை. இலங்கையின் ஆட்சியை ஒல்லாந்தர் கைப்பற்றினர். ஒல்லாந்தர் தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதில் ஊக்கம் செலுத்தாது பொருளீட்டுவதில் கண்ணாயிருந்தனர். இக்காலத்தில் தமிழ் நாட்டில் தொண்டை மண்டலத்தில் நிகழ்ந்த அரச கலகம் ஒன்றுக்கு அஞ்சிப் பல குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் பல பாகங்களில் குடியமர்ந்து வாழ்ந்தனர். அவர்களுள் தியாகராச குருக்கள் என்பவர் மானிப்பாயை அடுத்துள்ள நாவலியூரில் வைரவர் கோயில் ஒன்றில் அர்ச்சகராக நியமிக்கப்பட்டார். இப்பணியை இவர் மேற்கொள்ளும் பொழுது அவ்வூர் வாசிகள் சிலர் சைவநெறிக்கு ஒவ்வாத சில காரியங்களை கோயில் வாயிலில் செய்தனர். இச்செயலைக் காணப்பொறுக்க மாட்டாதவராய் அவ்விடத்தை விட்டகன்று கிழக்குத் திசையை நோக்கிச் சென்றார். ஓரிடத்தில் மருதமரச் சோலையும் பிள்ளையார் குளமும் இருப்பதைக் கண்டார். அவ்விடத்தில் பொங்கல், பூசைகள் நடைபெறுவதைக் கண்டார். அக்காட்சி அவரைக் கவர்ந்தது. இறைவன் திருக்குறிப்பின் பயனால் சிவயோகியார் ஒருவர் முன்னர் பூசித்து வந்த விநாயகர் ஆலயம் அவ்விடத்தில் இருந்ததை உணர்ந்தார். தான் அறிந்த திருக்குறிப்பை அங்குள்ள மக்களுக்கு எடுத்துரைத்தார். இதையறிந்த அடியார்கள் பெரும்மகிழ்ச்சியடைந்தனர். அவ்விடத்தில் மீண்டும் ஓர் ஆலயம் அமைத்து விநாயகர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்து தியாகராசக் குருக்கள் அதன் அர்ச்சகரானார். அடியார்களின் ஆதரவால் இவ் ஆலயம் மேன்மேலும் வளர்ச்சி பெற்றது. இவ்வேளை ஒல்லாந்தர் ஆட்சி முடிவடைந்து இலங்கையை ஆங்கிலேயர் கைப்பற்றி ஆட்சி நடத்தினர். ஆங்கிலேயர் கிறிஸ்து நெறியைப் பரப்புவதில் முனைப்பாக இருந்தாலும் பிறசமயத்தவரின் வழிபாட்டு சுதந்திரத்தை பிறசமயத்தவர்களுக்குக் கொடுத்தனர். அதனால் அழிந்துபோன திருத்தலங்கள் மீண்டும் நிர்மாணிக்கப்பட்டன. தனவந்தர்கள், அடியார்கள் திருப்பணி வேலைகளைச் செய்வதில் மிக ஆர்வங் கொண்டனர். இதேபோன்று மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமும் நிர்மாணிக்கப்பட்டது. தியாகராஜ குருக்களுக்குப் பின்பு ஆதிசைவ அந்தணர்கள் அர்ச்சகர்களால் நியமிக்கப்பட்டு நித்திய நைமித்திய பூசைகளும் திருவிழாக்களும் மிகச் சிறப்பாக நடைபெறலாயின. ஆண்டுதோறும் தேர்த்திருவிழா மகோற்சவம் சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பன்று நிகழ்ந்து வருகின்றது. ஆலயத்தின் திருப்பணி வேலைகள் காலத்துக்குக்காலம் பொது மக்களாலும் தனவந்தர்களாலும் செய்யப்பட்டு வந்தன. எனினும் இவ்வாலயம் சில தனிப்பட்ட நபர்களினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1982ஆம் ஆண்டில் தனிநபர் நிர்வாகம் நீங்கியது. கோயிலை நிர்வகிப்பதற்கு வழிபடுவோர் சங்கம் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் அனுசரணையுடன் தெரிவு செய்யப்படும் தர்மகர்த்தா சபையை அமைத்து வழிபடுவோர் சங்கத்தின் முழுமையான ஆதரவுடன் ஆலயத்தின் முன்னேற்றத்தை நோக்கி செயற்பட்டு வருகின்றனர்.

"ஐங்கரனே ஈசன் திருமகனே
தங்கு மருதடி வாழ் தற்பரனே - திங்களணி
செஞ்சடைத்தானே திருமால் மருகனே
நெஞ்சத்தில் வாழ்ந்திருப்பாய் நீ"

## வாழ்த்துச் செய்தி



சகல வளங்களும் அமைந்த மானிப்பாய் நகரில் அருளாட்சி செய்யும் மருதடி விநாயகரின் தேர் உற்சவத்தைக் காண வரும் அடியார்கள், பக்தர்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. வேண்டுவார் வேண்டுவதை உவந்தளிக்கும் மருதடி விநாயகப் பெருமான் புதுவருடப் பிறப்பன்று அழகிய ரதத்தில் வீதி உலாவந்து அருள்பாலிக்கின்றார். தன்னைத் தேடி வரும் அடியவர்களின் துயர் நீக்கி அருள் சுரக்கும் மானிப்பாய் மருதடி விநாயகப் பெருமானின் திருவருட் கடாட்சம் சகலருக்கும் கிடைக்க வேண்டுமென அருளாசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். இன்று நிகழும் மானிநகர் மருதடி விநாயகப் பெருமானின் திருத்தேர் பவனி விழா சிறப்புற விக்கினம் தீர்க்கும் மருதடியானின் பாதாரவிந்தங்களை வணங்கி உளமாறப் பிரார்த்தித்து ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர**
**பரமாச்சார்ய சுவாமிகள்**
**நல்லை ஆதீன முதல்வர்.**

## வாழ்த்துச் செய்தி



இலங்கையில் குறிப்பிட்டு பெயர் சொல்லக் கூடிய சிறப்பு மிக்க ஆலயங்களில் மானிப்பாய் மருதடி ஆலயமும் ஒன்று. தமிழ் சிங்கள புது வருஷப் பிறப்பு அன்று சித்திரைத் தேரோட்டம் நிகழ்வது தனிச்சிறப்பு இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் ஒன்று கூடும் புனித இடமாகிய பிள்ளையார் திடலில் மருத மர நிழலில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானின் தேரோட்டம் இன்று இடம் பெறுகின்றது.

விநாச கால விபரீத புத்திகள் அகன்று புதிய புது வருஷத்தில் சகல ஆன்ம கோடிகளுக்கும் நல் வாழ்வு கிடைக்க மருதடி விநாயகர் அருள்புரிய வேண்டி வாழ்த்துகின்றேன்.

**நவாலியூர் க.கௌரிகாந்தன்**
**ஆலய தர்மகர்த்தா தலைவர்**

## விளம்பர அனுசரணை



**Tharraneiy** Printers & Arts

**Rajee** Proprietor



No.541, K.K.S.Road,
Manohara Theator View, Jaffna.
Mobile: 078 914 1288
Mail: rajeetharu@gmail.com

**அனுசரணை:**
**மானிப்பாய் மருதடி விநாயகர்**
**மெய் அடியார்கள்**

**S.N.T.SERVICE STATION**



Hot Line No.077 232 3000
021 2225353
Jaffna Road, Manipay.
E.mail.sntservice123@gmail.com

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
பிரசவ தாய்மார், குழந்தைகளுக்கான அனைத்து விதமான பொருள்களையும்
பிள்ளையார் ஸ்ரோர்ஸில் பெற்றுக்கொள்ளலாம்.
அழகுசாதனப் பொருள்கள்,பிளாஸ்ரிக் பொருள்கள், எவர்சில்வர் பொருள்கள்,
பித்தளை, அலுமினியப் பொருள்கள், RPCO மெத்தைகள், கதிரைகள், மரக்கறி
வகைகள், இறைச்சிவகைகள், Ice cream வகைகள், பாடசாலை
உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், பழவகைகள்
021 225 5148 யாழ்வீதி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள், பெயின்ற் வகைகள், PVC பைப், மாபிள் வகைகள் என்பவற்றுடன் துவிச்சக்கர வண்டிகள், எலெக்ரிக் பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றிடலாம்.

மனோகரன் ஹாட்வெயார்

சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி. தொ.பே : 021 226 4192

அன்பர்கள்,ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

ATF அருண் புடவையகம் & அழகுமாடம்

சாறி. சல்வார். ஆண்களுக்கான சேட், ரீசேட் மற்றும் சிறுவர்களுக்கான சகல ஆடைவகைகள்

பிரதான வீதி, நெல்லியடி.
021 226 2857

அன்பர்கள்,ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

BLU BERRY CREAM HOUSE

சகல விதமான சிற்றுண்டி வகைகளுக்கும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்

Chavakachcheri Road, Manthikai.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

டுர்ஜா நகைப்பூங்கா

தரமான 22 கரட் தங்க நகைகளைப் பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்

DORJA
NAGAIP POONNKA

ஓடர் நகைகளை குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளலாம்.

கொடிகாமம் வீதி, நெல்லியடி.
077 952 5392

FLC
FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French·
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1079 மாணவர்கள் French கற்றுள்ளனர்....

No. 40, பலாலி வீதி, இலுப்பையடி.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 23.04.16 சனி 08 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 25.04.16 Mon@ 4pm.

ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

மாறியோ கிறீம் ஹவுஸ்

சித்திரைப் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு 14.04.2016, 15.04.2016 தினங்களில் 20 வீத கழிவு வழங்கப்படும்.

எமது நிறுவனத்துக்கு சமுகமளித்த குடும்ப உறுப்பினர்களுக்கு லொத்தர் மூலம் குலுக்கல் செய்யப்படும்.

- முதலாம் பரிசு ரூபா 1000/=
- இரண்டாம் பரிசு ரூபா 500/=
- மூன்றாம் பரிசு ரூபா 250/=
- மேலும் பத்து ஆறுதல் பரிசுகள் தலா 100/=

ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்கள், வாகனச்சாரதிகள், காசாளர்கள், விநியோகிப்பவர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவம், தகைமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

இல.63, பிரதான வீதி, நெல்லியடி கரவெட்டி.
தொடர்பு: 076 837 3190

கன்னாதிட்டி சொவ்ட்லொஜிக் இன் இனிய புதுவருட நல் வாழ்த்துக்கள்

SAMSUNG 32" LED TV
3 Year Warranty
Special Discount Rs.5000/-
Free
Rs.54,999/=
D/P-11,000/=
Monthly-3,234/=*15M

PANASONIC 32" LED TV
3 Year Warranty
Special Discount Rs.5000/-
Gift Voucher Rs.4000/-
Rs.54,999/=
D/P-11,000/=
Monthly-3,234/=*15M

PANASONCI 24" LED TV
3 Year Warranty
Free
Rs.36,999/=
D/P-7,500/=
Monthly-1,975/=*15M

SAMSUNG GALAXY
S series
A series
J series

DEll Laptop
i3 Processor,
500GB HD,
4GB DDR3 Ram
EXTERNAL DVD ROM
Special Discount Rs.10000/-
Rs.79,999/=
D/P-15,000/=
Monthly-4,553/=*15M

ACER Laptop
6th Generation i3 Processor, 1TB HD, 4GB DDR3 Ram
Special Discount Rs.12000/-
Rs.77,999/=
D/P-14,000/=
Monthly-4,484/=*15M

MIDEA WASHING MACHINE
6.0 Kg Capacity
Air Dry, Magic Filter
Attractive Design
Rs.23,999/=
D/P-4,000/=
Monthly-1,893/=*12M

PANASONIC HOME THEATER
1000W
5.1ch Output, USB
BLUTOOTH, HDMI
Dolby Digital
Special Discount Rs.4000/-
Rs.49,999/=
D/P-10,000/=
Monthly-3,552/=*12M

10 Year Warranty
SAMSUNG Refrigerator
Free
Rs.85,999/=
D/P-25,000/=
Monthly-4,698/=*15M

Gift Voucher Rs.2000/-
SAMSUNG Refrigerator
Rs.44,999/=
D/P-10,000/=
Monthly-2,716/=*15M

FREE
WHIRLPOOL MICRO WAVE
Rs.15,999/=

Inverter 10 Year Warranty
Panasonic Air Conditioner
Special Discount Rs.11000/-
10000BTU Inverter Type
Nanoe-G technology
Intelligent eco sensor
Rs.118,999/=
D/P-35,000/=
Monthly-7,348/=*12M

தொடர்புகளுக்கு நாடுங்கள் - இல-63, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
அழையுங்கள் - 021-5671108, 077-2444366, 077-9451271, 077-0388278

softlogic
BEST IN THE BUSINESS

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

கன்னாதிட்டி சிவன் கோவில் அருகாமையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ES Printers

GiftZ

Poster / Notice
Lable / Wedding
Card / Bag Print /
Award / Frame Item /
Batch / Vehicle Brand /
T-Shirt / Cap
ID Card / Key Tag
Book Mark /
Pen Print /
Book Printing /
Woodent Print

உங்கள் உறவினர்களுக்கு
அன்பளிப்பு பொருள்களை
எம் இணையத்தளம் ஊடாக
அனுப்பி மகிழுங்கள்

www.esgiftz.com
info@esgiftz.com



சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.



#357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com



அனைவருக்கும் சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்

# DMI
COMPUTER EDUCATION

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

## DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சாவல்ஸ் ஹோல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.111, A9 வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |



அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

# ஸ்ரீ வரத விநாயகர்

கட்டடப்பொருள்கள் விற்பனை நிலையம் & போக்குவரத்துச் சேவை

கூரை ஓடுகள், மட்பாண்ட பொருள்கள், பூச்சாடிகள், கட்டடப் பொருள்களையும் மற்றும் போக்குவரத்துச் சேவைகளையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## வரத விநாயகர் பாம் சிற்றி



கால்நடை மருந்துகள்,
தீவனங்கள், பண்ணை உபகரணங்கள்,
கோழிக்குஞ்சுகள், உள்நாட்டு, வெளிநாட்டு
செல்லப்பிராணிகளை எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.



சிவப்பிரகாச ம.வி. அருகில்,
தும்பளை வீதி, பருத்தித்துறை.
T.P: 0774147463,
0212056130.





புத்தாண்டில்
பரிசு மழை
பொழியட்டும்...

வீடெங்கும் ஒளிவெள்ளம்
பரவட்டும்



இந்தப் புத்தாண்டிலும் ராசியான
கைகளால் கொடுக்கல் வாங்கல்களை
மேற்கொண்டு பரிசு பெறுங்கள்.

சேமிப்புக் கணக்கொன்றில் ரூபா 5,000/-
அல்லது அதற்கு மேல் வைப்பு செய்யும்
அனைவருக்கும் பெறுமதியான பரிசு உண்டு.

வருடம் முழுவதும்
முழு இல்லத்துக்கும் ஒளியூட்டி...

டோர்ச் லைட்டுடன் இணைந்த டேபிள் லேம்ப்.
பற்றரி போடவேண்டியதும் இல்லை.

மேலும் புத்தாண்டில் மக்கள் வங்கியுடன்
கொடுக்கல் வாங்கல் செய்யும்
அனைவருக்கும் பரிசு.

... புத்தாண்டு கொடுக்கல்
வாங்கல்களுக்காக
ஏப்ரல் மாதம் 15ஆம் வெள்ளிக்கிழமை
காலை 08.30 மணி தொடக்கம் அனைத்து
மக்கள் வங்கிக் கிளைகளும்
உங்களுக்காக திறந்திருக்கும்

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

011 2 481 553
011 2 481 482 / 532
www.peoplesbank.lk









சித்திரைப் புத்தாண்டு தின நல்வாழ்த்துக்களை
அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தெரிவித்துக் கொள்வதில்
மன மகிழ்ச்சி அடைகின்றனர்.

# EAGLE PAINT SHOP

NO :- 24 கொடிகாமம் வீதி
நெல்லியடி
தொ.பே:- 0212261226
0771492439

No:-19 பிரதான வீதி
பண்டத்தரிப்பு
0213120615
0771492439


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்துவாக வாழ்வோம்! இந்து தர்மம் காப்போம்!!

**எதிர்வரும் சித்திரைத்திங்கள் முதலாம் நாள் துர்முகி வருடம் (வாக்கிய பஞ்சாங்கப்படி 2016.04.03 மாலை 6.36 மணிக்கும் - திருக்கணித பஞ்சாங்கப்படி இரவு 7.48 மணிக்கும்) உதயமாகிறது. மூன்று தசாப்தங்களாக நமது மக்கள் பட்டுவரும் துயர்வாழ்வுக்கு இன்னமும் விடிவு கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் அவர்களை விட்டுவிலகவில்லை.**

மீண்டும் எமது மக்களின் வாழ்வை ஒளிமயமானதாக மாற்ற வேண்டும் என்ற நன்நோக்கில் சமூக, சமய, கல்விப் பணிகளை முழு மூச்சுடன் ஆற்றவேண்டிய கடப்பாட்டில், இலங்கை இந்து மன்ற அமைப்புக்களினதும், ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியமான 'அகில இலங்கை இந்து மாமன்றம்' உள்ளது. இதற்காக நாடு முழுவதும் சிவ தொண்டர் அணிச்சேவை, ஆன்மிகக் கருத்தரங்குகள், ஆன்மிக வெளியீடுகள், மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசப் புத்தகங்கள் வழங்குதல், இடம்பெயர்ந்து அல்லலுறும் எமது மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் போன்ற சேவைகளை இந்து மாமன்றம் மிகுந்த உத்வேகத்துடன் முன்னகர்த்திவருகின்றது. அதேநேரம் நல்லாட்சி அரசும் இது தொடர்பான தனது முன்னெடுப்புக்களை பெரிய அளவில் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென மாமன்றம் இந்நாளில் கோரிக்கை விடுக்கின்றது.

இவைதவிர அகதி முகாம்களில் வாழும் எமது மக்கள் சொந்த இடங்களில் வாழ முடியாத துயர்மிகு பிரச்சினையாகும். இதனையிட்டு நாம் காலத்துக்குக் காலம் அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்தும் மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு அவை நிறைவேற்றப்பட்டதாகக் கூற முடியாதுள்ளது. சில பகுதிகளில் காணிகள் விடுவிக்கப்படும் அதேவேளை வேறு பகுதிகளில் படைகளின் முகாம் விஸ்தரிப்புக்கென பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப் படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவற்றை நோக்கும் போது நல்லாட்சி அரசும் மனச்சுத்தியுடன் இதனைச் செய்யவில்லையா என எண்ணத் தோன்றுகிறது.

இதேபோல் மீள்குடியமர்ந்தோருக்கான வீடு, குடிதண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் கூடத் திருப்திகரமாக முன்னெடுக்கப்படவில்லையென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். மக்களின் பிரச்சனைகளை மனபூர்வமாக தீர்க்க அரசும், மாகாண சபையும் சேர்ந்து வலுவான திட்டங்களை உடன் வகுக்க வேண்டும், என இந்து மாமன்றம் வலியுறுத்துகின்றது. இதே போல் மீள்குடியமர்ந்த மக்களுக்கான குடிதண்ணீர்ப்பிரச்சனை தீர்க்கப்படவில்லை. இதற்கு அரசு முக்கிய இடம் கொடுத்துத் தீர்க்க வேண்டுமென நாம் கேட்டுக்கொள்கின்றோம். மிகவும் வறிய, பின்தங்கிய மக்களுக்காக அகில இலங்கை இந்து மாமன்றம் ஒரு சில இடங்களில் குழாய்க் கிணறுகள் போன்றவற்றை அமைக்க நிதியுதவிகளை செய்துவருகிறது. எனினும் எமது நிதிநிலைமைக்கேற்ப நாம் எடுக்கும் நடவடிக்கைகள் அந்த மக்களின் ஒரு சிறுவிகிதத்தினரின் தேவையையும் பூர்த்தி செய்யுமா என்பது கேள்விக் குறியே. எனவே மத்திய, மாகாண அரசுகளே இவற்றுக்கு முழுமையான தீர்வை வழங்கவேண்டும்.

மேலும் வடக்கு-கிழக்கு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள கலாச்சாரச் சீரழிவை நோக்கும்போது இந்து மாமன்றத்தால் வாளாவிருக்கமுடியவில்லை. இளம் பெண்பிள்ளைகள், குழந்தைகள் ஆகியோர் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்படுவது எமக்கு அன்றாடச் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. நாம் மனித சமூகமா அல்லது மனிதசமூகமென்ற பெயரில் நடமாடும் மிருகங்களா என எண்ணத் தோன்றுகின்றது.

இன்றைய கலாசார சீரழிவுக்குப் போதைவஸ்துப் பாவனையும் ஒரு காரணமென மனநோய்நிபுணர்கள் கூறிவருகின்றனர். போதைவஸ்து என்பது முன்னர் எமது சமுதாயம் அறிந்திராத ஒரு சொல்லாக இருந்தது. இன்று அது சகல மக்களிடையேயும் ஊடுருவி முக்கியமாக பாடசாலை மாணவர்களை இளம்வயதிலேயே நோயாளிகளாக மாற்றிவிடும் கொடுமையை எங்கு சென்று முறையிடுவது எனத்தெரியவில்லை. போதைவஸ்து வர்த்தகத்தால் எத்தனையோ முதலாளிமார் குறுக்கு வழியில் கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் அதேவேளை இளம் சமூகத்தை அது சின்னாபின்னப்படுத்தியுள்ளதை இந்து மாமன்றம் சுட்டிக் காட்டுகின்றது. இதனை ஒழிப்பதற்காகவே பாடசாலைகள்தோறும் சிவ தொண்டர் அணிகளை ஸ்தாபிப்பது, மாணவர்களிடையே சமய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொள்வது, போன்ற நடவடிக்கைகளை இந்து மாமன்றம் எடுத்துவருகின்றது. எனினும் எமது எதிர்ப்பு நடவடிக்கைகள் போதைவஸ்தை முற்றாக ஒழித்து விடுமெனக் கூறமுடியாது. இதற்காக நல்லாட்சி அரசு திட்டவட்டமான, கடினமான எதிர் நடவடிக்கைகளை எடுத்து எமது இளம் சந்ததியினரை (வடக்கு கிழக்கு உட்பட) காப்பாற்ற வேண்டுமென இப்புத்தாண்டில் அரசைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மேலும் சிறைச்சாலைகளில் வாடும் எமது அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திவரும் இந்து மாமன்றம், இது தொடர்பாக அவர்களை விடுதலை செய்யுங்கள் அல்லது உடன் வழக்கைப் பதிவு செய்து நீதியின்முன் நிறுத்துங்கள் என அடிக்கடி அரசைக்கேட்டுவந்துள்ளோம். எனினும் இவர்கள் தொடர்பாக அரசின் நடவடிக்கை எமக்குத் திருப்தியளிப்பதாக இல்லை. மீண்டும் இப்புத்தாண்டில் நாம் அரசைக் கேட்டுக்கொள்வது, யாதெனில், ஒன்றில் அவர்களைப் பொது மன்னிப்பில் விடுவியுங்கள், அல்லது வழக்கைப்பதிவு செய்து நீதிமன்றத்துக்கு முன் நிறுத்துங்கள். எமது மக்கள் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாட முடியாத நிலையில், இருக்கும்போது எமது உடன்பிறப்புக்களின் விமோசனத்துக்காக இப்புத்தாண்டில் சகல கேளிக்கைகளையும் கொண்டாட்டங்களையும் தவிர்த்து இறை வழிபாட்டில் ஈடுபடுமாறு சகலரையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இப்புத்தாண்டிலாவது நாம் மேற்சொன்ன எமது மக்களின் அத்தியாவசியப் பிரச்சனைகளைத் தீர்த்துவைக்க வேண்டுமென இந்நல்லாட்சி அரசை வற்புறுத்துவதோடு, தமிழ்பிரதிநிதிகளுடன் இணைந்து எம்மக்களுக்கான நீதியானதும், சகலரும் ஏற்கும் வகையிலுமான ஒரு அரசியல் தீர்வையும் வழங்குவதன் மூலம் எமது தாய்நாட்டை சொர்க்க பூமியாக்க சகல இனத்தவரின் பங்களிப்பையும் பெற துர்முகி வருடத்திலாவது ஒளிபிறக்க வேண்டுமென எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

**கந்தையா நீலகண்டன்**
**சி. தில்லைநடராஜா**
**தலைவர் , பொதுச் செயலாளர்**

# அனைவரது வாழ்விலும் நலமும் வளமும், பெருகட்டும்



மன்மத வருடம் விடைபெற்று இன்று புதிய துர்முகி வருடம் பிறக்கின்றது. மன்மத வருடத்தில் நாம் எதிர்பார்த்த விடயங்கள் எதுவும் நிறைவேறாமல் கானல் நீராகிப் போய்விட்டது.

சென்ற ஆண்டு நல்ல மழை பெய்யும் என்று கூறினோம். அது போலவே பெய்தது. இப்போதாவது அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக்கொண்டு நடந்தால் நல்லது. மனித மனதில் சிறு சிறு போராட்டங்கள் உண்டு. சிறுதுளி பெருவெள்ளம் ஆவது போல், சிறுசிறு போராட்டங்கள் பெரிய போராட்டமாக மாறும். எந்த விஞ்ஞானியாலும் இயற்கையைக் கட்டுப்படுத்த இயலாது. எந்த விஞ்ஞானியாலும் மழை பெய்விக்க முடியாது. எந்த விஞ்ஞானியாலும் மழையை நிறுத்த முடியாது. எந்த விஞ்ஞானியாலும் நில அதிர்வுகளைத் தடுக்க முடியாது.

கடல் அலை கரை ஏறாமல் வந்து போவது போல, வாழ்க்கையிலும் இன்பம், துன்பம் வந்து போகும். சாப்பிட சுவையாக இருக்கிறது என்பதற்காக இனிப்பையே சாப்பிட்டுக் கொண்டிருந்தால் உடல் என்ன ஆகும்? உடலுக்கு கசப்பும் தேவை. வாழ்க்கையில் இன்பம் மட்டுமே இருக்காது துன்பமும் வரும். அதை எதிர்த்து நின்று தைரியமாக வாழும் போது தான் வாழ்வின் அனுபவங்கள் கிடைக்கும். மனிதனின் பூரணத்துவம் அதில்தான் அடங்கி உள்ளது.

இந்த ஆண்டு எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். பொறாமையைக் கைவிட வேண்டும். தேங்காயைக் கூட பொறுமையாக உடைத்தால்தான் நம் கைக்குள்ளேயே இருக்கும். சிதறுகாய் அடிப்பது போல் உடைத்தால் காய் சிதறுவது போல், பொறுமையாக யோசித்து செய்யாத காரியத்தின் பயன்களும் சிதறுகாய் போல சிதறித்தான் போகும்.

பொய் வைக்கோல் கன்றுக் குட்டியை வைத்து பசுவிடம் பால் கறப்பது போல், பொய், பித்தலாட்டம் செய்து பொய் முக பாவனைகளால் மற்றவர்களை ஏமாற்றும் துர்க்குணம் கூடாது. தெய்வம் பஞ்சபூதம், இயற்கை இவற்றை நம்ப வேண்டும். மற்றவர்கள் சொல்வதற்காகவும், நிர்ப்பந்தத்துக்காகவும், ஆன்மிகத்தில் ஈடுபடாமல் தனக்குத்தானே உணர்ந்து தன்னைத்தானே உணர்ந்து ஆன்மிக சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தெய்வ சிந்தனைகளைத் தவிர்த்து விட்டு, சகல உயிர்களின் மேல் அன்பு செலுத்தி, தன்னால் இயன்ற தான, தர்மங்களைச் செய்து, வருங்கால வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய வளமான வாழ்வு அனைவருக்கும் அமைய இந்த தமிழ்ப் புத்தாண்டு நாளில் அனைவரையும் ஆசீர்வதிக்கிறோம்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
"ஸ்ரீசுபஸ்வரம்"

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (சமாதான நீதிவான்)**
**இந்துமதகுரு பீடாதிபதி, பிரதமகுரு**
**வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை.**

# சிறைக் கைதிகளின் விடுதலை வேண்டி புத்தாண்டில் அனைவரும் பிரார்த்திப்போம்

நாம் இந்தவருட புத்தாண்டை ஆடம்பரங்கள் ஏதுமின்றி சிறையில் வாடும் எம் உடன் பிறப்புக்களின் விடுதலை வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போமாக.

எமது தமிழினம் கடந்த மூன்று தசாப்தங்களில் அனுபவித்த போர் கொடூர அழிவுகளை எவரும் எளிதில் மறந்திடலாகாது. போர் வடுக்கள் எம் ஒவ்வொருவர் மனங்களிலும் பசுமரத்தாணி போன்று ஆழமாகப் பதிந்துள்ளன. இன்று போர் மௌனித்துவிட்டது. இயல்புநிலை திரும்பிவிட்டது. ஆனால், சந்தேகத்தின் பேரில் அரசியல் கைதிகள் என்ற போர்வையில் கைது செய்யப்பட்ட எமது உடன்பிறப்புக்கள் போர் முடிந்தும் ஏழு வருடங்களாகக் காரணங்கள் ஏதுமின்றி சிறையில் வாடுகின்றனர்.

நல்லாட்சி அரசு என்று சர்வதேசத்தின் முன் போலிமுகத்திரையிட்டுக் காட்டும் இந்த அரசு, உண்மையில் நல்லாட்சி அரசாக இருந்தால் கைதிகளை உடன் விடுதலை செய்யவேண்டும்.

உண்மையில் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தராகச் செயற்பட்டவர்கள், தமது உயிருக்கஞ்சி அரச அடிவருடிகளாக மாறி இன்றைக்கு அவர்கள் சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருகின்றார்கள். ஆனால், விடுதலைப் புலிகளுடன் தொடர்பில்லாத பலர் அரசியல் கைதிகள் என்ற போலி முத் திரையிடப்பட்டு இன்று சிறைகளில் வாடுவது எமக்கு வேதனை யளிக்கின்றது. துன்பம் அகன்று இன்பம் நிறைந்த ஆண்டாக இந்தப் புத்தாண்டு அனைவருக்கும் அமையவேண்டும். தமிழர்கள் தம் வாழ்வில் இதுவரை பட்ட துன்பங்கள் அகலவேண்டும். அனைவர் மனதிலும் சந்தோசம் மலரவேண்டும்.

தமிழர்கள் கொடிய போரினால் துன்பப்பட்டு துவண்டு பல துயரங்களை மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகத் தம் வாழ்வில் எதிர்கொண்டுள்ளனர். போர் முடிவடைந்து பல ஆண்டுகள் ஆனாலும் மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போன்று கடத்தல்களும், கற்பழிப்புக்களும், கொலைகளும், கொள்ளைகளும், மிரட்டல்களும் அவ்வப்போது அரங்கேறிக் கொண்டே இருக்கின்றன.

பிறக்கின்ற புத்தாண்டிலிருந்தாவது இவை அனைத்தும் நிறுத்தப்படவேண்டும். மக்கள் தம் வாழ்வில் பட்ட துன்ப, துயரங்கள் அகன்று, நிம்மதிப்பெரு மூச்சுடன் வாழ வேண்டும். மக்கள் மனங்களைத் தாக்கியுள்ள போர் பீதி முற்றாக அகலவேண்டும். அனைவரும் இன்புற்று மகிழ்வுடன் வாழவும் இன்பம் நிறைந்த ஆண்டாக இப்புத்தாண்டு அமையவேண்டும் என்றும் இறைவனைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**தி.பிரகாஷ், முன்னாள் தவிசாளர் ,**
**வலி.தெற்கு பிரதேசசபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் மண்ணில் நல்ல சூழல் உருவாகட்டும்



துர்முகி வருடம் அனைவருக்கும் சிறப்பாக அமைய துர்க்காதேவியை வேண்டுகிறேன். புதிய ஆண்டில் புதிய சிந்தனைகளோடு அனைவரும் மகிழ்ச்சியாக வாழ ஒன்றுபட்டுப் பிரார்த்திப்போம். தாய், தந்தை, ஆசிரியர், மூத்தோர் அனைவரது ஆசியையும் பெற்று நல்ல வண்ணம் வாழ முயற்சி செய்வோம். எமது எண்ணத்திலுள்ள நல்லியல்புகளைப் பெருக்குவோம். எம்மிடமுள்ள குறைபாடுகளை நாமே விலக்குவோம். முயற்சியுடைய நல்ல மனிதர்களாக வாழ்வதற்கு முற்படுவோம். சோம்பலைத் தவிர்த்து ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ள காரியங்களுக்குப் பயன்படுத்துவோம். பிறரைக் குற்றம் சாட்டுவதைத் தவிர்த்து நாமாகவே நல்ல பாதையில் பயணம் செய்வோம்.எம் மண்ணில் பொழுதை அவப்பொழுதாகக் கழிப்பவர்களை மாற்றி தவப்பொழுதாகக் கருதச் செய்வோம். வருடப்பிறப்புத் திருநாளில் எம்மை வாழ வைத்தவர்களையும், எமது வாழ்வுக்கு உறுதுணையாக உதவியவர்களையம் நன்றியோடு நினைந்து போற்றுவோம். திருக்கோயில்களுக்குக் குடும்பமாகச் சென்று திருவருளை வேண்டுவோம். உறவினர்களை உபசரித்து உறவின் வலிமையைப் பெருக்குவோம். நண்பர்களின் தோழமையை இந்த நாளில் வலிமையாக்குவோம். பரந்த சிந்தனைகளோடு எம் பணியைச் செய்வோம். விடைபெறும் மன்மத வருடத்தில் எமக்குக் கிடைத்த வெற்றிகளுக்காக நன்றியோடு பிரார்த்திப்போம். விடைபெறும் ஆண்டு தந்த படிப்பினைகளை உணர்ந்து செயற்படுவோம். கோபத்தையும், பாவத்தையும் வளர்க்காமல் சந்தோசத்தை வளர்ப்போம். மன்னித்தல் என்ற மாண்பைப் பேணுவோம். எம் மண்ணில் நல்ல சூழல் உருவாகும் என்று நம்புவோம். அல்லலுறும் அப்பாவிகளுக்காக ஆண்டவனை மன்றாடுவோம். நோய்களால் படுக்கையில் இருக்கும் அன்பு உள்ளங்களுக்காக அர்ச்சிப்போம். சிறைக்கூடங்களிலும், அகதி முகாம்களிலும் விடிவுக்காகக் காத்து இருப்பவர்களுக்காக இறையருளைவேண்டுவோம். எங்கள் பிள்ளை கள் மாசற்றவர்களாக வாழ்வதற்கு நாம் வழி காட்டுவோம். அனைவரும் அர்ப் பணிப்புள்ளவர்களாகத் தத்தம் கடமையைச் செய்ய திடசங்கற்பம் கொள்வோம். அனைவரது வாழ்வும் மகிழ்ச்சி பொங்க மீண்டும் பிரார்த்தனை செய்வோம். அனைவருக்கும் எனது இதயபூர்வமான புத்தாண்டுவாழ்த்துக்களையும், ஆசிகளையும்தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

## புத்தாண்டே விடுதலை தந்திடு



பிறக்கின்ற இந்த தமிழ்ப் புத்தாண்டு தமிழ் மக்களது விடுதலையை உறுதிப்படுத்திட வேண்டும். கடந்து விட்ட எமது வரலாற்றின் நடந்து வந்த பாதைகளைக் கனவுகளோடும், களம் பல தந்த என்றுமே மாறாத வடுக் களோடும் என்றும் பயணித்திடும் உத்தமர் களின் தியாகம் வென்றிடட்டும்.

நாம் நம்பி வாக்களித்து இன்று வரையில் எதிர்பார்த்திருக்கும் நல்லாட்சி மெய்ப்பட்டிடவும், ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக சிந்திய உதிரத்துக்கு உறுதியாக அரசியல் தீர்வு கிடைத்திடவும், பேரினவாதத்தின் இரும்புச் சுவர்களுக்குள் இறுகப்பூட்டப்பட்டுள்ள விடுதலை விரும்பிகள் விடுபடட்டும்.

முட்கம்பிகளால் இறுக்கப்பட்டுள்ள எம்மவர் மருதநிலங்கள் விடுபட்டிடவும், எல்லை யிடப்பட்டு தடுக்கப்பட்டுள்ள எங்கள் நெய்தல் நிலங்கள் எம்மவர்களின் கரங்களுக்குள் வந்திடவும், எரிக்கப்பட்ட எங்கள் முல்லைகள் செழித்திடவும், எங்கள் குறிஞ்சி நிலம் மீண்டும் எம் தலைநகராக மிளிர்ந்திடவும், காணாமற் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகளை தேடி நித்தமும் கண்ணீர் சிந்திடும் துயர் மிக்க உள்ளங்கள் ஆறுதல் அடைந்திடவும், எங்கள் காவிய நாயகர்களை தடையின்றி நினைவுகூர்ந்திட வழிபிறந்திடட்டும்.இந்த நன்னாளில் இறைவனைப் பிரார்த்திப்பதோடு, நாம் தமிழர் என்றஉணர்வோடுஓயாதுஎம்பாதங்கள் இலட்சியம் நோக்கி நகர இந்நாளில் ஒன்றிணைந்து சபதம் எடுத்திடுவோம்.

**திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்,**
**முன்னாள் தவிசாளர்,**
**வலி.மேற்கு பிரதேச சபை.**

## சித்திரைத் திங்களே சீருடன் வருவாய்

தமிழ் சிங்கள புத்தாண்டாகிய துர்முகி ஆண்டு சீருடனும் சிறப்புடனும் மலர்கின்றது.

புத்தாண்டுப் பண்டிகையானது பொதுவாகத் தமிழ் சிங்கள மக்களின் கலை, கலாசார, ஆன்மிகப் பாரம்பரியங்களை எடுத்துக் காட்டுவதைக் காணமுடிகின்றது.

இரு இனத்தவர்களுக்கும் பொதுவான விழா என்பதால் மக்கள் மத்தியில் ஒற்றுமையைப் பிரதிபலிக்கின்றது. ஆன்மிக சிந்தனைகள் மக்களை ஒன்று சேர்க்கும் தன்மையது.

இன்றைய காலகட்டத்தில் இரு இனத்தவர்களும் சுதந்திர உணர்வுடன் நாட்டில் நிரந்தர அமைதி, சமாதானம் வெளிவர ஏதிலிகளாக வாழும் எம்மவர்கள், உறவுகள் குறித்து ஆலயங் கள், விழாக்கள் அனைத்திலும் இறைவனைப் பிரார்த்தித்து கையேந்துங்கள். அடுத்து வரும் காலங்களில் எமது ஒற்றுமைச் சிந்தையால் எம்மை நாமே ஆளுகின்ற சுதந்திர வாழ்வை அனுபவிக்க முடியும். பார்வதி பரமேஸ்வரன் அருளால் அனைத்து மக்க ளும் அன்பு நிறைந்த ஆத்மீக ஒற்றுமை, சாந்தி, சமாதான, சுதந்திர வாழ்வை வாழ்வதற்கு ஆசி கூறு கின்றேன்.

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
இவையே எமக்கு காலத்தின் தேவையாகும்.

**சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக்**
**குருக்கள், கோப்பாய்.**

## துட்ட குணங்களைக் களைந்து தூய்மை மனத்தைப் பெறுவோம்

பங்குனி நிறைவு பெறுகின்ற வேளை சித்திரைப்புத்தாண்டு சிரித்தபடி வந்து நிற்கும். சித்திரைப் புத்தாண்டை வரவேற்று நிற்க எவருமே சிறப்பாக பலவற்றையும் செய்து நிற்பர். பங்குனி போய் சித்திரை வந்தால் பத்திரிகை வந்திடும் கல்யாணப் பத்திரிகை வந்திடும். எனும் பாட்டை ஞாபகப்படுத்திப் பார்த்தால் சித்திரையின் சிறப்பு எல்லோருக்கும் விளங்கிவிடும். மங்கலமான விடயங்களும் மனதுக்கு உகந்த மகிழ்ச்சியான பலவும் சித்திரை பிறந்தவுடன் வந்துவிடும் எனும் கருத்து இந்தப் பாட்டின் மூலம் மிகவும் நயமாக எடுத்துக் காட்டப்படுகிறது.

சித்திரைத் திருவிழா இலங்கையில் பொதுவான விழாவாகக் கொண்டாடப்படுகிறது. பௌத்த சிங்கள மக்களும்சைவத் தமிழ் மக்களும் ஒன்றுபட்டு சித்திரையைக் கொண்டாடுகின்றமை வர வேற்கத் தக்க ஒன்றாகும்.

இனங்களையும் மதங்களையும் இணைக்கும் இந்தச் சித்திரைப் பிறப்பு எல்லோருக்கும் இன்பம் தருவதாக அமைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

சித்திரையில் மருத்துநீர் வைத்து நீராடி பின் புத்தாடை உடுத்து கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்வது இன்றியமையாததாகும்.

வயதுக்கு மூத்தவரை வணங்கி அவர்களிடம் இருந்து கைவிசேடமும் ஆசியும் பெற்றுக் கொள்வது மிக அவசியமாகும்.

புதிய வருடமாகிய துர்முகி வருடத்தில் துட்ட குணங்களைக் களைந்து தூய்மை மனத்தை யாவருக்கும் பெறவேண்டி எல்லாம் வல்ல பரம்பொருளை மன, மொழி, மெய்களால் பிரார்த்தித்து யாவருக்கும் எல்லா வளமும் வாழ்வும் கிடைக்க வேண்டும் என வாழ்த்தி ஆசி கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சித்திரையில் சிரித்திடுவோம், சிந்தனையை வளர்த்திடுவோம்
அத்தனைபேர் மனங்களிலும் அன்பு வரச் செய்திடுவோம்
சத்தியத்தைக் கடைப்பிடிப்போம் சன்மார்க்க வழி செல்வோம்
சித்திரையைச் சிறப்பாக்க சேர்ந்து நிற்போம் வாருங்கள்.

**பிரம்மஸ்ரீ சோ.கேதீஸ்வரக் குருக்கள்**
**ஸ்ரீ பத்தினாச்சி அம்மன் ஆலய ஸ்தானிகர், பாணன்குள நாச்சியம்மன் ஆலயகுரு சர்வதேச இந்து குருமார் ஒன்றியச் செயலாளர்**

## புதுவருடத்திலாவது சுதந்திரமாக வாழும் சூழ்நிலை உருவாகட்டும்

மலரும் புத்தாண்டில் தமிழ் மக் களின் நீண்டகாலப் பிரச்சினை கள் தீர்க்கப்பட்டு சுதந்திர புருஷர்களாக வாழும் சூழ்நிலை ஏற்பட வேறுபாடுகளை மறந்து சகல அரசியற் கட்சிகளும், மதத் தலைவர்களும் செயற்பட வேண்டும் என இந்தப் புனித நாளில் கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த காலத்தில் நடைபெற்ற போரில் பாதிக்கப்பட்ட மக் களின் நலன்பேணும் செயற் றிட்டங் களை முன்னெடுப்போமாக. போதைப்பொருள் பாவனை, கொலை, களவு, பாலியல் வன் முறை போன்ற பாதகச் செயல்கள் இல்லாத புது யுகத்தில் எம் மனைவரும் வாழ இறைவன் அருள்புரியப் பிரார்த்திப்போமாக.

நீதி, நேர்மை, சமத்துவம் போன்ற மகோன்னதமான கோட்பாடு கள் என்றும் தளராது நின்று நிலவ எம்மை ஆட்சி செய்யும் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானைப் பிரார்த் தித்து எமது புதுவருட வாழ்த்துக் களைத் தெரிவிக்கின்றோம்.

**சி.சக்திகிரீவன்.**
**செயலாளர்,**
**இந்து சமயப் பேரவை.**

## துர்முகி ஆண்டில் துன்பங்கள் போகட்டும்

மலர்ந்திருக்கும் துர்முகி ஆண்டில், மக்களது துன்ப துயரங்கள் நீங்கி, அனைவரது வாழ்வும் வளமாக உயரவும், சிறப்பு மிக்கதாகவும் சொந்த இடங்களில் அமரவும் சிங்கள, தமிழ் இனங்களுக்கிடையே நல்லுறவு மேம்படவும் மலர்ந்திருக்கும் புதிய ஆண்டு எல்லோரது வாழ்வும் சிறக்க இறைவனைப் பிரார்த்தித்து, வாழ்த்துக்கள் ஆசிகள் கூறி அமைகின்றோம்.

**சிவஸ்ரீ யோ.சுபாஸ்கர குருக்கள்**
**பிரதம குரு, அத்தியடிப் பிள்ளையார் கோயில்**

## சமாதானமும் சமத்துவமும் நிறைந்த வாழ்வு கிட்டுவதாக

இன்று தமிழ்ப் புதுவருடப் பிறப்பு. இன்று பிறந்திருக்கும் துர்முகி ஆண்டானது தமிழ் மக்கள் வாழ்விலே ஒரு விடி யலை உருவாக்கி, எல்லோரும் இன்புற்றிருக்க வகை செய்ய வேண்டும் என்று இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இன்று ஈழம் வாழ் மக்கள் அனைவரும் துன்பங்கள் நீங்கப்பெற்று இன்ப வாழ்வில் திளைத்திருக்க எல்லாம் வல்லவண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் அருள்புரிய வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

இன்று முதலாக அனைத்து மக்களும் இனமத வேறுபாடின்றி ஒன்றுபட்டு, ஒற்றுமையாக சமாதானமும் சமத்துவமும் நிறைந்த நல்வாழ்வில் இன்பமும் மகிழ்ச்சியும் கைவரப்பெற்று சந்தோசமாக வாழவேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றோம். அவனருளாலே அவன்தாள் வணங்கி என்றபடி எல்லோரும் இறைநம்பிக்கையுடன் சமாதான சகவாழ்வில் திளைத்திருக்க அவனருளையே நாடி நிற்போமாக.

எல்லோரும் இன்புற்றிருக்க அருள் கிடைக் கட்டும். மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**தெய்வத் தமிழ்ச் சுடர்**
**கலாபூசணம் இராசையா ஸ்ரீதரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சிங்களப் புத்தாண்டு நினைவூட்டும் சமூக, கலாசார வரலாற்று முக்கியத்துவம்

கலாபூசணம்
தம்பிராசா பரமலிங்கம்

எமது நாட்டில் சித்திரை வருடப் பிறப்பு தொன்று தொட்டு கொண்டாடப்படும் முக்கிய திருநாளாகும். ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் பிறக்கும் புதிய ஆண்டுக்கு பஞ்சாங்கக் கணிப்பில் ஒவ்வொரு பெயர்கள் சூட்டப்பட்டு அழைக்கப்படுவது மரபாகப் பேணப்பட்டும் வந்துள்ளது.
அதேவேளை தமிழர்களது திகதி ஆண் டாக திருவள்ளுவர் ஆண்டு குறிப்பிடப்பட்டும் வருகிறது.
இந்தத் திருவள்ளுவர் ஆண்டு தைப் பொங்கல் பண்டிகையுடன் முன்னோரால் கணிக்கப்பட்டு வந்துள்ளதையும் அவதானிக்கலாம். உதாரணமாக இந்த வருடம் 2047 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதுபோன்றே மன்மத (2016) வருடம் எதிர்வரும் சித்திரை முதலாம் திகதி துர்முகி (2016) வருடமாக மலர்கிறது. இவ்விதம் உலகக் கூறுகளில் வாழ்கின்ற பல்வேறு மொழி, கலாசார பரிமாணங்களைக் கொண்ட மனித இனங்கள் வெவ்வேறுபட்ட காலங்களில் தத்தமது வருடப் பிறப்புக்களை நிர்ணயித்தும் திகதி அட்டவணைகளை வகுத்தும் கொண்டுள்ளமை கண்கூடு.
இவ்வாறு கொண்டாடப்பட்டு வருகின்ற திருநாள்கள் மக்களது தொழில், வருவாய் சார்ந்தும் ஓய்வு காலங்களைக் குறித்தும் கால நிலைகளுக்கு ஏற்பவும் நிர்ணயம் பெற்றவைகளாகவும் அமைந்திருக்கலாமென்பது அறிஞர்களின் கருத்து.
அதனாலோ உலகைக் கட்டியாண்ட ஐரோப்பியர்களால் புகுத்தப்பட்ட ஜனவரி முதலாம் திகதி வருகின்ற வருடப்பிறப்பு இருக்கவே இருக்க உலகம் வாழ் இனங்களில் குறிப்பிடத்தக்க ஒருசில இனங்கள் தத்தமக்கே உரியனவாக வருடங்களைத் தொடர்ந்தும் கொண்டாடி அனுசரித்துப் பேணி வருகின்றன.

**தமிழ், சிங்கள வருடம்**

இலங்கையைப் பொறுத்தமட்டில் பல்வேறு இனங்கள் வாழ்கின்ற நாடாகினும் ஆட்சியை நடத்தும் பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களும் சித்திரை வருடப்பிறப்பையே புதிய (அளுத்) வருடமாக (அவுறுத்) பன்னெடுங்காலமாகக் கொண்டாடி வருகின்றனர்.
ஆயினும் ஜனவரி முதலாம் திகதியைப் புதுவருடமாகக் கொண்டாடி வருகின்ற பறங்கியர் மற்றும் கத்தோலிக்கர்களான தமிழர், சிங்களவர் தவிர முகாரம் மாதம் முதலாம் திகதியை புதிய வருடமாகக் கொண்டாடும் முஸ்லிம் மக்களும் பல்லாண்டு காலமாக இலங்கையில் வாழ்ந்து தத்தமது வருடங்களைக் கொண்டாடி வருவதும் வரலாற்று நிகழ்வுகளே!
எனினும் சித்திரை முதலாம் திகதி மலரும் புதிய ஆண்டை எமது நாட்டில் வாழும் இருவேறு மொழி, கலாசாரக் கூறுகளைக் கொண்ட தமிழர்களும், சிங்களவர்களும் கொண்டாடி வருவது ஐக்கியத்தின் எடுத்துக்காட்டாகவே பார்க்க வேண்டும்.
சித்திரை வருடப் பிறப்பு இவ்விதம் பன்னூற்றாண்டு காலங்களாக தமிழ், சிங்கள மக்களிடையே ஐக்கியத்தின் சின்னமாகத் தொடர்கின்றபோதும் அறுபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் பிளவு தோன்றி ஆட்டிப்படைத்து வருவதையும் அவதானிக்கலாம்.



எவ்வாறாக இருப்பினும் சித்திரை வருடம் இலங்கையில் தமிழ்சிங்கள வருடம் என்றே சுட்டப்படுவதும் வழமை. இந்த இணைப்பு இருமொழி பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இலங்கைத் தீவில் இரு இனங்களுக்கும் ஐக்கியத்தைப் பேண தோற்றுவித்துக் கொண்டதாகவும் கருதுவதற்கு இடமுண்டு.

**சமூக வரலாற்று முக்கியத்துவம்**

சித்திரை வருடத்தை மக்கள் கொண்டாட ஆரம்பித்ததற்கும் சமூக வரலாற்றுப் பின்னணி அமைந்திருக்க வேண்டும். சித்திரை மாதத்தில் சூரிய பகவான் உச்சத்தில் சஞ்சரிக்கும் நிகழ்வு வருடங்கள் தோறும் நடைபெற்று வருகின்றன.
சூரிய பகவான் மேட இராசிக்குள் பிரவேசிக்கும் காலம் இந்தச் சித்திரை மாதங்களிலேயே நிகழ்கின்றது. அந்தக் காலத்தையே இந்து மதத்தைச் சார்ந்த தமிழர் பண்டு தொட்டுப் புதுவருடமாகக் கொண்டாடியும் வந்துள்ளனர்.
சித்திரை வருடப்பிறப்பன்று அதிகாலை நித்திரை விட்டெழும் மக்கள் மருத்துநீர் தலைக்கு வைத்துத் தோய்ந்து புதிய ஆடை உடுத்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடுவர்.
வீடு வந்ததும் சூரிய பகவானுக்குப் பொங்கல் செய்து படைத்து தாமும் உண்டு சுற்றத் தாருக்கும் வழங்கி மகிழ்ந்திருப்பர். மேலும் அன்றைய தினம் நிர்ணயிக்கப்பட்ட சுபவேளைகளில் கைவிசேடம் வழங்கியும், வாங்கியும் புதிய வருட தினத்தைச் செழுமைப் படுத்திக் கொள்வர்.
இவ்வாறு இந்தத் தினத்தில் மருத்து நீர் வைத்துத் தோய்தல் என்னும் வழக்கத்தை நோக்கினால் வேனில் காலம் மக்கள் மத்தியில் பல்வேறு பட்ட நோய்களைத் தோற்றுவித்து விடக்கூடிய காலம் என்பதால் அந்த வழக்கத்தைப் புதுவருட தினத்தன்று மேற்கொள்வதன் மூலம் அந்த வருடம் முழுவதும் மக்கள் தேகஆரோக்கியத்துடன் வாழ வகுத்துக் கொண்ட சமூக நடைமுறை வரலாற்றையும் அவதானித்துக் கொள்ளலாம்.

**கலாசார வரலாற்று முக்கியத்துவம்**

நான்கு, ஐந்து தசாப்தங்களுக்கு முன்பாகச் சித்திரை வருடப்பிறப்பு தினங்களைக் கொண்டாடி வந்தது போன்று இந்தக் காலங்களில் காண்பது அரிதாகிப் போனது. வருடப்பிறப்புக் கொண்டாட்டங்கள் ஒருவார காலம் நிகழ்கின்ற வழக்கம் அந்தக் காலங்களில் பரவலாகக் காணப்பட்டது.
இந்த நிலைமை தமிழ்க் கிராமங்கள் மாத்திரம் அல்லாமல் சிங்களக் கிராமங்களிலும் சித்திரை வருடப் பிறப்பை ஒருவார காலம் கொண்டாடுவதும் வழக்கமாக இருந்து வந்தது.
அந்தக் காலங்களில் ஒரு வீட்டில் இருந்து இன்னொரு வீட்டுக்கும், பழக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கும் உணவுப் பண்டங்களைப் பரிமாறிக் கொள்வதையும் காணலாம்.
அவற்றுள் கித்துள் பாணி மாவுடன் கலந்து தயாரித்த அல்வா வகைகள் மற்றும் கிரிபத் என்னும் பாற்சோறு தளிசைகள், பழவகைகள் பறிமாறப்படுவதைச் சிங்களக் கிராமங்களில் பரக்கக் காணக் கூடும்.
அவ்வாறே தமிழ்க் கிராமங்களில் சித்திரைப் புத்தாண்டில் பரிமாறப்பட்டதாகக் கூறப்படும் பச்சடி என்னும் உப உணவுப் பொருள் வாழ்க்கைத் தத்துவத்தைப் போதிப்பதாக அமைந்ததாகவும் அறிஞர் பெருமக்கள் தெரிவித்து உள்ளனர்.
மாம்பழம், புளி, சர்க்கரையுடன் வேப்பம்பூ சேர்த்து அரைத்து எடுக்கும் பச்சடி கசப்பு, புளிப்பு, இனிப்பு கலந்ததே மனித வாழ்க்கை என்னும் தத்துவத்தை உணர்த்தும் விதம் வருடப்பிறப்புக் கொண்டாட்டங்களை முன்னிட்டு வீடுகளுக்கு வருகை தரும் உறவினர் நண்பர்களுக்குப் பரிமாறப்பட்டதாகவும் அறிய முடிகிறது.
அவ்விதமே எம்மிடையில் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடும் முகமாக நடைபெற்று வந்த விளையாட்டுக்கள், போட்டி நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்வுகள் போன்றன சான்றாகவும் விளங்குகின்றன.
சித்திரையைத் தொடர்ந்து வசந்த காலம் தொடங்குவதால் வசந்தன் கூத்து நடிக்கப்பட்டு வந்த காலங்களும் இருந்தன. மேலும் கோலாட்டம், கும்மி போன்ற ஆண், பெண்களுக்கான ஆடல் வகைகளும் சிலப்பதிகாரம் கூறும் கானல் வரி பாடல்களும் அந்தக் காலங்களில் புதிய வருடப்பிறப்பு தினத்தை மேன்மேலும் செழுமைப்படுத்தி வந்தன.

> சித்திரை வருடப்பிறப்பன்று அதிகாலை நித்திரை விட்டெழும் மக்கள் மருத்துநீர் தலைக்கு வைத்துத் தோய்ந்து புதிய ஆடை உடுத்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடுவர். வீடு வந்ததும் சூரிய பகவானுக்குப் பொங்கல் செய்து படைத்து தாமும் உண்டு சுற்றத் தாருக்கும் வழங்கி மகிழ்ந்திருப்பர்.

## துர்முகிப் புத்தாண்டே தமிழர் தம் துயரங்கள் போக்கிட வருக!

புத்தாண்டுகள் பல பல கண்டோம்
ஜய வருடமது வந்து சென்றது ஜயம் ஏதும் எமக்கில்லை
மன்மதப் புத்தாண்டும் மலர்ந்து வந்ததும் பயனில்லை எம்மவர்க்கு
மலருகின்ற துர்முகிப் புத்தாண்டே
மங்கலங்கள் தருவாயா?
புதிய நம்பிக்கையுடன் உம்மை வரவேற்கிறோம்
புதிய விடிவொன்றை எம்மக்களுக்குத் தந்துவிடு
மலர்ந்து வா மக்கள் மனங்களில் நல் மாற்றத்தைக் கொண்டு வா?
புத்தாண்டு தமிழர் தம் வாழ்வோடு ஒன்றிய
பண்டைய கலாசாரப் பண்பாட்டுக் கொண்டாட்டம்
மருத்து நீர் தலையில் தேய்த்து, தோய்ந்து
புத்தாடை அணிந்து குடும்ப உறவுகளுடன் ஆலயம் செல்லுதலும்
புத்தாண்டுதனில் தந்தை, தாய், குரு, பெரியோரை மதித்தலும்
புத்தாண்டு தனில் புதுப்புது வகைப் பலகாரங்கள் உண்டு மகிழ்தலும்,
புத்தாண்டு தனில் கைவிசேடம் பெறும் களிப்பும் ஒருபுறம்
புத்தாண்டுதனில் மக்கள் எல்லோரும் வாழ்வில் நிம்மதியாக வாழ்ந்திட
மனிதநேயம் காப்போம்
பொல்லாத காலம் போனதென, நல்லகாலம் பிறந்ததென வாழ்வோம்
துர்முகிப் புத்தாண்டே தமிழர் தம்வாழ்வில்
துயரங்கள் போக்கிட வருக!

– நயினை விசு.இராசநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்திரைப் பூம்பாவாய் மங்கையர் படுமிடர் கெடவரம் கொடு

> சமூகங்கள் மத்தியில் ஒற்றுமையையும், நல்லுறவையும் வளர்க்க வழி சொல்லும் விளையாட்டுக்கள், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இந்நாளில் இடம் பெறுதலைக் காணலாம். பண்டிகைத் தினங்கள், அன்பு, பாசம், பரிவு, நல்லெண்ணம், பொறுமை, கூடிவாழ்தல் போன்ற நல்ல பண்பொழுக்கத்துக்கும் வழி செய்வன.

கந்த தியாகராசா

இன்று துர்முகி என்னும் நாமத்துடன் புதுவருடம் மலர்கின்றது. சிறியவர் முதல் பெரியவர் வரை புத்தாடை புனைந்து கொண்டாடிக் குதூகலிக்கும் பண்டிகைத் திருநாள். ஒவ்வோர் ஆண்டும் சித்திரைத் திங்கள் முதல் நாளை புத்தாண்டாக தமிழ் இந்துக்களும் பௌத்த சிங்களவர்களும் கொண்டாடும் ஒரேயொரு பண்டிகையாகத் திகழ்கின்றது. பிரபவ முதல் அட்சய ஈறாகவுள்ள அறுபது வருடங்களில் முப்பதாவது வருடமாகத் துர்முகி வருடம் இன்று மலர்கின்றது. இந்த நன்னாளில் இந்துப் பெருமக்கள் மருத்து நீர் சிரசில் வைத்து தூய சிந்தையராய் நன்னீராடி புதிய ஆடைகள் புனைந்து இல்லத்தின் பூசை அறையில் உள்ள சுவாமிகளை தூபதீபம் காட்டி மலர்களும் தூவி பயபக்தியுடன் பணிந்தேத்துவர். பழவர்க்கம், தாம்பூலம், நிறைகுடம், கண்ணாடி முதலான மங்கலப் பொருள்களைத் தரிசித்து பெரியாரை வணங்கி, பெற்றோரைப் போற்றி, குலதெய்வ வழிபாடியற்ற திருக்கோயில்களை நாடுவர். நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டு புனிதம் நிறை புண்ணிய தலமாய் ஆலயங்கள் மிளிரும். பூரண அலங்காரமாய், ஜெகஜோதியாய் திகழும் சுவாமிக்கு விசேட பூசைகள் இடம்பெறும். புதுவருடம் பிறக்கும் சுப வேளையில் ஆலயங்கள் எங்ஙனும் விசேட பூசைகள் மணியொலிக்க, சங்கொலிக்க, மந்திர மொலிக்க, பண்ணொலிக்க மங்கல வாத்தியம் முழங்க தீபாஞ்சலி, புஸ்பாஞ்சலி இடம்பெற்று சுவாமி திருவீதி உலா வரும் திருக்கோலக் காட்சி இடம்பெறும். புதுப்பொலிவோடு விளங்கும் சுவாமிகளைத் தரிசித்து அர்ச்சனைகளும் செய்து நிறைமனதோடு மனை வாசல் ஏறுவர். குடும்பத்தவர் கூடி இனிய பட்சணங் களையுண்டு மகிழ்வெய்துவர். சுபவேளையில் கைவிசேடம் பரிமாறலும் புதுக் கணக்குப் பதிதலும், வித்தியாரம்பமும், சினேக தரிசனமும் விருந்து பசாரமும் இந்நாளில் இடம்பெறும். வழமையும் காலம் காலமாய் தொடரும் சம்பவங்களாகும்.
சமூகங்கள் மத்தியில் ஒற்றுமையையும், நல்லுறவையும் வளர்க்க வழி சொல்லும் விளையாட்டுக்கள் கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இந்நாளில் இடம் பெறுதலைக் காணலாம். பண்டிகைத் தினங்கள், அன்பு, பாசம், பரிவு, நல்லெண்ணம், பொறுமை, கூடிவாழ்தல் போன்ற நல்ல பண்பொழுக்கத்துக்கும் வழி செய்வன.
வசந்தகாலமிதே, இன்ப நாளிதே, இனியநாளிதே, இந்தப் புனித நாளுக்கு முதல்நாளில் பௌத்த சிங்கள மக்கள் புதுவருடத்தை வரவேற்கக் கூடுவர். பெண்கள் சேர்ந்து வட்டமாய் இருந்து பேரிகை அடித்து ஓசையெழுப்பியும் பாடியும் புதுவருடத்தை வரவேற்பர். புத்தாண்டிலன்று வீடு வரும் உறவினர்களை நண்பர்களை இன்முகம் காட்டி வெற்றிலை வழங்கி வரவேற்று இன்சொல் பேசி இருக்கையில் அமர்த்தி, இனிய தின் பண்டங்களைப் பரிமாறி கொண்டாடி மகிழ்வர். சிங்கள பௌத்தர் கொண்டாடும் ஒரே யொரு பண்டிகைத் தினம் சித்திரைப் புதுவருடமே. சித்திரைப் புத்தாண்டு சூரிய அசைவுக்கு ஏற்புடைய பெருநாள். கணித நுகர்வை வல்லுனர்களான எம்முன்னோர் சூரியன் மேட இராசியல் இருந்து மீன இராசி வரை சஞ்சரிக்கும் காலத்தை பன்னிரு மாதங்களாகக் கணித்தனர். சித்திரை தொடக்கம் பங்குனி ஈறாகவுள்ள மாதங் களையும் ஓராண்டாக வகுத்துக் கொண்ட முறையே சௌரமானம் என்றானது. சூரியன் தென்திசையில் இருந்து வடதிசை நோக்கி மேட இராசிக்குச் செல்லும் சித்திரைத் திங்கள் முதல் நாளை புத்தாண்டு தினமாகக் கொண்டாடும் வழக்கம் பண்டுதொட்டு நிலவுகின்றது. அதுவே வழமையாகிப் போனது. இயற்கையைப் பணிந்து அதினோடு ஒன்றி வாழ்வதில் பெருமை கண்டவர்கள் எம் மூதாதையர். அதனால் சூரியன் ஆற்றும் பெரு நன்மைக்கு நன்றி சொல்லவும், புன்னகை பூத்து புதுமைகள் பல சுமந்து வரும் சுந்தரச் செல்வியாம் சித்திரை மகளை வரவேற்றும் மனையின் வாசலில் கோலமிட்டு பூரண கும்பம் வைத்துப் பொங்கி படைத்து தீபதூபம் காட்டி வழிபட்டு இனிய பொங்கலைச் சுற்றம் சூழ பகிர்ந்துண்டு போற்றி மகிழ்வர்.
சூரியன் வடதிசைப் பயணத்தை மேற்கொள்ளும் சித்திரை மாதம் முதல் நாளில் ஆலவாய் அழகியாய் போற்றப் படுகின்ற மதுரை மீனாட்சியம்மன் கர்ப்பக் கிரகத்துக்கு நேர்உச்சியில் நின்று கடந்து செல்லும் சுபநாளும் இந்நாளே. இந்தப் புதுவருடப் புண்ணிய நாளில்தான் நான் முகனும் தன் படைத்தல் தொழிலை ஆரம்பித்தான் என்ற கதையும் ஒன்றுண்டு. இன்னோரன்ன சிறந்த சம்பவங்களைத் தன்னகத்தே கொண்டு சித்திரைப் புத்தாண்டு இந்துக்களின் பெரு நாளாகத் திகழ்கின்றது.
சித்திரை மாதாவை சிரம் தாழ்த்தி வரவேற்கும் மாந்தர் இன்றைய இந்த இனிய நாளில் மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் எனச் சபதம் செய்ய வேண்டியவர்களாகின்றனர். சமூகத்தைச் சீரழிக்கும் சிறுமைக் குணங்களைத் தூக்கித் தூர வீச வேண்டும். பெண்ணின்றி அமையாது உலகு என்று சொல்லுமளவுக்கு பெண்களைச் பற்றிச் சிந்திப்பது அவசியமாகின்றது. இன்று மனங்களை வாட்டும் பெண்கள் பற்றிய செய்திகள் ஒருபுறம். பெண்ணியத்தின் பெருமையைப் பேசும் எழுச்சிக் குரல்கள் மறுபுறம் விடுதலை வேண்டிய போராட்டம் இன்னோர் புறம். பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளைக் கொளுத்தி எரிக்கக் கண்டனப் பேரணிகள் எல்லாம் மகளிர் அமைப்புக்களால் முன்னெடுக்கப்படுகின்றன. திறமையால் இங்கு மேல் நிலை சேர்வோம். தீய பண்டை நிகழ்ச்சிகள் தேய்ப்போம் என்று பெண்களுக்காகக் குரல் கொடுத்த பாரதி பெண்ணுக்கு விடுதலை யென்றிங்கோர் நீதி பிறப்பித்தேன் .
அதற்குரிய பெற்றி கேட்பீர் மண்ணில் எவ்வுயிரும் தெய்வம் என்றால் மனையாளும் தெய்வமன்றோ மதி கெட்டீரே நீதியெனக் கொண்டார் வீட்டு மனை யாளும் கூட தெய்வத்தை யொப்பவள் அதுவே உண்மையுமாம் என உரைத்தார்.
அன்பு, அடக்கம், பொறுமை, இரக்கம், துணிவு, வசீகரம் என்னும் பண்புகள் தாய்மைக்கே உரியது. மென்மைக் குணம் படைத் தவளாயினும் ஆண்மையைக் காட்டிலும் பெண்மை வலியது. எதனையும் சாதிக்கும் சக்தி மிக்கது. பெண்களின் மாண்பை அன் றேயறிந்த எம் முன்னோர் இயற்கையையும் அன்னையென வாழ்த்தினர். ஐஸ்வரியங்களை அள்ளி வழங்கும் ஐந்திணை நிலங்களையும் தாயெனப் பணிந்தான். புவன மாதாவெனப் போற்றிப் பூரித்துப் போனவன் எங்கும் எதிரும் தாயைக் கண்டனர். ஆய கலைகள் அனைத்துக்கும் சரஸ்வதியே தாய் என வரித்து, செல்வச் செழிப்புக்கு செல்வ இலட்சுமியைத் தாயாக்கி, விலைபோகா வீரத்துக்கும் ஆற்றலுக்கும் சக்தியைத் தாயாக்கிப் பணிந்தவன் இயற்கையையும் அன்னையெனப் போற்றினான். தாயாய், தாரமாய், சகோதரியாய், தோழியாய், சேவகியாய் குடும்பத்தின் நலனுக்குத் தன்னை அர்ப்பணித்துக் குடும்ப வண்டியை இழுத்துச் செல்ல இயந்திரம் போல நடமாடுபவள் பெண். பெண்ணுக்கு ஞானத்தை வைத்தால் புவி பேணி வளர்த்திடும் [illegible] இன்னும் ஓர் உயர்வான வாக்கியம். இன்றைய பெண்களின் எழுச்சி, அவர்களின் ஆளுமை பெருகி உள்ளது.
அன்று இல்லறம் என்னும் கூட்டுக்குள் இருந்த பெண் வான் வெளியில் வலம் வந்தமையானது பெண்ணின் தைரியத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு. சிறந்த கலைஞராய் இலக்கிய வாதிகளாய் உத்தியோகத்தரால் விளையாட்டு வீராங்கனைகளாய் அரசியல்வாதிகளாய் நீதித் துறையிலும் சிறந்து தம் திறமைகளை வெளிக்காட்டி சமூகத்தில் தனித்துவ அடையாளங்களை நிரூபித்து மேல் நிலையில் உலாவரும் பெண்களை இன்று காணலாம். பால் நிலைச்சமத்துவம் வேண்டி பெண்கள் மத்தியில் விழிப்புணர்வும் விடுதலை வேட்கையும் ஆணாதிக்கத்தில் இருந்து மீளவும் பெண்ணிலை வாதங்களும் சமூக அமைப்புக்களும் வரையறுக்கப்பட்ட வாழ்வியலும் தடைக்கற்களாகவே உள்ளன. விடுதலை வேட்கையுந்த புரட்சிக் கவி பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆண்களின் அற்பத்திற்கு சாவுமணியடிக்க துணிந்தவன். பட்டங்கள் பெறுவதும் சட்டங்க்ள் ஆள்வதும் பாரினில் பெண்கள் நிகழ்த்த வந்தோம் எட்டும் அறிவினில் ஆணுகிங்கே பெண் இழைப்பில்லைக் காண் என வீரமுரசம் கொட்டியவன் மகாகவி பாரதி. அன்று பாரதி மூட்டிய புரட்சிக்கனல் மாதரை இழிவுசெய்யும் மடமையை எரித்து நிற்கின்றது. ஆகவே வன்முறைகள் அற்ற சமுதாயத்தில் அச்சமின்றி மாதர் குலம் வாழ இந்தப் புண்ணிய நன்னாளில் உறுதி பூண்டு விடுவோம்; வழி சமைப்போம். நெறி முறை வாழ வாழ்த்துவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரை நாயகியே! சித்திகள் தரவே வருக

மீசாலையூர் கமலா

சூரிய பகவான் உக்கிரம் கொண்டு,
பாரினை வேக வைத்து நிற்கையில்,
துர்முகி நாமம் சூடிக் கொண்டு,
எம்மிடையே எழுந்து வருகின்ற
சித்திரை நங்காய்! இத்தரையில்,
நித்தமும் நலங்கள் தரவே வருக!

நங்காய் நினது நாமம்,
எங்கள் மனங்களை நெருடிட வைத்தாலும்
சங்கம் வளர்த்த செம்மொழியால்
நம்பிக்கையோடு பாமாலை தொடுத்து
சித்திரையாளே உனக்குப் போடுகின்றோம்
நாநிலம் செழித்திட நன்மைகள் புரிவாயென்றே

தீமை புரிபவர்களை நல்லோராக்கிட
நல்லோரை யாவர்க்கும் உதவிட வைக்க
மாநிலமே மகிழ்வில் திளைத்து
நின் வரைவைக் கொண்டாட
நிலத்தினில் எழுந்து வருபவளே
சிறப்புகள் யாவையும் தரவே வருக!

நின் வருகைக்காய் மாதமாய்
ஆர்ப்பரித்து ஆயத்தங்கள் செய்தோமே
சாலைகள், சந்திகள், மூலை முடுக்கு எங்ஙணுமே
சித்திரையாளே உன்னை வரவேற்கும் கதைகளே
வருக! வருக! சித்திரை நாயகியே!
நமக்குச் சித்திகள் யாவையும் தரவே வருக!

# வரதராஜப் பெருமாளுக்கு நடந்ததை மறந்துவிடக் கூடாது விக்னேஸ்வரன்

## எச்சரிக்கின்றார் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஏப். 14
வரதராஜப்பெருமாளுக்கும் வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கும் கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதை க.வி.விக்கினேஸ்வரன் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது சிறந்ததாகும். – இவ்வாறு பொது எதிரணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையால் வெளியிடப்பட்ட தீர்வுத் திட்ட வரைவு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

தேசிய பிரச்சினைக்கான தீர்வானது அனைத்து தரப்பினராலும் கலந்துரையாடப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டிய விடயமாகும். இரண்டு தரப்புக்கள் மட்டும் பேச்சுக்கள் நடத்தி விட்டு, ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து அந்த இணக்கப்பாட்டை ஏனைய அனைத்துக் கட்சிகள் மீதும் திணிக்க முடியாது. அதில் நாங்கள் மிகவும் உறுதியாக – இருக்கின்றோம்.

அரசு இந்த விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டை வெளியிடாமல் இருக்கின்ற அதே வேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சி இடம்பெறுகின்ற வட மாகாண சபையில் அதன் முதலமைச்சர் ஏதேதோ செய்து கொண்டிருக்கின்றார். அண்மையில் அவர் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்த வரைவு ஒன்றை வெளியிட்டிருந்தார். வட மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஆட்சி செய்து வருகின்றது. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தலைவராக சம்பந்தன் இருக்கின்றபோது வடக்கு முதல்வர் க.வி.விக்கினேஸ்வரன் எவ்வாறு தீர்வுத் திட்டங்களை முன்வைக்க முடியும்?

> வரதராஜப்பெருமாளுக்கும் வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கும் கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதை க.வி.விக்கினேஸ்வரன் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது சிறந்ததாகும். வரதராஜப்பெருமாள் இவ்வாறு செயற்பட்டபோது அன்று என்ன நடந்தது என்பதை எவரும் மறந்து விடக்கூடாது.


முன்னாள் வட – கிழக்கு முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் போன்று செயற்பட வேண்டாமென க.வி.விக்கினேஸ்வரனுக்கு நாம் கூறுகின்றோம். வரதராஜப் பெருமாளுக்கும் வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கும் கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதை க.வி.விக்கினேஸ்வரன் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது சிறந்ததாகும். வரதராஜப்பெருமாள் இவ்வாறு செயற்பட்ட போது அன்று என்ன நடந்தது என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

வரதராஜப்பெருமாளின் அறிவிப்புக்கள் விடயத்தில் அன்று ஜனாதிபதியாக இருந்தவர் வடக்கு – கிழக்கு மாகாண சபையை என்ன செய்தார் என்பதை அனைவரும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

கடந்த காலத்தில் இனவாதிகள் மேற்கொண்ட செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர 30 வருடங்கள் தேவைப்பட்டன. எனவே இதற்குப்பின்னரும்இவ்வாறுசெயற்படுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது – என்றார். (ற–5)

# இலங்கை – இந்தியா பாலம் தொடர்பில் பேச்சு எதுவும் இதுவரை நடக்கவில்லை

## அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 14
இலங்கைக்கும் – இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைப்பது தொடர்பாக எந்தவிதமான பேச்சும் இதுவரையில் இலங்கை அரசுடன் முன்னெடுக்கப்படவில்லை. இந்த நிலையில் இந்திய மத்திய போக்குவரத்து அமைச்சர் நிட்டின் கட்காரி இரு நாடுகளுக்கு இடையில் பாலம் அமைப்பது குறித்து தகவல்களை தெரிவிப்பது அர்த்தமற்றது என்று அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்தார்.

இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு பாலம் அமைப்பது தொடர்பில் இந்திய மத்திய போக்குவரத்து அமைச்சர் நிட்டின் கட்காரி, இந்திய நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும்பல்வேறுசந்தர்ப்பங்களில் கருத்து தெரிவித்திருந்தார். புதுடில்லியில் சர்வதேச ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதும் இலங்கைக்கும் – இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைப்பது தொடர்பில் அவர் தெளிவுப்படுத்தியிருந்தார்.

இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு பாலம் அமைப்பது தொடர்பில் இரு நாடுகளும் விரைவில் ஒப்பந்தங்களை கைச்சாத்திட உள்ளது என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த திட்டத்துக்கான நிதியை வழங்க முன்வந்துள்ளது என்றும் இந்திய மத்திய அமைச்சர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பிரதமர் மோடி தலைமையில் இன்று புதுடில்லியில் நடைபெறவுள்ள இந்தியாவின் முதலாவது கடல்சார் உச்சி மாநாட்டில் இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு பாலம் அமைப்பது தொடர்பில் முக்கிய கவ்னம் செலுத்தப்பட உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இலங்கைக்கும் – இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைப்பது தொடர்பில் எவ்விதமான பேச்சும் இது வரையில் முன்னெடுக்கப்படவில்லை என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்திய போக்குவரத்து அமைச்சர் நிட்டின் கட்காரி இரு நாடுகளுக்கு இடையில் பாலம் குறித்து கூறும் விடயங்கள் எமக்குத் தெரியாது என்றும் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்தார். (ற–5)

# தேசிய அரசின் செயற்பாட்டில் தமிழர் நம்பிக்கை வைக்கலாம்

## அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 14
தேசிய அரசின் அர்ப்பணிப்பான செயற்பாட்டில் தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை வைக்கலாம் என்று ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மலரும் தமிழ் – சிங்கள புத்தாண்டில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க எமது அரசு அர்ப்பணிப்புடன் இருக்கின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தேசிய அரசு நாட்டில் மத மற்றும் இன நல்லிணக்கத்தை முன்னெடுக்கும் நோக்கில் என்றுமில்லாதவாறு செயற்பட்டு வருகின்றது.

தெற்கு மக்களைப் போன்று வடக்கு மக்களும் இன்று அச்சமின்றி வாழும் சூழலைதேசிய அரசுஏற்படுத்தியுள்ளது. அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர். அந்தச் சூழலை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம்.

இது இவ்வாறு இருக்க – தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு விவகாரத்தில் எமது தேசிய அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக புதிய அரசமைப்பின் ஊடாக தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தேசிய அரசு நேர்மையான முறையில் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

எனவே மலரும் புத்தாண்டில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கும் என்று மக்கள் நம்பிக்கை வைக்கலாம். அதற்கான முழுவீச்சுடன் எமது தேசிய அரசு செயற்பட்டு வருகின்றது – என்றார். (ற–5)

### பனாமா ஆவணங்கள் குறித்து அவசர நடவடிக்கை இல்லை

கொழும்பு, ஏப். 14
பனாமா ஆவணங்களில் இலங்கையர்கள் குறித்த விவரங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், அது தொடர்பில் அவசரப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்சைக்குரிய – பல அரசியல் தலைவர்களை சிக்கலில் மாட்டியுள்ள பனாமா ஆவணங்கள் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநரின் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதில் வழங்கிய அவர், இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம். மில்லியன் கணக்கான ஆவணங்கள் இருக்கின்றன. இந்த ஆவணங்கள் தொடர்பில் உண்மைத் தன்மை உறுதிப்படுத்த வேண்டும். இரண்டாம் தரப்பால் வெளியிடப்பட்டுள்ள இந்தத் தகவல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு முன்னர், அதனை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். அதனை நாம் தற்போது மேற்கொண்டுள்ளோம். இது தொடர்பில் முடிவெடுப்பதற்கு அவசரப்பட மாட்டேன் – என்று தெரிவித்துள்ளார். (ற–5)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜெனிவாவில் தப்பிக் கொள்ள தமிழர் தரப்பைத் தடவும் முயற்சி...!

வடக்கு மாகாணத்தில், நீண்ட காலமாகக் காலூன்றி, மக்களை அல்லோலகல்லோலப் படுத்தி வரும், அரசின் காணி பறிப்பு அக்கிரமம், எப்போது ஒழியும் என்பதை எதிர்பார்த்திருக்கும் வேளையில்--

அதனைத் தணிக்க--அது குறித்து நேரில் ஆராய்வதற்கு--ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவசர அவசரமாக, வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரைச் சந்திப்பதற்கு ஏற்பாடாகி உள்ளது.

ஜனாதிபதியுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பேச்சுக்களில், பங்குபற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்-சிங்களப் புத்தாண்டு பிறந்தகையோடு, தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முதலாவது காலடியை, ஆட்சியில் உள்ள அரசு மேற்கொள்ள முன்வந்தமை, மகிழ்ச்சிக்கு உரியதும், பாராட்டப்பட வேண்டிய ஒன்றும் எனக் கொள்ளலாம்.

காணி விவகாரம், வடக்கில் இப்போது பிரதான--முதன்மை--இடத்தைப் பிடித்துள்ளமை, இங்கு ஊன்றிக் கருத்திலும் கவனத்திலும் கொள்ளப்பட வேண்டிய தேவை, மிகப் பருத்த பரிமாணத்தைக் கொண்டதாகும். அதன் நிமித்தம்--

மாகாண சபையின் உறுப்பினர்கள், அவர் அவர்களுக்குத் தெரிந்த காணிப் பிரச்சினைகள் குறித்த விவரங்களைத் தமக்குத் தருமாறு, முதலமைச்சர் கேட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின், முப்பத்திரெண்டாவது கூட்டத் தொடர், இன்னும் இரண்டு மாதங்களில்--

ஜெனிவாவில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நடைபெற உள்ளது.

அதனை மனதில் வைத்துத்தான், அரச (தெற்குத் தரப்பும்) தமிழர் தரப்பும், எந்த வகையிலும் பிய்த்துப் பிடுங்காமல் இருப்பதற்குப் பொடி வைக்கும் செயல் நிலையாகக் கூட இதனைக் கொள்ளலாம். இல்லையா...?

உள்ளதைச் சொல்வதாயின், ஏப்ரல்-மே மாதங்களில், தமிழர் தரப்பை, தட்டித் தடவிக் கொடுப்பதற்கான, மாய்மாலங்கள் கூட மேலெழலாம். அது ஒன்றும் புதிதல்லவே..!

ஆற்றைக் கடக்கும் வரை அண்ணன் தம்பி; அதன் பின்னரோ, நீயாரோ... நான் யாரோ என்று "டட்டா" காட்டிப் போகும் நிலையும் எழலாம்...!

மே, ஜூன் மாதங்கள் வரை இத்தகைய ஆயிரம் ஆயிரம் விட்டுக் கொடுப்புகளும், ஏன் ஏய்க்காட்டல்களும் வெளிப்படக் கூடும்...

அதன் பின்னர், வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுவதை எவரால் தடுக்க இயலும்..?

தமிழா! இலங்கைத் தீவில் உனது கதி மாறுவது எப்போது...?

# இனப்பிரச்சினைக்கு ஆணிவேரான குடியேற்றங்கள்

சேரலாதன்

இலங்கையில் தீர்க்கப்படாத நிலையில் நீண்டு கொண்டே செல்கின்ற இனப்பிரச்சினையின் ஆணிவேராகத் திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படுகின்ற சிங்கள மக்களின் குடியேற்றங்களே காணப்படுகின்றன.

ஓர் இனத்தைச் சேர்ந்த மக்கள் பாரம்பரியமாக வாழ்கின்ற இடங்களில் வேறொரு இனத்தவரை அரசு திட்டமிட்ட முறையில் குடியேற்றுவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் அரசு செய்வதைத்தான் இலங்கை அரசு தமிழர் தாயகப்பகுதியில் மேற்கொண்டு வருகின்றது. பாலஸ்தீன மக்களின் பாரம்பரியமான பிரதேசங்களில் யூத மக்களுக்கான குடியிருப்புக்களை நிறுவியதன் மூலமாக அப்பாவி பாலஸ்தீனர்கள் இருக்க இடமின்றி அலைந்து திரிகின்ற நிலையொன்று உருவாகிவிட்டது. இஸ்ரேலைச் சூழ ஏராளமான அரபு நாடுகள் இருந்தபோதிலும் பாலஸ் தீனியர்களுக்கு உதவ அவர்களால் முடியவில்லை. மேற்குலக நாடுகளின் ஆதரவைப் பெற்ற இஸ்ரேல் ஆயுதபலத்தால் அரபு நாடுகளை அடக்கி ஆண்டு வருகின்றது.

### இனப்பிரச்சினையே முக்கிய காரணம்

வளம்மிக்க இலங்கை சகல துறைகளிலும் நலிவடைந்து காணப்படுகின்றமைக்கு இனப்பிரச்சினையே முக்கிய காரணமாகும். நாட்டின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்க ஆரம்பித்து வைத்த சிங்களக் குடியேற்றங்கள் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஏற்கனவே கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதி முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பகுதி சிங்களப் பிரதேசங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான பூர்வீகமான தொடர்புகளைத் துண்டிக்கும் வகையில் வெலி ஓயா என்னும் சிங்களப் பெயரிலான கிராமம் உருவாக்கப்பட்டது. மணலாறு என்ற தமிழ்ப்பெயர் வெலி ஓயாவாக மாற்றப்பட்டுவிட்டது. இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தினூடாகத் திருகோணமலை செல்வதாயின் இந்தச் சிங்களக் கிராமத்தைக் கடந்து செல்லவேண்டிய நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. யாழ்ப்பாணத்தில்கூட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாவற்குழியில் சில சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுவிட்டன. காலப்போக்கில் இதுவொரு பெரிய குடியிருப்பாக மாறிவிடக் கூடும். இதனால் திருகோணமலை நகருக்கு ஏற்பட்ட ஆபத்து யாழ்.நகருக்கும் வந்துவிடக்கூடும் என்பதை மறுதலிக்க முடியாது. இதைவிட வலிகாமம் வடக்கில் ஏராளமான படையினர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கொடிய போர் இடம்பெற்ற வன்னியிலும் இராணுவக் குடியிருப்புக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது கிழக்கு மாகாணத்துக்கு ஏற்பட்ட அவலநிலை வடக்கிலும் ஏற்பட்டுவிட்டால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

> **ஓர் இனத்தைச் சேர்ந்த மக்கள் பாரம்பரியமாக வாழ்கின்ற இடங்களில் வேறொரு இனத்தவரை அரசு திட்டமிட்ட முறையில் குடியேற்றுவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.**

### புலிகளின் காலத்தில் கட்டுப்பாட்டுக்குள்

விடுதலைப்புலிகள் பலம்பெற்று விளங்கிய காலப்பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருந்தன. ஆனால் போரின் பின்னர் கேட்பதற்கு எவருமில்லாத நிலை தமிழர் பகுதியில் காணப்படுகின்றது. தற்போது இறுதியாகக் கிடைத்த தகவலின் பிரகாரம் முல்லைத் தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் கடற்படை மற்றும் இராணுவத்தினரின் பூரணமான ஒத்துழைப்புடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெறுவதாகத் தெரிய வருகின்றது. இது தொடர்பான விவரங்களைச் சேகரிக்கச் சென்ற கிராம சேவையாளர்கள் குடியேற்றவாசிகளாலும், இராணுவத்தினராலும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். போர் நிறைவடைந்து ஏழு வருடங்கள் ஆகிய நிலையிலும் சிவில் நிர்வாகத்தில் படையினரின் அத்து மீறல்கள் தொடரவே செய்கின்றன. அரச அதிகாரிகளையும், அமைச்சர்களையும் இவர்கள் மதித்து நடப்பதாகத் தெரியவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தின் இன்னொரு பகுதியான நாயாற்றில் ஏற்படுத்தப்பட்ட அத்துமீறிய குடியேற்றத்திட்டங்களை உடனடியாக அகற்றிவிடுமாறு மீள் குடியேற்ற அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ள போதிலும், அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் அரசு அமைச்சர்கள் என்று இருப்பதில் அர்த்தம் எதையும் காண முடியவில்லை.

### படையினரின் ஆதிக்கம்

இலங்கையைப் பொறுத்த வரையில் எந்த விடயத்தை எடுத்துக்கொண்டாலும் படையினர் மற்றும் பொலிஸாரின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அரசினாலும் இதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வடபகுதி மக்களின் பேராதரவுடன் அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபை சட்ட விரோதக் குடியேற்றத்திட் டங்களைத் தடுப்பதில் மிகக் கடுமையாக ஈடுபட வேண்டும். வெறுமனே அறிக்கைகளை மட்டுமே விடுப்பதால் ஒன்றுமே ஆகப் போவதில்லை. வடக்கு மாகாண சபையும் சரி தமிழ் மக்கள் பேரவையும் சரி தீர்வுத் திட்டங்களைத் தாராளமாக முன்வைக்கட்டும். ஆனால் தமிழர் தாயகப் பகுதிகள் பறிபோகும் போது தீர்வுத் திட்டங்கள் எவையும் உதவப் போவதில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்சீனக்கடலில் தங்கியுள்ள சீனாவை இலங்கைக்கு அழைத்து வரும் ரணில்

சிவா செல்லையா

அரசியலில் எதுவும் நிகழலாம் என்பதற்கு இலங்கையின் அரசியல் மிகவும் உறுதியான எடுத்துக் காட்டாகும். தமிழர்களுக்கு உரிமைகளை வழங்காது இருப்பதற்கு தரமிக்க இராஜதந்திர நகர்வுகளை சிங்கள அரசியல்வாதிகள் பிரித்தானியர் காலத்தில் இருந்து நிகழ்த்தி வந்து உள்ளனர். அந்த வகையில் இறுதியாக ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கு மேற்குலகில் இருந்து வந்த அழுத்தங்களை நீக்கி சர்வதேச மட்டத்தில் நன்மதிப்பினைப் பெற்றுவிட்டு, தற்போது சீனாவுக்குச் சென்று இருபக்க உறவுகளைச் சீர்ப்படுத்தி உள்ளார். இதில் இலங்கையின் பொருளாதாரம், பாதுகாப்பு, ஒருமைப்பாடு என்பன முக்கியமானதாகும்.

> நாட்டில் மீண்டும் வன் முறைகள் உருவாகுவதாக சீனதேசத்துக்குக் காட்டி, அதனை அடக்குவதற்குத் தேவையான பொருளாதார உதவியை சீன அரசிடம் பெற்று, தென்சீனக் கடலில் முத்துமாலை விரிக்க சீனக்கடற்படையை அம்பாந்தோட்டைக்கு அழைத்துவர ரணில் முயற்சிக்கின்றார்.

நாட்டில் மீண்டும் வன்முறைகள் உருவாகுவதாக சீனதேசத்துக்குக் காட்டி, அதனை அடக்குவதற்குத் தேவையான பொருளாதார உதவியை சீன அரசிடம் பெற்று, தென்சீனக் கடலில் முத்துமாலை விரிக்க சீனக் கடற்படையை அம்பாந்தோட்டைக்கு அழைத்துவரரணில் முயற்சிக்கின்றார். இந்த நிலையில் மேற்குலகின் இலங்கை தொடர்பான போர்க்குற்ற அணுகுமுறை தோல்வியைத் தழுவி உள்ளது. இந்தியா மீளவும் ராஜபக்ச சகோதரர்களின் உதவியை நாட வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

**ரணில் அரசின் விலகும் போக்கு**

மேற்குலக அரசுகளின் கட்டுப்பாட்டில் குறிப்பாக அமெரிக்க அரசின் செல்வாக்கில் இருந்து ரணில் அரசு விலகும் போக்கு மைத்திரியின் நல்லிணக்க சூழலை அகற்றி மீண்டும் தமிழருக்கு ஒரு போர்ச்சூழலை ஏற்படுத்தும். இதில் பல முன்னாள் போராளிகளும் அப்பாவித் தமிழ் மக்களும் பலிக்கடாவாகும் சூழல் ஏற்படலாம். தமிழக தமிழ் மக்களின் உறவைச் சீர்குலைக்க இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் மீனவர்களாகப் படகுகளில், பல அப்பாவி இந்திய மீனவர்களையும் ஏற்றி இலங்கைக் கடலுக்குள் புகுகின்றனர். பின்னர் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தின் மூலம் தப்பிவிடுகின்றனர். முழு இலங்கையிலும் துணி வியாபாரம் மட்டுமல்ல, கஞ்சா வியாபாரத்திலும் இந்தியப் புலனாய்வு சம்பந்தப்பட்டு உள்ளது. இவை இந்தியாவினால் இலங்கையைக் கட்டுப்படுத்தும் நாடு கடந்த பயங்கரவாதச் செயல்களாகும். மொத்தத்தில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பாத தென்னிலங்கை சிங்கள அரசியல்வாதிகளின் இராஜதந்திரப் பாதை தமிழர்களைத் தொடர் சமூக இன்னலுக்கு இட்டுச் செல்கின்றது என்றால் மிகையில்லை.

## செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை

எம்மவர்களில் சிலர் தொழில் ஒன்றும் கிடைக்கவில்லை எனக் கூறிக்கொண்டு வீணாகப் பொழுதைக் கழிக்கின்றனர். பிறருக்கு சுமையாகவும் இருக்கின்றனர். இவர்கள் ஒருமுறை வெளியில் வந்து பார்த்தால் தமது தவறுகளைப் புரிந்து கொள்வார்கள். தற்போது சுட்டெரிக்கும் வெயிலால் தாங்க முடியாத வெப்பம் நிலவுகின்றது. வீட்டிலும் இருக்க முடியவில்லை. வெளியிலும் செல்ல முடியவில்லை. ஆனால் வீதியோரங்களிலும் நடைபாதைகளிலும் கொளுத்துகின்ற வெயிலை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாது பல்வேறு பொருள்களையும் விற்பனை செய்து கொண்டிருப்பவர்களாகக் காணமுடிகிறது. தமது வாழ்வாதாரத்துக்குத் தேவையான பணத்தைச் சம்பாதிப்பவர்களாக தமது உடல்களை வருத்தி பாடுபடுகின்ற இவர்கள் போற்றுதற்குரியவர்கள். இதைவிட நடையாய் நடந்து ஊதுவத்திக் குச்சிகளை விற்பனை செய்பவர்களுக்கும் குறைவில்லை. மற்றவர்களிடம் கையேந்தாமல் ஏதோ முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். தொழில் என்பதில் உயர்வு தாழ்வு என்பது இல்லை. உழைப்பவன் உயர்ந்தவன். சோம்பியிருப்பவன் தாழ்ந்தவன். தொழில் எதுவாக இருந்தாலும் அதை நேர்மையான வகையில் செய்து வந்தால் வாழ்க்கையில் என்றோ ஒருநாள் உயர்வு வரத்தான் செய்யும். இதை உணர்ந்து கொண்டு எம்மவர்கள் செயற்பட்டால் வாழ்வில் உயர்வு என்பது தானாகவே தேடி வரும்.

பா.விஜயராணி

## பஸ்சேவை இடம்பெறாததால் சிரமங்களை எதிர்கொள்ளும் மக்கள்

சீரான போக்குவரத்து வசதிகள் இன்மையால் பொன்னாலை ஆலயத்தைச் அண்டியுள்ள பகுதிகளில் மீள்குடியமர்ந்த மக்கள் தொடர்ந்தும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவர்கள் தற்போது பஸ் சேவைகளைப் பெறவேண்டுமானால் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்குச் செல்ல வேண்டிய அவலநிலை காணப்படுகின்றது. மூளாய்ச் சந்தியிலிருந்து பொன்னாலை ஆலயத்தை ஊடறுத்து ஒழுங்கான பஸ் சேவைகள் இடம்பெறுமாயின் இவர்களின் சிரமங்கள் நீங்கிவிடும். இந்த மக்கள் தற்போது மூளாய்ச் சந்திக்கு வந்து பஸ் சேவைகளைப் பெறவேண்டியுள்ளது. காரைநகர் இ.போ.ச.பஸ் சேவைகள் தினமும் இரண்டு, மூன்று தடவையாவது தமது பகுதியூடாக இடம் பெறவேண்டுமென்பதே இந்த மக்களின் எதிர்பார்ப்பாகும்.

செ.இராசகிளி பொன்னாலை

## வீதியும் மதகும் விமோசனம் பெறுவது எப்போது?

மூளாயில் உள்ள வீதியொன்று நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது மோசமான நிலையில் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்துகின்ற மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

மூளாய் நல்லதம்பி கடைக்கு அருகில் ஆரம்பித்து மூளாய் தெற்கு வாணி நிகேதன சனசமூக நிலையம் ஊடாகச் செல்லும் வீதியே நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது காணப்படுகின்றது. மழை காலங்களில் இந்த வீதியில் உள்ள பள்ளங்களில் வெள்ளநீர் தேங்கி நிற்பதுடன் சேறும் சகதியுமாகவும் வீதி காணப்படுகின்றது. இதனால் மழை காலங்களில் இந்த வீதியூடான போக்குவரத்து நரகமாகவே மாறிவிட்டது. இந்த வீதியின் அவல நிலை தொடர்பாகப் பல தடவைகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை எவருமே இதைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

ஆகவே அடுத்த மாரி காலம் ஆரம்பிப்பதற்கு முன்பதாக இந்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இதேவேளை பொன்னாலைச் சந்திக்கும் வட்டுக்கோட்டைச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ள மூளாய் இந்து மயானத்துக்கு அருகில் உள்ள மதகு டிப்பர் வாகனமொன்று அதனூடாகச் சென்றபோது அண்மையில் சேதமடைந்தது. சேதமடைந்த இந்த மதகு மூன்று கண்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. தற்போது இதன் ஒரு கண் கற்களால் அடைக்கப்பட்டு சிமெந்தினால் இரு பக்கமும் தற்காலிகப் புருவம் அமைக்கப்பட்டுச் சீர்செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் தற்காலிக ஏற்பாடு மழை காலங்களில் தாக்குப் பிடிக்குமா என்பது கேள்விக் குறியாகவுள்ளது. மாரி காலத்தில் பெருமழையின்போது ஏற்படும் வெள்ளநீர் இந்த மதகு ஊடாகத்தான் கடலைச் சென்றடைவது வழக்கம்.

ஆகவே புதிய மதகு ஒன்றை முன்பு இருந்ததைப் போன்று அமைக்க வேண்டுமெனவும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பா.ரமணன் மூளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலேசியாவில் 26 அடி நீளமான மலைப்பாம்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 550 இறாத்தல் எடையைக் கொண்ட இந்தப் பாம்பு, உலக சாதனைப் பதிவில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னதாக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் 25 அடி நீளமான பாம்பு இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது . (த-ரி4)



## செல்பியால் நேர்ந்த விபரீதம்

பீஜிங், ஏப்.14

தெற்கு சீனாவில் பெண்ணொருவர் செல்பி எடுக்க முயற்சித்து, ரயில் மோதிய பரிதாபச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ரோஸ் தோட்டச் சுற்றுலாப் பகுதியில், இந்தச் சம்பவத்தை அங்கிருந்த சுற்றலாப்பயணி ஒருவர் தற்செயலாகப் படம் பிடித்துள்ளார். கடந்த சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் 19 வயது பெண் ஒருவர் ஆவார்.

வேகமாகச் சென்ற ரயிலுக்கு அண்மையில் சென்று படம் எடுக்க முயற்சித்தபோது, எதிர்பாராத விதமாக தண்டவாளப்பகுதிக்குள் இழுக்கப்பட்டார் எனச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (த-ரி4)

## ஆமைக் குஞ்சுகள் கடத்தியவருக்கு 5 ஆண்டுச் சிறை

வொஷிங்டன், ஏப்.14

ஆமைகடத்தியவருக்கு 5வருடச்சிறைத் தண்டனை வழங்கி அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

27 வயதான கைகு எனும் வாலிபன், மெச்சிக்கன் பகுதியில் நாடு கடத்த உரிமம் பெறாத 51 ஆமைக் குஞ்சுகளைச் சீனாவில் செல்லப் பிராணியாக விற்பனை செய்வதற்காகக் கடத்தியுள்ளார்.



2014 ஆம் ஆண்டில் இருந்துஇவர் சட்டப்படி ஆமைகளை வேண்டி விற்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். கைகுதனது செயலுக்காக நீதிமன்றத்தில் மன்னிப்புக்கோரியதுடன், தனது படிப்புச் செலவுக்காக ஆமைகளை விற்று வந்ததாகவும் தெரிவித்தார். அவருக்காக வாதிட்ட வழக்கறிஞர் அவர் கடத்தல்காரர் அல்ல எனத் தெரிவித்தார். காற்சட்டையினுள் ஆமையைக் கடத்தியது முறையற்ற செயல் என நீதிபதி கண்டித்தார். (த-ரி4)

## அரிசோனா காட்டில் தொலைந்த பெண் 9 நாள்களின் பின்னர் மீட்பு



அரிசோனா, ஏப்.14

அமெரிக்காவின் அரிசோனா வனப்பகுதியில் தொலைந்த பெண் ஒருவர் குச்சிகளால் 'ஹெல்ப்' என அடுக்கி வைத்ததன் மூலம் காப்பாற்றப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காட்டில்தொலைந்த பெண் 9 நாள்களின் பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். அதுவரை குளத்து நீரைப் பருகிக் கொண்டு, தாவரங்களையும் உட்கொண்டு உயிர் பிழைத்துள்ளார் என நேற்றுமுன்தினம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆன் ரோஜர்ஸ் எனப்படும் 72 வயதான பெண் தனது பேரப்பிள்ளைகளைச் சந்திக்கப் போனிக்ஸ் பகுதிக்குச் சென்றுள்ளார். இதன்போது பாதை மாறிப் பயணித்துள்ளார். கடந்த மாச் 31 ஆம் திகதியில் இருந்து காணாமற்போயுள்ளார். காணாமற்போய் 3 நாள்களின் பின்னர் இவரது கார் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் விமானக் குழுவினர் நடத்திய தேடுதலில் இவர் காட்டில் பாறைகளாலும் குச்சிகளாலும் ஹெல்ப் என எழுதி வைத்த எழுத்துகள் தெரிய வந்தது.

அவ்விடத்துக்கு விரைந்த மீட்புப் பணியினர் அவரைக் கண்டுபிடித்தனர். ஆரோக்கியமான நிலையில் அவர் இருந்தபோதும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (த-ரி4)

## சிறுவரை தற்
## பயன்படுத்துகி

### யுனிசெப்பின் அறிக்கைய



அபுஜா, ஏப்.14

போகோ-ஹராம் அமைப்பினர் கடந்த வருடத்திலும் பார்க்க இந்த வருடம் சிறுவர் தற்கொலைக் குண்டுதாரிகளை 10 மடங்காக அதிகரித்துள்ளனர் என யுனிசெப் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 தற்கொலைக் குண்டுதாரியில் ஒரு சிறுவர் உள்ளடங்கப்பட்டிருப்பதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறுவர்களில் 75 சதவீத மானவர்கள் பெண்பிள்ளைகள் எனவும் ஆய்வில்கூறப்பட்டுள்ளது.

சிபொக் பகுதியில் 276 பாடசாலை மாணவர்கள் கடத்தப்பட்ட பின்னர், தற்கொலைத் தாக்குதல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்பிள்ளைகள் கடத்தப்பட்டு 2 வருடங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் 21 தாக்குதல்கள் சிறுவர்களினால் நடத்தப்பட்டவையாகும்.

சிறு
வர்க
கள் அல்ல
தற்கொலை
நடத்துவிப்
வன்முறை
கொடூரமா

## நினிவே நகர வாயிலை

மொசூல், ஏப்.14

ஈராக்கின் மோசூல் நகரில் உள்ள 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த புராதன கட்டடத்தை ஐ.எஸ். அமைப்பினர் அழித்துள்ளனர். மஷ்கி வாயில் எனப்படும் புராதன வாயில், புராதன அசீரிய காலத்து நினிவே நகரின் வாயிலாக இருந்து வந்தது. கிறிஸ்துவுக்கு முன்னர் 7 ஆம் நூற்றாண்டில், உலகின் பெரும் நகரங்களில் ஒன்றாக நினிவே விளங்கியது. சமீபகாலமாக இடம்பெற்ற தாக்குதலில் இந்த பிரதேசத்தை ஐ.எஸ். அமைப்பினர் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளனர்.

ஈராக் தொடர்பாக பிரிட்டன் நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வில், மஷ்கி வாயில் தாக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பக்தாத்தின் புராதன திணைக்களத்தினர் மறுக்கவில்லை என்றும், அந்தக் கட்டடத்தின் கற்கள், புராதன சின்னங்களை ஐ.எஸ் அமைப்பு விற்பனை செய்து வருவதாகவும் அதிகாரபூர்வமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. மொசூலில் உள்ள சமூக ஆர்வலர்



கள் தெரிவிக்
ஐ.எஸ். அமை
மூலம் வாயி
ஊடகங்களுக்
னர். ஐ.எஸ்
மாக்கப்பட்ட
கட்டடம் இது
செயல் என்ற
பட்டுள்ளன.
பிரிட்டன் அரு
தெரிவிக்கையி
களின் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைப் போராளியாக
# கின்றது போகோ ஹராம்

## கயில் வெளியானது தகவல்



கடந்த 2 வருடங்களில் போகோ-ஹராம் அமைப்பினர் 2 ஆயிரம் ஆண்கள், பெண்களைக் கடத்தியுள்ளனர். சமைப்பதற்கும், பாலியல் அடிமைகளாகவும், போராட்டப் பயன்படுத்தவும் இந்தக் கடத்தல்கள் இடம்பெறுகின்றன. சிறுவர்கள் தற்கொலைதாரிகளாகப் பயன்படுத்துவது நைஜீரியப் பகுதியில் பீதியை அதிகரித்துள்ளது. போகோ -ஹராம் அமைப்பினரின் இந்தச் செயற்பாடு அப்பகுதிச் சிறுவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது என இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான போராளிக் குழுக்களிடம் இருந்து தப்பிவந்த குழந்தைகள் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்றனர் எனவும், அந்த அறிக்கை கூறுகிறது.

யுனிசெப்பின் மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்கத் தலைமை அதிகாரி மனுவல் பொனடரெய்ன் தெரிவிக்கையில்; சிறுவர்கள் பாதிக்கப்பட்டவர்கள், குற்றம் புரிந்தவர்கள் அல்லர்.

வற்புறுத்தப்பட்டுத் தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவிப்பது போராட்டத்தின் வன்முறைச் செயல்களில் கொடூரமானது. நைஜீரியா மற்றும் அதனைச் சூழ்ந்த நாடுகளில் இவை இடம்பெறுகின்றது என அவர் தெரிவித்தார்.

றுவர்கள் பாதிக்கப்பட்ட
கள், குற்றம் புரிந்தவர்
லர். வற்புறுத்தப்பட்டுத்
லைத் தாக்குதல்களை
ப்பது போராட்டத்தின்
றச் செயல்களில்
ானது. ”

பெண்பிள்ளைகள் பாலியல் அடிமைகள் ஆக்கப்பட்டதுடன், சிறு வயதில் தாயாகும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. கிட்டத்தட்ட 1.3 மில்லியன் சிறுவர்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன், ஆயிரத்து 800 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ரி4)

# பொருளாதார நெருக்கடி காரணமாக அமெ. அல் ஜெசீராவுக்கு மூடுவிழா

வொஷிங்டன், ஏப்.14

அமெரிக்காவில் அமைக்கப்பட்ட அல்ஜெசீரா செய்தி நிறுவனம் நேற்றைய தினம் மூடுவிழாவைக் கண்டுள்ளது.

நேற்றிரவு 3 மணி நேரம் பிரியா விடை நிகழ்ச்சி ஒலிபரப்பாகியது. 2013 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்ட அல் ஜெசீரா மக்கள் மத்தியில் போதுமான வரவேற்பைப் பெறாத காரணத்தால் மூடவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.




பொருளாதார சூழ்நிலை காரணமாக இந்த முடிவு கடந்த ஜனவரி மாதம் எடுக்கப்பட்டுள்ளது. கட்டாரைத் தலைமையாகக் கொண்ட அல் ஜெசீரா, அமெரிக்காவிலும் தனது கிளையை விஸ்தரித்தது. ஆரம்பத்தில் மிகவும் கனமான செய்திகளுடன் வலம் வந்த அமெரிக்க அல் ஜெசீரா விருதுகளையும் வென்றது.

பி.பி.சியுடன் இணைந்து அல் ஜெசீரா தயாரித்த லிமிட்ஸ் ஒப் ஹோப்: இன்சைட் ஒபாமா வைட் ஹவுஸ் எனும் ஆவணப் படத்தில் மூடுவதற்கான காரணங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. எமது செய்தியாளர்களுக்கான தகுந்த களம் வழங்கப்படாதபோதும், அமெரிக்காவுக்காகக் குரல் கொடுத்தோம் என அமெரிக்க அல் ஜெசீராத் தலைவர் கேட் ஓபிரைன் தெரிவித்தார்.

தடகள வீரர்கள் போதைமருந்து பாவிக்கின்றனர் என்பது தொடர்பான ஆவணப்படுத்தலின்போது அமெரிக்க அல் ஜெசீரா கடும் விமர்சனத்துக்குள்ளானது. இது தொடர்பில் தகவல் தெரிவித்த வீரர் ஒருவர் ஆவணத்தைக் குப்பை என விமர்சித்தார். இந்த மூடுவிழாவால் பல செய்தியாளர்கள் தமது வேலையை இழந்துள்ளனர். (த-ரி4)

# லை அழித்துள்ளது ஐ.எஸ்.



க்கையில்,
மப்பினர் இராணுவ ஆயுதங்கள்
பில் கட்டடத்தை அழித்ததாக
நக்குத் தகவல் வழங்கியுள்ள
அமைப்பால் சமீபத்தில் சேத
மிக முக்கியமான வரலாற்றுக்
என்றும், இது அவமதிப்பான
றும் கருத்துகள் வெளியிடப்

நங்காட்சியக ஊடகப் பேச்சாளர்
யில், ஈராக்கில் புராதன பொருள்
ல தொடர்பான தகவல்களை

பெற்றுக் கொண்டுள்ளோம். புராதன கலைப் பொருள்களை அழிப்பதை நாம் கண்டிக்கின்றோம். தற்போது கிடைக்கப் பெற்ற தகவலின்படி எந்தப் பகுதியை அழித்தார்கள் என்பது எமக்கு தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

கடந்தவருடம் பெப்ரவரி மாதம் ஐ.எஸ் இன் பரப்புரை காணொலியில், மொசூல் அருங்காட்சியகத்தை அழிப்பதும், புராதன கலைப் பொருள்கள் அழிக்கப்படுவதும் காண்பிக்கப்படுகிறது.


அத்துடன் ஒரு லட்சம் கைப்பிரதிகள் நெருப்பில் அழிக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகங்களை அவர்கள் விஞ்ஞான ஆய்வு கூடங்களாகவும், குண்டு தயாரிக்கும் தொழிற்சாலையாகவும் மாற்றியுள்ளனர். குண்டுகளைப் பரிசோதிக்க கலைப் பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஐ.எஸ் அமைப்பினர், புராதன தொழுகைக் கூடங்கள், ஆலயங்கள், மடாலயங்கள் என்பவற்றை அழித்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)



ஐவரிகோஸ்ட் மக்களின் வருடாந்த போபோ கலாசார ஊர்வலங்கள் பொனோவுவாவில் நடைபெற்று வருகின்றன. ஒரு வார காலத்துக்கு நடைபெறும் இந்த ஊர்வலத்தில் பிரெஞ்சு காலனித்துவ ஆட்சியில் எவ்வாறெல்லாம் அடிமைப்பட்டிருந்தார்கள் என்பதை நினைவு கூரும் வகையில் இந்த நாட்டு மக்கள் தமது உணர்வுகளைப் பிரதிபலித்தனர். (த-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்களது எண்பலன் 2016 எப்படி?

(உங்களது எண் பலன் எப்படி? என்ற தலைப்பில் முதலாம் எண்காரர்களுக்கான பலன்கள் நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தன. இன்று 3 ஆம் எண்காரர்களுக்கான பலன்கள் பிரசுரமாகிறது)

## எண் 3

ஒன்பது எண்களில் 3ஆம் எண்ணுக்குத் தனிச்சிறப்பு உண்டு. தேவகுருவான பிரகஸ்பதிக்கு உரியது. எப்போதுமே அடுத்தவருக்கு நல்லது மட்டுமே செய்பவர்கள் இவர்கள்தான். இவர்களது திறமையையும், புத்திசாலித் தனத்தையும் மற்றவர்கள் பயன்படுத்திக்கொண்டு, இவர்களுக்குரிய மரியாதையைச் செய்ய மாட்டார்கள். தனக்கு எதிரியான 6 எண்காரர்களுக்கும் இவர்கள் நன்மையே செய்வார்கள். ஆனால் அவர்கள் இவர்களுக்கு உதவாமல், பல பிரச்சினைகளைக் கொடுப்பார்கள். தன்னை நம்பி வருவோருக்கு நிச்சயம் உதவி செய்வார்கள்.

தங்களை மற்றவர்கள் மதிக்க வேண்டும், தங்களது ஆலோசனைகளையும் கேட்க வேண்டும் என்று மட்டும் மிகவும் எதிர்பார்ப்பார்கள். முகஸ்துதி செய்வதன் மூலம் மற்றவர்கள் இவர்களைப் பயன்படுத்திக் கொள்வார்கள். தங்களது உடை விடயத்திலும், தங்களை அழகுபடுத்திக் கொள்ளும் விடயத்திலும் ஆர்வமாக இருக்க மாட்டார்கள். மானத்தை மறைப்பதற்காக உடை அணிகிறோம் என்று மட்டும் நினைப்பார்கள். அடுத்தவர்களிடம் உதவி கேட்டுச் செல்ல மாட்டார்கள். சுயகௌரவம் பார்ப்பது இவர்களது குறைபாடாகும். இதனாலேயே பல நல்ல வாய்ப்புக்களை இவர்கள் வாழ்க்கையில் இழந்திருப்பார்கள். இவர்கள் பழைய சாத்திரங்கள், பழைய பழக்கங்கள் ஆகியவற்றின் மீது மிகவும் மதிப்பும், மரியாதையும் கொண்டவர்கள். எனவே, கட்டுப்பாடுகளை மீறப் பயப்படுவார்கள்.

பெயர் கெட்டு விடுமோ என்று பெரிதும் அஞ்சுவார்கள். உயிருக்குச் சமமாகக் கௌரவத்தைக் காப்பாற்றுவார்கள். இவர்கள் அடுத்தவர்களின் வேலைக்காக மிகவும் அலைவார்கள். இவர்கள் பேச்சில் மனச்சாட்சி, விதி, நேர்மை, பாலம் போன்ற வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்துவார்கள். இவர்கள் சுதந்திரமாக வாழவே பிரியப்படுவார்கள். கோயில் நிர்வாகம், ஊர்த்தலைமை போன்ற பதவிகளில் கௌரவமாக (ஊதியம் பெறாமல்) வேலை செய்ய விரும்புவார்கள். அன்பிற்கு அடிபணிவார்கள். அதிகாரத்துக்கும், ஆணவத்துக்கும் அடிபணிய மறுப்பார்கள். சில சமயங்களில் ஆவேசமாகவும் எதிர்ப்பார்கள். கையில் பணமிருந்தால் அழகுக்காகவும், சிக்கனத்துக்காகவும் (தேவையைப் பற்றிக் கவலைப்படாமல்) பொருள்களை வாங்கி வீட்டில் வைத்துக் கொள்வார்கள்.

சொத்துக்கள் விடயத்திலும் விட்டுக் கொடுக்கும் குணம் அதிகம் உண்டு. "என் தம்பி தானே வைத்துக் கொள்ளப் போகிறான், வைத்துக் கொள்ளட்டும்." என்று யதார்த்தமாக நினைப்பார்கள். தங்களதுஉரிமையை விட்டுக் கொடுத்து விடுவார்கள். இந்தக் குணத்தால் பல அன்பர்கள் பிற்காலத்தில் கவலைப்படுவார்கள். இவர்கள் தீனிப்பிரியர்கள். குரு ஆதிக்கம் நன்கு அமையப் பெற்றவர்கள். அன்பிலும், பக்தியிலும், சிறந்தவர்கள்.

ஏதாவது ஒரு துறையில் தனித் திறமையைக் காட்டுவார்கள். தேசப்பற்றும் நிறைந்தவர்கள். பிறந்த நாட்டுக்காக உயிரையும் கொடுக்கத் தயாராவார்கள். பொருளாதாரத்தில் மிகவும் உயர்ந்திருப்பார்கள். பார்ப்பதற்குக் கடுமையானவர்களாகத் தோன்றினாலும், வெள்ளை மனதுடன் மற்றவர்களிடம் பழகுவார்கள். ஆனால் குரு பலம் குறைந்தவர்கள் கடன் என்னும் பள்ளத்தில் விழுந்து விடுவார்கள். சிந்திக்காமல் பல காரியங்களில் இறங்கித் தாங்களே சிக்கிக் கொள்வார்கள். சில அன்பர்களுக்குக் காதல் தோல்விகளும் ஏற்பட்டிருக்கும்.

(தொடரும்)

# பிரிட்டனில் அமையவுள்ளது மாவீரர் துயிலும் இல்லம்

அனந்தன்

வீர மறவர்களின் நினைவாக நினைவாலயங்கள் அமைத்து அவர்களைத் தெய்வமாகப் போற்றி வழிபடப்படும் இடமாகவும் மறவர்கள் நிம்மதியாக உறங்கும் இடமாகவும், மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைந்தன.விடுதலைப் புலிகள் ஈழப் போரில் வித்தான மாவீரர்களை நினைவு கூருவதையும், மதிப்பதையும் தமது அடிப்படைக் கடமைகளில், கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஈழத்தில் அமைத்தது போன்றதொரு மாவீரர் துயிலும் இல்லங்கள் உலகில் எந்தவொரு நாட்டிலும் இல்லை எனலாம்.இவ்வாறான பல மாவீர் துயிலும் இல்லங்களை ஈழத்தில் பல பகுதிகளிலும் அமைத்து வழிபட்டார்கள், இவ் விடங்கள் உயிரை ஈந்த மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் நண்பர்கள் எனப் பலரும் சென்று ஆறுதல் அடையும் இடங்களாகவும் திகழ்ந்தன.

சிங்கள அரசும் இராணுவமும் மனித நாகரிகத்துக்கும் பண்புக்கும் புறம்பாக துயிலும் இல்லங்களை அழித்தமை தமது மிருகத்தன்மையையும்

தமிழ் இனத்தின் மீதான அடக்குமுறையையும் உலகுக்கு வெளிக்காட்ட உதவியது.மாவீரனான எல்லாளனை நயவஞ்சக முறையில் வெற்றி கொண்ட துட்டகாமினி எல்லாளனுக்கு சிலை அமைத்து அவ்வழியே செல்லும் அரசரானாலும் வணங்கிச் செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டான்

அவர்களின் சந்ததியினரின் இச் செயலானது மிகவும் கீழத்தரமானதாகும்.

ஈழப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் துயிலுமில்லங்கள் உட்பட மாவீரர் நினைவாலயங்கள், தூபிகள், மாவீரர் நினைவுப்பூங்காக்கள்,

மாவீரர் விளையாட்டுத் திடல்கள் மற்றும் நல்லூரில் அமைந்திருந்த திலீபனின் நினைவுத்தூவி போன்றவை சிதைக்கப்பட்டு உருக்குலைக்கப்பட்டுள்ளதுடன் கோப்பாயில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லம் அழிக்கப்பட்டு இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரிட்டனில் மாவீரர் துயிலும் இல்லம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மாவீரர் துயிலும் இல்லங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ள நிலையிலும் புலம்பெயர் நாடுகளிலும் மாவீரர்துயிலும் இல்லமும், கல்லறைகளும் செயற்கை முறைகளில் வடிவமைக்கப்பட்டு அதற்கென ஒரு மண்டபத்தில் வைத்து மாவீரர்கள் நினைவு கூரப்படுகிறார்கள்.தற்போது தற்காலிகமான துயிலும் இல்லத்தக்குப் பதிலாக பிரிட்டனில் நிரந்தரமாக அமைக்கப்படவுள்ளதான செய்தி ஒட்டு மொத்த தமிழரையும் பேரானந்தத்தில் திழைக்க வைத்துள்ளது.

பிரித்தானியாவை மையமாகக் கொண்டியங்கும் உலகத்தமிழர் வரலாற்று மையமானது பிரித்தானியாவில் தமிழீழ மாதிரிக் கிராமம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும். இக்கிராமத்தினுள் தாயக விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்தவர்களின் நினைவாலயம் அடங்கலாக, விளையாட்டுத்திடல், சமய, கலை, பண்பாட்டுகளை முன்னிலைப்படுத்தும் விடயங்கள், ஆவணக்காப்பகம், நூலகம், பெருமண்டபம், உள்ளகவிளையாட்டரங்கு, விவசாயம், கால்நடை வளர்ப்பு, படகுத்துறை, நீச்சல் தடாகம், உள்ளடங்கலாக பல கட்டுமானங்கள் நிறுவப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. பிரித்தானியாவில் உலகத்தமிழர் வரலாற்று மையத்தினால் மேற்கொள்ளப்படுவரும் மாவீரர் துயிலும் இல்லம் அமைக்கும் பணி மிக வேகமாக நடந்து வருகின்றது.கடந்த வெள்ளிக்கிழமை அன்று மாவீரர் துயிலும் இல்லக் காணியின் முழுப்பெறுமதியான 14 லட்சம் பவுண்கள் கட்டப்பட்டு காணி வாங்கப்பட்டுள்ளது. இக் காணி 108 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது.

உலகப்பிரசித்தி பெற்ற ஒக்ஸ்போர்ட் பகுதியில் அமைந்துள்ளது. தேம்ஸ் நதியுடன் தொடர்புடைய கிளை நதியொன்று இந்நிலப்பரப்பின் ஒருபகுதியின் எல்லையாக உள்ளது எனவும் செய்திகள் தெரிவித்துள்ளன.

போராட்டக் காலத்தில் மாவீரர் நாளில் பல மாவீரர் குடும்பங்கள் மாவீரர்களின் கல்லறைக்களுக்கு சென்று அஞ்சலி செலுத்துவர். கொடியேற்றுதல், ஈகைச் சுடரேற்றுதல், மலர்தூவி அஞ்சலிசெய்தல்என்பன மாவீரர் நாளின் முக்கிய நிகழ்வுகளாக இடம்பெறுகின்றன.

அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியத்தலைவரின் மாவீரர்நாள் உரையும், விடுதலை வேட்கையையும், வீர உணர்வுகளையும்

தரக்கூடியதான கலைநிகழ்வுகளும், பல்வேறு நினைவுகூர் நிகழ்வுகள், உரைகளும் இடம்பெற்றன. மாவீரர் வாரத்தில் மாவீரர் குடும்பங்களின் உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட்டனர். 2009 ஈழப்போராட்டத் தோல்வியின் பின் இந்த நிலை மாறியது. பிரித்தானியாவில் அமைக்கப்படவுள்ள துயிலும் இல்லத்தால் சிங்கள பேரினவாதம் திகைப்படையும் என்பது நிதர்சனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# ஆண்டவனின் உறைவிடமான இரக்கமுள்ள மனம்

உலகில் இடம்பெறுகின்ற சம்பவங்களைப் பார்க்கும்போது மனிதர்களின் இரக்கவுணர்வு குறைந்து வருவது தெளிவாகத் தெரிகின்றது.

உயிரினங்களின் ஆறறிவு படைத்தவர்கள் மனிதர்கள்தான். இதைப் பகுத்து அறியும் அறிவு என்றும் கூறுவார்கள். மனிதர்களிடத்தில் கோப உணர்வு இருப்பது போன்று அதற்கு எதிர்மறையான இரக்கவுணர்வும் இயல்பாகவே அமைந்துள்ளது. இரக்கமுடையவர்களைக் கோபம் இலகுவாக அணுகமாட்டாது. மற்றவர்கள் செய்கின்ற தவறுகளை எல்லாம் இரக்கவுணர்வு மன்னித்து விடும்.

ஆனால் இன்று சமுதாயத்திலே நடப்பது என்ன? மனிதன் மன்னிக்கின்ற இயல்பை மறந்து நிற்கின்றான். ஒரு சிறிய தவறுக்குக்கூட கோபத்தில் பொங்கி எழுவதும் எதையாவது ஏடாகூடமாகச் செய்துவிட்டுப் பின்னர் மனம் வருந்துவதும் அவனது இயல்பாகவே மாறிவிட்டது.

### மாதவம் செய்திடல் வேண்டும்

மனிதர்களாகப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும் என்றார் புரட்சிக் கவி பாரதியார். இத்தகைய உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்படுகின்ற மனிதர்கள் மனிதத்தை இழந்து மிருகங்களைவிடக் கேவலமாக நடந்து கொள்கின்றனர். இந்த உலகுக்கு திருக்குறள் என்கின்ற அரிய பொக்கிசத்தை வழங்கியவர் தெய்வப்புலவர் திருவள்ளுவர். அவர் அருளிய குறள்களில் பிற உயிர்களிடத்தில் காட்ட வேண்டிய இரக்கவுணர்வு, புலால் உண்ணாமை போன்றன வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன. மனதில் இரக்கவுணர்வு உடையவர்கள், பிற உயிர்களைக் கொன்று புலால் உண்பதை ஒருபோதுமே நினைத்துக் கூடப் பார்க்க மாட்டார்கள். பிறரிடத்தில் அன்பு கொள்வதற்கும் இரக்கவுணர்வே காரணமாக அமைந்து விடுகின்றது.

தண்ணீர் கிடைக்காததால் வாடிநின்ற பயிர்களைப் பார்த்து கலங்கி அழுதாராம் இராமலிங்க வள்ளலார். ஓரறிவு படைத்த மரங்களின் மீது அவர் காட்டிய பரிவு அவரது இரக்கத்தின் வெளிப்பாடேயொழிய வேறொன்றும் இல்லை. திருவள்ளுவர்கூட நிழல்களில் ஒதுங்கி நிற்கும் எறும்பு போன்ற சிறிய உயிரினங்கள் காலில் மிதிபட்டு இறந்து விடக்கூடாது என்பதற்காக எப்போதுமே வெயிலில் நடந்து செல்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். இத்தகைய சான்றோர்களின் வழியில் நாம் நடக்கின்றோமா என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

புலி, சிங்கம் போன்ற கொடிய விலங்குகள் அப்பாவி மிருகங்களைக் கொன்று உண்ணுகின்ற காட்சிகளைப் பார்க்கும்போது எம்மை அறியாமலேயே உடல் பதைபதைப்பதை உணர்கின்றோம். அந்தக் கொடிய விலங்குகளின் மீது எமக்கு வெறுப்பும் ஏற்படுகின்றது.

ஆனால் மனிதர்களாகிய நாமும் அதையேதான் செய்கின்றோம்.

ஆலயங்களில் மிருகபலி இடம்பெறும்போது தலை துண்டிக்கப்பட்ட மிருகங்களின் உடல்கள் துடிதுடிக்கின்ற வேதனையான காட்சியைப் பார்த்த பின்னரும் அவற்றின் இறைச்சியைச் சுவைக்கக் காத்திருக்கும் மனிதர்களை மனிதர்களாக எவ்வாறு கருதமுடியும்? இரக்கம் என்பதை மறந்த இவர்கள் கொடிய மிருகங்களைவிடக் கேவலமானவர்கள்.

### இறுதிப்போரின் அவலங்கள்

இறுதிப் போர் இடம்பெற்ற போது தமிழர்கள் வகைதொகையின்றிக் கொன்று குவிக்கப்பட்டார்கள். பலர் தமது அவயவங்களை இழந்து அவதிக்குள்ளாகினர். தமிழ்ப் பெண்கள் எதிர்கொண்ட அவலங்கள் வெளியில் சொல்ல முடியாதவை. வரலாறு காணாத கொடுமைகள் அங்கு அரங்கேறின. ஆனால் ஆட்சியாளர்களோ அல்லது பெரும்பான்மை இன மக்களோ பாதிக்கப்பட்ட மக்கள் மீது சிறிதும் அனுதாபம் காட்டவில்லை. மாறாக வெற்றிக் களிப்பில் அவர்கள் ஈடுபட்டனர். இரக்கவுணர்வை மறந்துபோன அவர்கள் சாதாரண மனிதப் பண்புகளைக்கூட இழந்து நின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

### இரக்கத்தின் வெளிப்பாடுகள்

மன்னன் பாரி முல்லைக் கொடியைத் தனது தேரில் படரவிட்டதும், அசோகச் சக்கரவர்த்தி கலிங்கப் போரில் கண்ட காட்சிகளால் மனம்மாறி பௌத்தத்தைத் தழுவியதும், இரக்கத்தின் வெளிப்பாடுகளாகக் கொள்ளத்தக்கன. ஒருவேளை உணவுக்குக்கூட வழியின்றி ஏராளமானவர்கள் இந்த உலகில் வாழ்கின்றனர். இதேவேளை – தினமும் அறுசுவை உணவை உண்டு களிப்பவர்களும் இங்குதான் இருக்கின்றனர். இவர்கள் வீணாக எறிந்து விடுகின்ற உணவுகள் பலரின் பசியைப் போக்க வல்லன.

ஆனால், பசியோடு இருப்பவர்களை இவை போய்ச் சேர்வதில்லை.

இந்த உலகம் அன்பினால் ஆட்கொள்ளப்பட வேண்டுமானால் நாம் இரக்கமுள்ளவர்களாக மாறிவிட வேண்டும்.

இரக்கமே நல்ல குணங்கள் அனைத்துக்கும் அடிப்படையானது. இரக்கமில்லாத மனம் கடுமையான கற்பாறை போன்றது.

இதில் விதை எதுவும் முளைப்பதில்லை. நீரும் தங்குவதில்லை. அவ்வாறாயின் பசுமையையும், செழிமையையும் நாம் எங்ஙனம் அங்கு எதிர்பார்க்க முடியும்?

எவராக இருந்தாலும் ஏனையவர்கள் மீது அன்பு செலுத்துபவர்களாக நாம் மாற வேண்டும். அன்பே இந்த உலகை ஆளக்கூடியது. இதற்கு இரக்கவுணர்வு அவசியமானது. இரக்கமுள்ள மனம் ஆண்டவன் குடியிருக்கும் கோயிலுக்குச் சமமானது.

ஒரு வேளை உணவுக்குக்கூட வழியின்றி ஏராளமானவர்கள் இந்த உலகில் வாழ்கின்றனர். இதேவேளை – தினமும் அறுசுவை உணவை உண்டு களிப்பவர்களும் இங்குதான் இருக்கின்றனர். இவர்கள் வீணாக எறிந்து விடுகின்ற உணவுகள் பலரின் பசியைப் போக்க வல்லன. ஆனால், பசியோடு இருப்பவர்களை இவை போய்ச் சேர்வதில்லை. இந்த உலகம் அன்பினால் ஆட்கொள்ளப்பட வேண்டுமானால், நாம் இரக்கமுள்ளவர்களாக மாறிவிட வேண்டும். இரக்கமே நல்ல குணங்கள், அனைத்துக்கும் அடிப்படையானது. இரக்கமில்லாத மனம் கடுமையான கற்பாறை போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குட்டி ஆமையும் குகை அரக்கர்களும்

அந்தக் கடற்கரையில் அம்மா ஆமையோடு சேர்ந்து நீந்திக்கொண்டிருந்தது குட்டி ஆமை அம்மு. உற்சாகத்தில் நீந்தி நீந்தி அம்மாவிடமிருந்து சற்று தூரத்துக்கு வந்துவிட்டது. அப்போது எதிர்பாராதவிதமாக புயல் காற்று வீசத் தொடங்கியது.

புயல் காற்றால் கடலில் பெரிய பெரிய அலைகள் எழும்பின. அந்த அலைகள் குட்டி ஆமை அம்முவை இழுத்துச் சென்றன. அம்மு அங்கும் இங்கும் தன் அம்மாவைத் தேடியது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை அம்மாவைக் காணவில்லை. எப்படியாவது கண்டுபிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் அது தொடர்ந்து நீந்திக்கொண்டிருந்தது. ஆனால், அம்மாவைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. தொடர்ந்து நீந்திக்கொண்டிருந்த அம்மு ஆமை, அலைகளில் சிக்கி ஒரு தீவில் கரை ஒதுங்கியது. அது ஒரு குட்டித் தீவு. மூன்று பக்கங்களிலும் கடலால் சூழ்ந்திருந்த அந்தத் தீவின் ஒரு புறம் மட்டும் செங்குத்தான மலை தெரிந்தது. ஆனால் மலை முழுவதும் பனியால் உறைந்திருந்தது.

தொடர்ந்து நீந்தியதாலும், புயல் காற்றில் சிக்கியதாலும் அம்மு மிகவும் களைத்துப் போயிருந்தது. அதற்கு பசி வயிற்றைக் கிள்ளியது. தீவில் உணவு கிடைக்குமா என்று அங்கும் இங்கும் தேடிப் பார்த்தது. எங்குமே உணவு கிடைக்கவில்லை. உணவு கிடைக்க ஒரே வழி, அந்த மலையின் வழியாகத் தரைப்பகுதிக்குப் போவதுதான்அது.

மலையோசெங்குத்துமலை. கூடவேமலை பனியால் உறைந்திருந்தது. இருந்தாலும் மனதில் தைரியத்தை வரவழைத்துக்கொண்ட அம்மு, மலையில் ஏற முயற்சித்தது. அப்போது திரும்பவும் சுழற்காற்று வீசத் தொடங்கியது. மலையில் உறைந்திருந்த பனிக்கட்டிகள் உடைந்து விழுந்தன. பனிக்கட்டிகள் உடைந்து விழுந்த இடத்தில் சிறிய குகை ஒன்று தெரிந்தது. குகைக்குள் கொஞ்சம் வெளிச்சமும் தெரிந்தது. குகையின் வழியே சென்றால் மலையின் மறுபுறத்திற்குப் போய்விடலாம் என்று அம்முவுக்குத் தோன்றியது.

மலையின் அந்தப் பக்கம் சென்றால் எப்படியும் சாப்பிட எதுவும் கிடைக்கும். பசி தீர்ந்தால், பிறகு அம்மாவை தேடிக் கண்டுபிடித்துவிடலாம் என்று நினைத்தபடியே அம்மு குகைக்குள் நுழைந்தது. அவ்வளவுதான், மறுகணம் அம்முவின் இதயமே பயத்தால் உறைந்து போனது. குகையிலிருந்து பயங்கரமான சத்தம் கேட்டது. குகைக்குள் இரண்டு அரக்கர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அரக்கர்கள் பார்க்கப் பயங்கரமாக இருந்தார்கள். பனைமரம் அளவுக்கு உயரமாகவும், கறுப்பாகவும், பார்ப்பவர்களைப் பயமுறுத்தும் அளவுக்கு இருந்தார்கள். அம்முவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

பசியால் ஏற்கெனவே அது சோர் வாக இருந்தது.

அம்மு தரையைப் பார்த்தது.

அம்முவுக்கு பயம் அதிகமானது. ஆமாம்! தரையெங்கும் இறந்துபோன பல விலங்குகளின் எலும்புகள் சிதறி கிடந்தன.

பேசாமல் திரும்பித் தீவுக்கே போய்விடலாமா என்று யோசித்தது.

ஒரு வழியாக மனதில் தைரி யத்தை வரவழைத்துக் கொண்டு குகைக்குள் நடந்தது. அரக்கர்களின் உருவமும் அலறல் சத்தமும் அம்முவைப் பயமுறுத்தின. என்றாலும் அது தைரியமாக உள்ளே போனது.

குகைக்குள் பதுங்கி நடந்து, அரக்கர்களின் பக்கத்தில் அது போனது. அப்போது அம்மு கண்ட காட்சி அதற்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது.

அரக்கர்கள் என நினைத்து அம்மு பயந்தது, உண்மையில் அரக்கர்களே இல்லை. அவை குகைக்குள் ஒரே மாதிரியாக இருந்த இரண்டு கரடு முரடான பாறைகள்தான். அரக்கர்கள் போல இருந்த பாறைகளைக் கடந்து குகையின் வழியாக போய், மலையின் மறு பக்கத்துக்கு வந்து சேர்ந்தது அது.

அங்கே ஒரே ஆச்சரியம். மலையின் மறுபக்கத்தில் குட்டி ஆமைக்கு நிறைய உணவு இருந்தது. அது அவற்றைத் தின்று பசியாறியது. அதன் களைப்பும் நீங்கியது. பிறகு அது தொடர்ந்து பயணித்து, தன் அம்மா இருந்த இடத்துக்குப் போனது குட்டி ஆமை. அம்முவைக் கண்ட அதன் அம்மா சந்தோஷத்தில் கட்டியணைத்துக்கொண்டது.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## முயல்

பஞ்சுப் பந்து முயலொன்று
தாவித்தாவி வருகுது
காதைப் புடைத்துக் கேட்குது
பளபளக்கும் கண்ணாலே
சுற்றும் முற்றும் பார்க்குது
மெல்லப் புல்லைத் தின்னுது
கொஞ்சி மகிழ நினைத்தாலே
அஞ்சி ஓடிப் போகுது
அன்பாய் கேரட் தருகின்றேன்
கொஞ்சம் வரச் சொல்லுங்கள்





# வரலாற்றில் இன்றைய தினம்

70 – ஜெருசலம் முற்றுகை: வெஸ்பிசியன் பேரரசின் மகன் றைரஸ் 4 ரோமானியப் பெரும்படையுடன் யூதத் தலைநகரைச் சுற்றி வளைத்தான்.

1849 – லாஜோஸ் கொஸ்ஸத் தலைமையில் ஹங்கேரி ஒஸ்ரியாவிடமிருந்து தனது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியது.

1865 – அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் போட்ஸ் தியேட்டரில் வைத்து ஜோன் வில்க்ஸ் பூத் என்பவரால் சுடப்பட்டார். (ஏப்பரல் 15 இல் சாவடைந்தார்)

1894 – முதற்தடவையாக வர்த்தக ரீதியிலான சலனப்பட இல்லம் நியூயோர்க்கில் திறந்து வைக்கப்பட்டது.

1912 – பிரித்தானிய பயணிகள் கப்பல் ஆர்.எம்.எஸ் 'டைட்டினிக் வட அத்திலாந்தில் பனிப் பாறையில் மோதி மூழ்கத் தொடங்கியது.

1927 – சுவிடன் ஹோதேர்ன்பேர்க்கில் வோல்வோ கார் வெள்ளோட்டம் இடம்பெற்றது.

1931 – பெருந்தெருக்கள் நடைமுறைக் கோவையின் முதற்பதிப்பு முதன்முதலாக பெரிய பிரித்தானியாவில் வெளியிடப்பட்டது.

1944 – பம்பாய் துறைமுக வெடிவிபத்தில் 300 பேர் சாவடைந்தனர். அப்போதைய பெறுமதியில் 20 மில்லியன் பவுன்ஸ் அளவிலான நஷ்டமும் ஏற்பட்டது.

1956 – விடியோ நாடகக் காட்சி முதன்முதலாக சிக்காக்கோவில் செயற்படுத்திக் காட்டப்பட்டது.

1958 – சோவியத் சற்றலைற் ஸ்புட்னிக் – 2 புவி விண்வெளி சுற்றுப் பாதையிலிருந்து 162 நாள்களின் பின் வீழ்ந்தது. இதிற்தான் முதன் முதலாக ஒரு உயிருள்ள விலங்கு –லைகா எனும் பெண்நாய் விண்ணுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சில மணித்தியாலங்களே அது உயிர் வாழ்ந்தது.

1981 – முதலாவது விண்வெளி ஓடம் கொலம்பியா தனது முதலாவது பரீட்சார்த்தப் பறப்பைப் பூர்த்தி செய்தது.

1986 – பங்களாதேஷில் ஒரு கிலோ கிராம் நிறையுடைய ஆலங்கட்டிகள் (பனிக்கட்டிகள்)வீழ்ந்து 92பேர் சாவு.

1991 – சோவியத் யூனியனிலிருந்து விடுதலை பிரகடனப்படுத்திய நிலையில் ஜோர்ஜியா மக்கள் குடியரசு ஜனாதிபதி பதவியை அறிமுகம் செய்தது.

1994 – வடஈராக்கில் அமெரிக்க விமானப்படை விமானங்கள் தவறுதலாக அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர்களைச் சுட்டு வீழ்த்தியதில் 26 பேர் சாவு.

1999 – அல்பேனிய இன அகதிகள் தொடரணியை நேட்டோ தவறுதலாகக் குண்டு வீசித் தாக்கியதில் 75 பேர்வரை சாவடைந்ததாக அதிகாரிகள் தெரிவிப்பு

2014 – நைஜீரியாவில் இரட்டைக் குண்டு வெடிப்பில் 75பேர் வரை சாவு. 141 பேர் காயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ரஞ்சிதமலர் ஈஸ்வரதாஸ்



கோட்டைக்காடு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சிதமலர் ஈஸ்வரதாஸ் 12.04.2016 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி - லட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், ஈஸ்வரதாஸின் அன்பு மனைவியும், சுந்தரேஸ்வரி, ரகுலேஸ்வரி, சுந்தரேஸ்வரன் (சுந்தரவேல் வைத்தியசாலை), ரகுலேஸ்வரன் (பிரான்ஸ்), யோகேஸ்வரன் (பிரான்ஸ்), மங்களேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசமூர்த்தி, தர்மகுலசிங்கம், நவராணி, ஜெயமதி, ரேணுகா, மீரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, சரஸ்வதி, செல்வராசா, அரியமலர், துரைராசா மற்றும் நேசமலர், விமலாதேவி (கனடா), இன்பமலர், சிவலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கபிலன் (லண்டன்), பார்த்தீபன் (ஆஸ்திரேலியா), கஸ்தூரி, சன்ஜீவன் (பிரான்ஸ்), பிரதாபன் (பிரான்ஸ்), சுகன்யன் (இந்தியா), மதுராங்கி, சுபாங்கன், றணுசியா (பிரான்ஸ்), ஜெனுசியா (பிரான்ஸ்), மாதுஷா (பிரான்ஸ்), லக்சனா (பிரான்ஸ்), பூமிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சரண்ஜித்தின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.04.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் சப்பட்டியான் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**ஈ.சுந்தரேஸ்வரன்**
**(சுந்தரவேல் வைத்தியசாலை)**

**கோட்டைக்காடு,**
**மல்லாகம்.**


(உ/348)
(11,17,18)

# மரண அறிவித்தல்

## சபாபதி சபாநேசன்

(முன்னாள் ஒப்புநோக்குநர் - வீரகேசரி பத்திரிகை கொழும்பு)

**தோற்றம்**
**18 . 10 . 1941**



**மறைவு**
**12 . 04 . 2016**

காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் தற்போது காரைநகர்,மாப்பாணவூரியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி சபாநேசன் 12.04.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி (Retired Inspector of school) - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான (இளைப்பாறிய ஆசிரியர்) ஆறுமுகம் - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சகுந்தலாதேவியின் பாசமிகு கணவரும் சிவரூபன், சிவரட்ணம்(Human Capital Solutions,Srilanka, Telecom PLC Jaffna ), சிவாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனுஜா, சிவகௌரி, தயாளன் ஆகியோரின் மாமனாரும் டிரோசன், கஜானன், ரவிஷனன், திவ்யன், யஸ்மின் ஆகியோரின் அன்புப் பேரனும் சபாநடேசன், சபாநாதன், சுசிலாவதி, சபாநாயகம் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் சிவஞ்ஞானவதி, சபேந்திரன், சங்கரப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரரும் புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரி, யோகேஸ்வரி, தவராஜா மற்றும் தேவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2016) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் (மாப்பாணவூரி) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மகன்: 021 221 1454**
**071 452 2166**
**பேரப்பிள்ளைகள்.**

**மாப்பாணவூரி,**
**காரைநகர்.**

# அருணாசலம் கமலாகரன்

**(ஓய்வுபெற்ற திட்டமிடல் உதவிக்கல்விப் பணிப்பாளர்- தீவகம்)**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் காரைநகர், S.M கேணியடி, மல்லிகையை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் கமலாகரன் 11.04.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - அன்னம்மா தம்பதியரின் மருமகனும் சரோஜினியின் அன்புக் கணவரும், சுபாகரன் (ஆஸ்திரேலியா), துஷ்யந்தினி (கனடா), ரஜீவ்காந் (ஆசிரியர் - பதுளை சரஸ்வதி மத்தியகல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவரான கருணாகரன் (கனடா), மனோகரன் மற்றும் மதிவதனா, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுகந்தா (ஆஸ்திரேலியா), விஜயலிங்கம் (கனடா), காயத்திரி (பதுளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், கீரன், நந்தனா, பிரணவன், சாதனா, கிருத்திகன், பானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், நாகலக்ஷ்மி, சற்குணதேவி, காலஞ்சென்ற வெற்றிவேல் மற்றும் பரஞ்சோதி, விவேகானந்தன், சாரதாதேவி, சிவதேவி, சாந்தினிதேவி, லோகேஸ்வரி, காலஞ்சென்ற தர்மதேவன் மற்றும் இந்திராதேவி, இந்திரேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2016) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**S.M. கேணியடி,**
**காரைநகர்.**


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 969 0945**

(சி/22372)
(11,18)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**அன்னை மடியில்**
**01 . 12 . 1942**



**ஆண்டவன் பிடியில்**
**15 . 03 . 2016**

## அமரர் சபாரெத்தினம் பொன்னம்பலம்

கடந்த 15.03.2016 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் சபாரெத்தினம் பொன்னம்பலம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (14.04.2016) வியாழக் கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகள் காலை 6.00 மணிக்கு ஊறணி புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.**

**தீருவில் ஒழுங்கை,**
**வல்வெட்டித்துறை.**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# விக்ரமுடன் இணைகிறார் காஜல் அகர்வால்

விஷால் நடித்த 'தீராத விளையாட்டுப் பிள்ளை', சமர், நான் சிகப்பு மனிதன் படங்களைத் தொடர்ந்து ஜெய், டாப்சி, சோனியா அகர்வால், சமுத்திரக்கனி நடிக்கும் பெயரிடப்படாத படத்தை இயக்கும் அகத்தியனின் மருமகன் திரு, அடுத்து 'கருடா' படத்தை இயக்குகிறார். முதல்முறையாக விக்ரம், காஜல் அகர்வால் ஜோடியாக நடிக்கும் இந்தப் படத்தில்.

இந்தியில் 23 படங்கள் இயக்கியவரும், நடிகருமான மகேஷ் மஞ்ச்ரேகர் வில்லனாக அறிமுகமாகிறார். முக்கிய வேடங்களில் நாசர், கருணாஸ் நடிக்கின்றனர். 'சண்டைக்காட்சிகளும் அதிக முக்கியத்துவம் கொடுத்து உருவாகும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு இந்த மாதம் தொடங்குகிறது.

இதற்காக ஸ்ரீ பெரும்புத்தூரில் 100 ஏக்கர் நிலத்தை வாடகைக்கு எடுத்து, பிரமாண்டமான அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. பொள்ளாச்சி, கோவை, அகமதாபாத், லக்னோ மற்றும் அரபு நாட்டிலும்; படப்பிடிப்பு நடைபெறவுள்ளது. கோவை மாவட்ட பெண்ணாக நடிக்கும் காஜலுக்கு வட்டார வழக்கில் பேச பயிற்சி அளிக்கப்படுகிறது- என்றார் திரு.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** தாமதித்த பணியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். குடும்பத் தேவை, தாராள செலவில் பூர்த்தியாகும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**இடபம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய உத்தியைப் பயன்படுத்துவீர்கள். வருமானத்தை விட செலவு அதிகரிக்கும். பாதுகாப்பு குறைவான இடத்துக்கு செல்லக் கூடாது.

**மிதுனம்:** உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், சாதனை இலக்கை அடைவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தொழில் சார்ந்த இரகசியத்தை, பிறரிடம் சொல்ல வேண்டாம். சுமாரான அளவில் பணவரவு இருக்கும். உடல் நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம்.

**சிங்கம்:** ஞாபக மறதியால் அவதிப்பட நேரிடலாம். தொழிலில் வளர்ச்சி, விற்பனை அதிகரிக்க, தகுந்த முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் படிப்படியாக உயரும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**கன்னி:** நண்பர்களின் வழிகாட்டுதலால் நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**துலாம்:** சமூகத்தில் உங்களைப் பற்றி நல்ல மதிப்பீடு உருவாகும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் முன்னேற்றம் ஏற்படும். நிலுவைப் பணம் வசூலாகும். குடும்பப் பிரச்சினை சுமுகமாக தீரும்.

**விருச்சிகம்:** அனுபவ அறிவால் தடையை முறியடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பண விடயத்தில் பாதுகாப்பு தேவை. உறவினர் வருகையால் நன்மை உண்டாகும்.

**தனுசு:** திகைப்பு தந்த பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். புதிய வாகனம் வாங்க யோகம் உண்டு. பிள்ளைகளின் செயல்பாடு பெருமை தரும்.

**மகரம்:** தனித்திறமையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி வியத்தகு அளவில் இருக்கும். அதிக வருமானம் கிடைக்கப் பெறுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**கும்பம்:** அடுத்தவர் பிரச்சினையில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் முயற்சி தேவைப்படும். சுமாரான இலாபம் கிடைக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாறுதல் உண்டாகும்.

**மீனம்:** பகைவரால் நெருக்கடி உண்டாகும். எதிலும் முன்யோசனையுடன் இருப்பது நல்லது. தொழிலில் வருமானம் சுமாரான அளவில் இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | | | | | 6 |
| | | | | 4 | | | | |
| 9 | | 6 | | | | 3 | 2 | |
| 3 | 1 | | 5 | | | | | |
| | | | | 1 | | | | |
| | 7 | | | | 2 | | | 4 |
| | | | | | | 6 | | 7 |
| 7 | | | 8 | 6 | 5 | | | |
| | 5 | | 2 | | 7 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 6 | 1 | 5 | 2 | 4 | 8 | 9 |
| 9 | 1 | 4 | 8 | 3 | 6 | 5 | 7 | 2 |
| 2 | 8 | 5 | 9 | 7 | 4 | 3 | 1 | 6 |
| 1 | 4 | 9 | 6 | 8 | 5 | 7 | 2 | 3 |
| 5 | 2 | 3 | 7 | 4 | 9 | 8 | 6 | 1 |
| 8 | 6 | 7 | 3 | 2 | 1 | 9 | 5 | 4 |
| 6 | 7 | 8 | 2 | 9 | 3 | 1 | 4 | 5 |
| 3 | 5 | 2 | 4 | 1 | 8 | 6 | 9 | 7 |
| 4 | 9 | 1 | 5 | 6 | 7 | 2 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இரு பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



மெத்த படித்த விஞ்ஞானி ஒருவர்.. தனது காரில் பயணம் செய்து கொண்டு இருந்தார்... வழியில் ரயர் பஞ்சர் ஆகி விட்டது. கடை ஏதும் இல்லை.. கடை குறைந்தது ஒரு கிலோமீற்றர் தூரம் இருக்கிறது....கூட எவரும் வராததால் அவரே ரயரை மாற்ற ஆரம்பித்தார்.. அப்போது கால் இடறி கீழே விழுந்தார்.. கையில் வைத்திருந்த பொருள்கள் ஒரு குட்டையில் விழுந்து விட்டது..

இப்பொழுது என்ன செய்வது என்று யோசித்து கொண்டு இருந்தார்..

அப்பொழுது கிழிந்த ஆடையோடு ஒரு வழிப்போக்கன் அந்த வழியாக வந்தான்.. அந்த வழிப்போக்கன், இவரைப்பார்த்து ஐயா என்ன ஆச்சு.. என்றான். இவரோ இவனிடம் சொல்லி என்ன ஆகப் போகிறது என்று எண்ணிய விஞ்ஞானி ஒன்றும் இல்லை நீங்கள் போகலாம்.. என்றார்.

அந்த வழிப்போக்கன் போக எத்தனித்தான்.. அந்த விஞ்ஞானிக்கு அப்பொழுது ஒரு எண்ணம் தோன்றியது.. இந்த சாக்கடை குட்டையில் இவனை விட்டால் எவரும் இறங்க மாட்டார்கள், அதனால் இவனை இறங்கச் சொல்லலாம் என்று எண்ணி அவனிடம், நான் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன், அந்தக் குட்டையில் விழுந்த என்னுடைய பொருள்களை எடுத்துத் தாருங்கள் – என்றார்.. ஓ.. இது தான் உங்கள் பிரச்சினையா..? ..நான் அந்த குட்டையில் இறங்கி எடுத்து தர ஆட்சேபனை ஏதும் இல்லை.. ஆனால் அதை விட ஒரு சுலபமான வழி இருக்கிறது..

மூன்று சக்கரங்களில் இருந்து தலா ஒரு பெல்ட்களை கழட்டி இந்தச் சக்கரத்தை மாட்டி, அருகில் உள்ள மெக்கானிக் கடையில் 4 பெல்ட்டுகள் வாங்கி எல்லா சக்கரத்திலும் மாட்டி கொள்ளுங்கள் என்று சொன்னார்.

தான் இத்தனை பெரிய விஞ்ஞானியாக இருந்தும் நமக்கு இந்த சுலபமான வழி தெரியாமல் போய் விட்டதே என்றும்..

இவருக்கு மூளை இல்லை என்றும் தப்பாக நினைத்ததற்கு வெட்கி தலை குனிந்தார்..

**நீதி: எவரையும் குறைவாக எண்ணக்கூடாது**



**ஏழையின் வலி அறியாதவன் அவன் வலியைபாடலாகஎழுதிபணக்காரனாகிறான். ஏழை எழுத்தறிவில்லாமல் அனுபவித்து ஏழையாகவே வாழ்ந்து மடிகின்றனர்.**

காதலிக்கு தாஜ்மஹால் கட்டிய அதிசயம் அன்று.....

காதலியை கட்டினாலே அதிசயம்தான் இன்று.....!!



பெற்றோர்களின் கவனத்துக்கு



சிகரெட், மதுவை விட TV சீரியல்களிலும் சினிமாக்களிலும் காட்டப்படும் பள்ளிப் பருவ காதல் மிகவும் ஆபத்தானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இது புதுசு

பல வர்ணங்களிலும் இயற்கைப் பூக்கள் விற்பனை செய்யப்படுகின்றன. வீட்டை அலங்கரிக்க, அன்பளிப்பு செய்ய அலங்கார வேலைகளுக்கான இயற்கை பூக்கள் அனைத்து நிறத்திலும் பெற்றுக் கொள்ளலாம். திருமண மண்டப அலங்காரத்துக்கான பூக்களும் பெற்றுக் கொள்ளமுடியும். ஒரு கொத்து பூக்கள் 15 ரூபாவில் இருந்து 20 ரூபா வரை விற்பனை செய்யப் படுகிறது. மண்டப அலங்காரத்துக்கான அடிப்படை கட்டணமாக 35 ஆயிரம் ரூபா வில் இருந்து இயற்கை பூக்கள் அலங்காரம் செய்து கொடுக்கப்படுகிறது.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 800 | 600 | 800 |
| நண்டு | 250 | 700 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 600 | 700 | 500 | 400 | 600 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 500 | 500 | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 600 | – | 550 |
| சீலா | 300 | 500 | 400 | 400 | 450 | 500 | – |
| விளை | 650 | 500 | 400 | 500 | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 350 | 400 | 350 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 450 | 400 | 250 |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 400 | – |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 250 | 350 | – | 250 | 300 | 150 | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 100 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 200 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 350 | 350 | 300 | 160 |
| மதனம் | 150 | 250 | 180 | 350 | 300 | 300 | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 100 | 50 | – |
| பாலை | 400 | 250 | 250 | 300 | 500 | 250 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 400 | 300 | – |

## பயன்தரும் வீட்டுக் குறிப்புகள்!

வேக வைத்த உருளைக் கிழங்கு தோலை வீணாக்காமல் அந்த தோலைக் கொண்டு கண்ணாடி களைத் துடைத்தால் பளிச்சென்று மின்னும்.

உள்ளங்கையில் சில சொட்டு சமையல் எண்ணெய் ஊற்றி தேய்த்துக் கொண்டு மீனை சுத்தம் செய்தால் கைகளில் மீன் நாற்றம் அடிக்காது.

சீனி வைத்திருக்கும் பாத்திரத்தில் எப்போதும் எறும்புத் தொல்லை இருந்தால் அந்தப் பாத்திரத்தினுள் நான்கைந்து கராம்பை போட்டால் எறும்பு வராது.

மிக்ஸியில் அரைக்கப் போடும் பொருள்கள் ரொம்பக் கொஞ்சமாக இருந்தால், தட்டினால் மூடிவிட்டு அரைத்தால் நன்றாக அரைபடும்.

பிளாஸ்ரிக் குடம் வீணாகிப் போனால் பாதிக்கு மேல் வெட்டி (மேல் பாகத்தை) விட்டு குப்பைக் கூடையாக அல்லது செடி வளர்க்க உபயோகிக்கலாம்.

## பழப்பாயசம்

தேவையான பொருள்கள்:

மாம்பழம் – 1 கப்
பலாப்பழம் – 1 கப்
வாழைப்பழம் – 1 கப்
நெய் – 2 தேக்கரண்டி
முந்திரி – 5
சீனி – 4 தேக்கரண்டி
அரை மூடி தேங்காய்



### செய்முறை:

மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் மூன்றையும் சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

பாத்திரத்தில் நெய் விட்டு முந்திரியை வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

அந்த நெய்யிலேயே நறுக்கிய பழங்களை, சற்று நிறம் மாறும் வரை வதக்க வேண்டும். நன்கு வெந்ததும் பழங்களை மசிக்கவும். தேங்காயிலிருந்து பால் எடுக்கவும். முதல் பாலை மட்டும் மசித்து வைத்துள்ள பழங்களில் ஊற்றவும். பின் சீனியை அதில் சேர்த்து நன்கு கிளற வேண்டும். பிறகு முந்திரியை சேர்க்கவும். பாயசம் தயார்.



**நாளை**
**சித்திரை-02**
வெள்ளிக்கிழமை 15.04.2016
திதி: நவமி பி.இ.02.59 வரை
நட்சத்திரம்: பூசம்
மு.இ.08.17 வரை
ராகுகாலம்: 10.34-12.04 வரை
சுபநேரம்: 06.04-07.34 வரை



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | சாவகச்சேரி | [illegible] | [illegible] | திருநெல்வேலி | கிளிநொச்சி | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 30 | 40 | 60 | 60 | 60 | 25 | 30 |
| கத்தரி | 100 | 60 | 70 | 80 | 70 | 40 | 40 | 50 |
| கரட் | 100 | 80 | 80–200 | 100 | 100 | 120 | 100 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 80 | 100 | 80 | 40 | 100 | 60 |
| பாகல் | 120 | 100 | 140 | 100 | 100 | 100 | 110 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 80 | – | 80 | – | 70 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 80 | 90 | 80 | 100 | 75 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 70 | 80 | 90 | 60 | 120 | 80 | 65 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 25 | 50 | 15 | 35 |
| தக்காளி | 100 | 100 | 40 | 140 | 120 | 80 | 100 | 160 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 40 | 40 | 40 | 40 | 30 |
| கீரை | 20 | 30 | 40 | 30 | 40 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 20 | 30 | 30 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 150 | 100 | 100 | 160 | 120 | 90 | 120 |
| புடோல் | 40 | 50 | 50 | 50 | 50 | 40 | 30 | 160 |
| கோவா | 50 | 80 | 80 | 60 | 50 | 100 | 50 | 40 |
| வெண்டி | 80 | 60 | 80 | 60 | 80 | 60 | 50 | 60 |
| போஞ்சி | 100 | 110 | 120 | 120 | 120 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 140 | 120 | 120 | 120 | 90 |
| தேங்காய் | 40 | 38 | 50 | 40–50 | 30 | 40 | 20–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 | 90 | 80 | 100 | 75 | 100 |
| தேசிக்காய் | 200 | 350 | 200 | 200 | 240 | 200 | 300 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 80 | 80 | 200 | 120 | 140 | 120 | 70 | 80 |
| இராசவள்ளி | 140 | – | 140 | 160 | 160 | – | 110 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 400 | 250 | 300 | 300 | 350 | 300 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கடந்த வருட சாதனைகள் வரலாறாகும்

**அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியின் புத்தாண்டுச் செய்தி**



வொஷிங்டன், ஏப்.14

இலங்கையில் கடந்த ஆண்டின் சாதனைகள் வரலாற்றில் நிலைத்திருக்கும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

தமிழ் –சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு, வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஒபாமா மற்றும் அமெரிக்க மக்களின் சார்பாக, இலங்கையின் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுடன் நான் இணைந்து கொள்கின்றேன்.

வரலாற்றில் நிலைத்திருக்கும் இலங்கையின் கடந்த ஆண்டுச் சாதனைகள், நல்லிணக்கம், அமைதி, சகிப்புத் தன்மை ஆகியவற்றில், ஆழமான கடப்பாட்டை நிரூபித்துள்ளது.

புத்தாண்டில் புதிய அரசமைப்பைக் கொண்டு வெற்றிகரமாக முன்நோக்கி நகரவும், இலங்கையில் ஜனநாயகம் மற்றும் செழிப்பை மேலும் வலுப்படுத்தவும், வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று ஜோன் கெரி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (வ)

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும்
சரவணபவன் அறக்கட்டளை
இணைந்து நடத்தும்
சித்திரைப் புதுவருட விழா – பண்டத்தரிப்பு 2016

பிரதம விருந்தினர்
மாண்புமிகு. இரா.சம்பந்தன் (பா.உ)
(எதிர்க்கட்சித் தலைவர், இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு)

சிறப்புவிருந்தினர்
கௌரவ. மாவை.சோ.சேனாதிராசா (பா.உ)
(தலைவர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி)

கௌரவவிருந்தினர்
கௌரவ. ஈ.சரவணபவன் (பா.உ)
(தலைவர், உதயன் குழுமம்)

காலம்: 16.04.2016 சனிக்கிழமை
இடம்: பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானம்

மரதன் ஓட்டம்
(ஆண் & பெண்)
காலை 6.30 மணிக்கு,
ஆரம்பம் :
பண்டத்தரிப்பு
இந்துக் கல்லூரியிலிருந்து



மாலைநேர கலை நிகழ்ச்சிகள்
மாலை 3.30 மணிக்கு,
- கிராமியநடனம் – போட்டிநிகழ்ச்சி
- பரிசளிப்புவைபவம்

சிறப்பு மாலை நிகழ்வு
"தேசியத்தின் சிறந்த இசைக் கலைஞர்கள்" பங்குகொள்ளும்
"இன்னிசை இசைநிகழ்வு"

விளையாட்டு நிகழ்வுகள்
- தாச்சிப் போட்டி (ஆண் & பெண்)
- கபடிப் போட்டி (ஆண் & பெண்)
- கயிறு இழுத்தல் (ஆண் & பெண்)
- தலையணைச் சண்டை
- கிறீஸ் மரம் ஏறுதல்
- தயிர்முட்டி உடைத்தல்
- சங்கீதக் கதிரை
- யானைக்கு கண் வைத்தல்
- முதியோர் நிகழ்வு (60வயதிற்கு மேற்பட்டோர்)
- சிறுவர் நிகழ்வு (13வயதிற்கு உட்பட்டோர்)

இணை ஒழுங்கமைப்பு : உதயவாழ்வு • வலி.மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்
மேலதிகவிபரங்கள் மற்றும் பதிவுகளுக்கும் : 077 053 6379
ஊடக அனுசரனை : உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின்

ஆளுநர் ஆகியோர் கவனத்தில் எடுக்கவேண்டும்.
வடக்கு – கிழக்கில் அவர்கள் தமிழ் பேசும் சமூகத்துக்கான தனி மாநிலத்தை உருவாக்க முனைகிறார்கள். வெவ்வேறு இனக் குழுக்களுக்கிடையில், இது மோதலை ஏற்படுத்தும் – என்றார். (த–வ–5)

## வெடிபொருள்

மீட்கப்பட்டிருந்தன. அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் மன்னார் முருங்கனைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் பின்னர் பயங்கரவாதப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
இந்த நிலையில் அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் – சம்பவத்துக்கு உடந்தையாக இருந்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் நபர் ஒருவரைத் தேடிவருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (த–வ–4)

## யாழ்.

பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு கேட்டே குறித்த கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
கடமை நேரங்களில் திடீரென ஏற்படும் அசம்பாவிதங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் போது, அரச அதிபரின் அலுவலக அறை என்பனவற்றை முன் அறிவித்தல் இன்றி பூட்டுவதனால், சில இடையூறுகள் ஏற்படுவதாகத் தெரிவித்தே, இவ்வாறு மாவட்ட செயலகத்துக்கான பாதுகாப்பு பொலிஸாரிடம் கேட்டுக்கொள்வதாக அரச அதிபர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் காணி அபகரிப்பைத் தடுக்க வேண்டும் என வலியுறுத்தி கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், யாழ். அரச அதிபரிடம் மனு ஒன்றினைக் கையளித்தனர். அத்துடன் யாழ். அரச அதிபர் இதற்குரிய பதிலை உடனடியாகப் பெற்று வழங்கவேண்டும் எனக் கோரி, அரச அதிபரின் அலுவலகத்தைப் பூட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(த–வ–10)

## ஏற்கனவே

ணுவத் தேவைக்காகப் புதிதாக நிலங்கள் சுவீகரிக்கப்படுவதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. வடக்கில் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த இடங்களையே தற்போது பாதுகாப்புத் தரப்பு கையகப்படுத்தி வருகின்றது. புதிதாக நிலத்தை கையகப்படுத்தும் திட்டம் நடைபெறவில்லை.
பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகிய பகுதிகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கை ஆறு அல்லது ஏழு வருடங்களுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்டது.
இதுபோலவே, முன்பு திட்டமிட்ட இடங்களைக் கையகப்படுத்தும் நடவடிக்கையே, தற்போது மேற்கொள்ளப்படுகின்றது – என்றார். (த–வ–5)

## பரந்தன்

னருக்குச் சொந்தமான தண்ணீர் பவுசர் வண்டியும், டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானது.
இதில் இரு வாகனங்களின் சாரதிகளும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.
இவ்வாறு சேர்க்கப்பட்டவர்களில் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலையில் குறித்த இராணுவச் சிப்பாய் உயிரிழந்தார். வவுனியாவைச் சேர்ந்த டிப்பர் சாரதி தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.
இந்த விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.
(த–வ–4–10)

## முல்லைக்

அமைச்சின் பேச்சாளர் வன்னி நாயக்க தெரிவித்துள்ளார்.
தென்பகுதி மீனவர்கள் முல்லைத்தீவில் மீன்பிடியில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகச் சில அமைப்புகள் குற்றஞ் சாட்டியுள்ளமை தொடர்பாக அவர் விளக்கமளித்துள்ளார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
முல்லைத்தீவில் மீன்பிடிக்கத் தொடங்கியுள்ள தென்னிலங்கை மீனவர்களில், சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடுபவர்களைத் தடை செய்யுமாறு முல்லைத்தீவு மாவட்ட மீனவர் சங்கங்கள் கோரி யிருந்தன. முல்லைத்தீவில் அடாவடித்தனமாகக் குடியமர்ந்து வாடிகளை அமைத்துள்ள பெரும் பான்மையின மீனவர்களால், அங்கு பாரம்பரியமாக மீன்பிடியில் ஈடுபட்டு வந்த தமிழ் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்த விவகாரம் தீவிரமடைந்துள்ள நிலையிலேயே, கடற்றொழில் அமைச்சின் பேச்சாளர், முல்லைத்தீவுக் கடலில் ஏற்கனவே மீன்பிடியில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் மட்டுமே, அங்கு மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று கூறியுள்ளார்.
இதேவேளை, கொக்குத்தொடுவாய் வடக்கில் உள்ள புலிபாய்ந்த கல் பகுதியில் அத்துமீறிக் குடியமர்ந்துள்ள மீனவர்களால், கிராம அலுவலர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்கப்பட்டிருந்தனர். அத்துடன் இராணுவத்தின் 593 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரியான கேணல் சமந்த சில்வா, கிராம அலுவலர்களின் அடையாள அட்டைகளைப் பறித்து அவர்களை அவமரியாதைக்கு உள்ளாக்கியிருந்தார்.
இதற்கு எதிராக முல்லைத்தீவு மாவட்டக் கிராம அலுவலர்கள் கடந்த திங்கட்கிழமை மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த–வ–5)

## வடக்கு

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் நேற்று மாலை ஊடக வியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதன்போது வடக்கு முதலமைச்சர் கருத்து வெளியிடுகையில்,
அமைச்சர்கள் மீது உறுப்பினர்கள் குற்றம் எதனையும் சுமத்த வில்லை. ஆளும் கட்சியின் 30 பேரில் அவைத் தலைவர் அமைச் சரவையை உள்ளடக்கிய 6 பேரைத் தவிர்த்து, எஞ்சிய 24 பேரில், மூன்றிலிரண்டு பங்கினரான 16 பேர் கையெழுத்திட்டுள்ளோம் என்றும், எனவே ஜனநாயக ரீதியாக நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்த விவகாரத்தைப் பல கோணங்களில் ஆராய வேண்டியுள்ளது. நன்றாக வேலை செய்துகொண்டிருக்கும் அமைச்சர்களைத் தூக்கி வெளியே போட முடியாது. இதே வேளை நன்றாக வேலை செய்பவர்களை உள்வாங்காமலும் விட முடியாது. இவ்வாறான பல விடயங்களைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டியிருக்கின்றது – என்றார்.
முல்லைத்தீவில் இராணுவத்தினர், கிராம அலுவலர்களை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் முதலமைச்சரிடம் கேட்டபோது,
இது பாரதூரமான குற்றம். இதற்கு எதிராக எமது அலுவலர்களால் போதிய நடவடிக்கை எடுக்க முடியுமா என்று தெரியவில்லை. இராணுவத்தினரின் பிரசன்னம் தொடர்பில் நான் இங்கு வந்த நாள் முதல் கருத்துத் தெரிவித்து வருவதற்கு இதுதான் காரணம்.
இராணுவத்தினர் இங்கு இருக்கின்றனர் என்ற துணிவில், தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் எமது அலுவலர்களுடன் தான் தோன்றித்தனமான நடக்க முற்படுகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்துக் கொண் டுள்ளேன் – என்றார்.
(த–வ–5–10)

67ஆம் ஆண்டு விழாவும் இல்லங்களுக்குகிடையிலான மெய்வன்மை தகைமைகாண் போட்டிகளும் சிறக்க
வாழ்த்துக்கள்



நடப்பாண்டு தலைவர்
S.P. கயூரன்
(யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்)
தலைவா நீ நல்ல தலைவராய்
மக்களுக்காக உழைத்த தலைவா
என்றும் உம் பணி காந்தி வாழ்
மக்களுக்கு தொடர்க
பரியோவான் கல்லூரி பழைய மாணவனே
(2003) வாழ்க! வாழ்க!
வாழ்த்துவோர்:
பூ.துவாகரன், பூ.லவுசிகன்
டோகா - கட்டார்.

சம்புக்குள ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் கல்மடு நகர் சம்புக்குளம்

அதிர்ஷ்டலாபச் சீட்டு குலுக்கல் முடிவுகள்

627:- எஸ் அனித்தா, நெளுக்குளம்,வவுனியா
1284:- - - -
3832:- வசந்தன், வவுனியா
1276:- அழகேசு குருக்கள், நாவலர் வீதி, கொழும்பு
2536:- விளான், யாழ்ப்பாணம்.
2047:- விஜயதாசன் பருத்தித்துறை
9304:- க. இந்திராணி, ஊற்றுப்புலம், கிளிநொச்சி.
5412:- சு. டிலக்சிகா, றங்கன் குடியிருப்பு, கல்மடு.
3045:- ம. அருளானந்தன்- வளர்மதி, கரவெட்டி. .


முதலாம் பரிசு: பிளசர் மோட்டார்சைக்கிள்
2438: இ. பிரதீபன், பாரதிபுரம்,
2 ஆம் பரிசு: தொலைக்காட்சிப் பெட்டி
001 :- பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. சிறீதரன்
(இதை ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளார்.)

3ஆம் பரிசு: துவிச்சக்கர வண்டி
9409: றமேஸ், பரந்தன்.

ஆலய நிர்வாகசபை

கூட்டுறவு சங்கங்களின் தலைவர் பொதுமுகாமையாளர் கலந்துரையாடல்

கூட்டுறவாளர்களும், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கமும் இணைந்து நடத்தும் மே தினம் தொடர்பான கலந்துரையாடல் 16.04.2016 சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர், பொது முகாமையாளர், தொழில் சங்க பிரதிநிதிகளை தவறாது கலந்துகொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
இல. 12, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வயலின் வகுப்புக்கள்**

வயலின், வாய்ப்பாட்டு வகுப்புக்கள்
இசைமாணிப் பட்டம் பெற்ற பிரபல ஆசிரியரால் நல்லூர், இணுவில் ஆகிய இடங்களில் புதுவருடத்தை முன்னிட்டு புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

021 222 0076, 077 350 5466

# மாகாண சபையின் தேவைக்காக மாநிலத்தை உருவாக்க முடியாது

## கூறுகிறார் மகிந்த ராஜபக்ச

மாகாண சபையின் தேவைக் கேற்றவாறு, மாநிலங்களை உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் கிடையாது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். தங்காலை கால்டன் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் தெற்கு என்று இரண்டு மாநிலங்கள் உருவாக்கப்படுகின்றமை தொடர்பில் வடக்கு மாகாண சபையினால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணை குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே, மகிந்த ராஜபக்ச இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் கூறியுள்ளதாவது:-

மாகாண சபையின் தேவைக்கேற்றவாறு மாநிலங்களை உருவாக்குதல் மற்றும் மாநிலங்களை இல்லாது செய்தல் போன்ற விடயங்களை அவர்களால் முன்னெடுக்க முடியாது.

நல்லாட்சி அரசுக்குள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் உள்ளனர். அதனால் அந்தச் செயற்பாட்டை முன்னெடுக்க நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. நல்லாட்சி அரசுக்குள் நாட்டை விரும்பும் நபர்கள் இருக்கின்றமையினால் நாம் கூறுகின்ற விதத்தில் அனைத்தும் இடம்பெறும் என்று நான் நம்புகின்றேன் – என்றார்.

(த-வ-5)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 05.01.1944 மறைவு 13.04.2016

**திருமதி வென்சன்லாஸ் மெற்றலின்**

அவர்கள் காலமான செய்திகேட்டு துயரடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை. (J/349) (10.17)

திருக்குமார்
(சிறி-பிரான்ஸ்)

## நேற்று

அத்துடன் இந்துக்கள் நேற்று மாலை புண்ணிய காலத்தில் மருத்துநீர் வைத்து நீராடி, புத்தாடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்றனர். அங்கு விசேட வழிபாடுகளில் பங்கேற்றனர்.

புது வருடப் பிறப்பில் நாள் வியாபார நடவடிக்கைகள் யாழ். நகர் மற்றும் பல்வேறு இடங்களில் இடம்பெற்றதுடன், கைவிசேடம் வழங்கும் சம்பிரதாயம் கடைப் பிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் தமிழ் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இன்று இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்வி

**மதிசாயினி ராஜ்குமார்**



ஆண்டுகள் ஏழு சென்றிடினும்
மறைந்திடுமா உன் நினைவுகள்
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்
உன் புன் சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.
பாலிநகர்,
வவுனிக்குளம்.

தோற்றம் 04.10.1991
மறைவு 14.04.2009

## சுயாதீன

இடம்பெற்ற இராணுவ வாகன விபத்துத் தொடர்பான செய்தி சேகரிக்கச் சென்றபோதே, ஊடக வியலாளரான எஸ். என். நிபோஜன் இவ்வாறு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகவியலாளர் நிபோஜன், 'உதயனுக்குத்' தெரிவிக்கையில்,

விபத்து தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்றிருந்தேன். விபத்து நடந்த டிப்பர் வாகனத்தின் முன்பாக நின்று ஒளிப்பதிவு செய்தேன். இதன் பின்னர் ஒளிப்படம் எடுத்தேன். ஒளிப்படம் எடுக்கும் போது, 'பிளாஷ்' (வெளிச்சம்) வந்தது. டிப்பர் வாகனத்தின் பின்னால் நின்றிருந்த ஒருவர், சிங்கள மொழியில் யார் நீ? ஏன் படம் எடுக்கிறாய் என்றார்.

அவ்வாறு கேட்ட நபர், ரீசேட்டும் வெள்ளைக் காற்சட்டையும் அணிந்திருந்தார். வெள்ளை நிறமான அவர் சற்று உடம்பாக இருந்தார். இதன்போது நான், ஊடகவியலாளர் என்று தெரிவித்து ஊடகவியலாளர் அடையாள அட்டையையும் எடுத்துக் காண்பித்தேன். நீ யார் என்றாலும் எனக்குப் பிரச்சினையில்லை என்று தெரிவித்த அவர் என்னுடைய ஒளிப்படக் கருவியை வலுக்கட்டாயமாகப் பறித்தார்.

சிவில் உடையில் நிற்கின்றீர்களே, நீங்கள் யார் என்று நான் கேட்டேன். அதற்கு அந்த நபர், தான் ஒரு இராணுவக் கேணல் என்று தெரிவித்தார். எனது ஒளிப்படக் கருவியை வாங்கி அதிலிருந்த ஒளிப்படக் காட்சிகள், ஒளிப்படங்களை அழித்தார். இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது, எனது அருகில் இரண்டு இராணுவப் பொலிஸார் நின்றிருந்தனர். அவர்கள் சீருடையுடன் நின்று விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இராணுவ அதிகாரி என்று தெரிவித்த நபர், என்னை அச்சுறுத்தியமை தொடர்பில் இராணுவப் பொலிஸார் எதுவும் பேசாமல் இருந்தனர். சம்பவ இடத்தில் 5 பேர் சிவில் உடையில் நின்றிருந்தனர். அவர்களும் இராணுவத்தினராகவே இருக்கவேண்டும். அத்துடன் 10 இற்கு மேற்பட்டோர் இராணுவத்தினர் அணியும் ரீசேர்ட்டுடன் அந்த இடத்தில் நின்றிருந்தனர்.

இந்தச் அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு, தொலைபேசியூடாகச் சம்பவத்தைத் தெரிவித்தேன். கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அதற்கு அமைவாக நேற்று (நேற்று முன்தினம்) இரவு 11 மணியளவில் முறைப்பாடு மேற்கொண்டேன்.

இதன் பின்னர் இந்தச் சம்பவம் பூநகரி பொலிஸ் பிரிவுக்குள்ளேயே வருவதாகக் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் எனது முறைப்பாட்டை பூநகரி பொலிஸ் நிலையத்துக்குப் பின்னர் பாரப்படுத்தினர்– என்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவ ஊடகப் பேச்சாளரை 'உதயன்' தொடர்பு கொண்டு கேட்டது. இதற்குப் பதிலளித்த அவர், பூநகரிப் பிரதேச இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டதாகவும், அவ்வாறானதொரு சம்பவம் இடம்பெறவில்லை என்று அவர்கள் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, பூநகரிப் பொலிஸ் நிலையத்தில் ஆராய்ந்து விட்டுப் பதிலளிப்பதாகத் தெரிவித்தார். பின்னர் பலமுறை தொடர்பு கொண்டபோதும் அவருக்கு அழைப்பு எடுக்க முடியவில்லை.

இதேவேளை, கடந்த 7 ஆண்டுகளில், ஊடகவியலாளர்கள் மீதான பாதுகாப்புத் தரப்பின் அச்சுறுத்தல் – தாக்குதல் சம்பவங்கள் என்று 17 சம்பவங்கள் வரை இடம்பெற்றுள்ளபோதும், எந்தவொரு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

கடந்த மாத இறுதியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு என்று தெரிவித்து தென்னிலங்கை ஊடகவியலாளர்களுடன் வட பகுதிக்கு ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக வந்திருந்தார். இதன்போது, அழைக்கப்பட்ட தெற்கு – வடக்கு ஊடகவியலாளர்கள் சிலருடன் சென்று பலாலி இராணுவ முகாமில் இராணுவ அதிகாரிகளுடன் அவர் சந்திப்பு நடத்தி இரண்டு வாரங்களுக்குள்ளேயே இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5-ரி4)

## நினைவலைகள்

முதலாம் ஆண்டு எட்டாம் ஆண்டு



தோற்றம் 1936.12.06
மறைவு 2015.04.26

தோற்றம் 1946.03.27
மறைவு 2008.03.22

**வீரகத்தி முருகையா**
திதி: சப்தமி

ஓடி மறைந்தது ஓராண்டு
அப்பா உங்கள் சொல்லுகள்
எங்கள் காதில் ஒலிக்கிறது அப்பா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
சொல்லுகளை மறக்கமாட்டோம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வைரவரை வேண்டுகின்றோம்.

**முருகையா அன்னலட்சுமி**
[கிளி ஆச்சி]
திதி: பிரதமை

ஆண்டுகள் எட்டு ஆனாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
என்றைக்கு நீங்கள் இல்லையோ
எங்கள் சந்தோஷம் தொலைந்து விட்டது அம்மா
உங்கள் பிரிவை என்னால் இன்னும் தாங்க
முடியாமல் தவிக்கின்றேன் தாயே!
நீங்கள் வாழ்ந்த வீட்டில் களைப்பு இழந்து
தவிக்கின்றோம் தாயே!
என் கனவில் வரும் உங்கள் முகம்
இப்போதும் நம்பமுடியவில்லை
தவிக்கின்றேன் தாயே!
உங்கள் ஆத்மா [illegible]
வேண்டுகின்றேன் அம்மா

பிரிவாலும் துயரத்தாலும் வாடும்
பிள்ளைகள்
மகள் : ஜெயராணி
பிரதேச வைத்தியசாலை
ஊழியர் – அளவெட்டி.

பன்னாலை, தெல்லிப்பழை.

## எட்டாம் ஆண்டு-நினைவஞ்சலி



**தம்பு இரட்ணலிங்கம்**
[உரிமையாளர், பொப்புலர் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.]
திதி : அட்டமி [14.04.2016]

தோற்றம் 07.05.1920
மறைவு 12.05.2008

காலத்தைப் பொன்னாகக் கருதி கடமையைக்
கண்ணாகக் கருதி வாழ்ந்தீர்கள் ஐயா !
கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்து வந்தீர்கள் ஐயா!
காலன் உங்களை அணுகாமல் காக்கும் சக்தியின்றிக்
காலமெல்லாம் கலங்குகின்றோம் ஐயா!
எட்டாண்டுகள் என்றாலென்ன எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்களை மறவோமையா !
எமக்கெல்லாம் வழிகாட்டியாய் இருந்து எம்மை
வழி நடத்திய எம் அருமைத் தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

127, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளோடு வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று சிங்கள - தமிழ் புத்தாண்டை பொலனறுவையிலுள்ள ஜனாதிபதியின் இல்லத்தில் தனது குடும்பத்தினருடன் கொண்டாடினார்.

## பண்டத்தரிப்பில் சனியன்று சித்திரைப் புதுவருட விழா

வலி. தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் சரவணபவன் அறக்கட்டளையும் இணைந்து நடத்தும் சித்திரைப் புதுவருட விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதுடன், சிறப்பு விருந்தினராக தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவும் கௌரவ விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் காலை 6.00 மணிக்கு ஆண், பெண் இருபாலருக்குமான மரதன் ஓட்டம், சிறுவர் முதல் முதியோர் வரைக்குமான விளையாட்டுப் போட்டிகளும் மாலை நிகழ்வுகளாக பிற்பகல் 3.30 மணிக்கு கிராமிய நடனம்,பரிசளிப்பு மற்றும் தாயகத்தின் தலைசிறந்த இசைக் கலைஞர்கள் பங்குகொள்ளும் இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (வ)

### நுணாவிலில்

கீழ், எந்தவொரு தரப்பினராலும் யார் கைது செய்யப்பட்டாலும் அவர்களது உறவினர்களுக்குக் கைது செய்யப்பட்டமைக்கான ஆவணம் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். அத்துடன் அந்தப் பகுதிக் குப் பொறுப்பான பொலிஸ் நிலையத்துக்கும் தகவல் கொடுக்கப்பட வேண்டும். இவை இரண்டும் கட்டாயமானது என்று மனித உரிமைகள் சட்டத்தரணிகள் குறிப் பிட்டனர்.

நுணாவிலைச் சேர்ந்த இராசதுரை ஜெயந்தன் (வயது-31) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஜெயந்தனின் மனைவி தெரிவிக்கையில்,

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் இருவர் வந்தனர். இருவரும் சிவில் உடையில் இருந்தனர். எமது வீட்டின் முன்பாகவுள்ள உறவினரின் வீட்டில் வேலி அடைத்துக் கொண்டிருந்த எனது கணவரிடம், இராசதுரை ஜெயந்தன் யார் என்று கேட்டனர். அதற்கு எனது கணவர், தான் இராசதுரை ஜெயந்தன் என்று சொன்னதும், அவர்கள் விசாரணை செய்யவேண்டும் என்று தெரிவித்தனர்.

இதன் பின்னர் எங்களது வீட்டில் வைத்து சுமார் அரை மணி நேரம் விசாரணை செய்தனர். அவர்களிடம் நீங்கள் யார் என்று கேட்டபோது, நாங்கள் ரி.ஐ.டி (பயங்கரவாத விசாரணைப் பிரிவினர்) என்று தெரிவித்தனர். அதற்குரிய எந்த ஆவணத்தையும் காண்பிக்கவில்லை. கொச்சைத் தமிழிலேயே கதைத்தனர். அவர்கள் தொலைபேசியில் யாருடனோ கதைத்தனர். அதன் பின்னர் வெள்ளை நிற ஹைஏஸ் (69-1010) வீட்டுக்கு முன்னால் வந்து நின்றது. அதிலிருந்து ஐந்து பேர் சிவில் உடையில்வந்தனர். வீட்டைச்சோதனை செய்யவேண்டும் என்று தெரிவித்தனர்.

நீங்கள் யார் என்று அவர்களிடம் கேட்டபோதும், தாங்கள் ரி.ஐ.டி.யினர் என்று தெரிவித்தனர். ஆவணங்கள் எதனையும் காட்டவில்லை. வீட்டைச் சோதனை செய்து முடிந்ததும், எனது கணவரின் ஒரு கையில் விலங்கை மாட்டினார்கள். ஒரு வாரத்துக்குத் தேவையான அவரது உடுப்பை எடுத்துத் தரச் சொன்னார்கள். எங்கே கொண்டு செல்கின்றீர்கள் என்று கேட்டபோது, அரியாலை ரி.ஐ.டி அலுவலகத்துக்கு வருமாறு கூறினர்.

இது தொடர்பில் அன்று 11 மணியளவில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்றோம். பொலிஸார், ரி.ஐ.டி அலுவலகத்துக்குச் செல்லுமாறும் முறைப்பாடு தேவையில்லை என்றும் தெரிவித்தனர். இதன் பின்னர் அரியாலையிலுள்ள ரி.ஐ.டி அலுவலகத்துக்குச் சென்றோம். ஒரு பழைய வீட்டில் எந்தப் பெயர் பலகையும் இல்லை. அங்கு சென்று கேட்டபோது, வவுனியாவுக்கு ஏற்றிவிட்டதாகத் தெரிவித்தனர்.

அடுத்த நாள் வவுனியாவுக்குச் சென்று ரி.ஐ.டி அலுவலகம் என்று சொல்லப்பட்ட ஓர் இடத்தில் கேட்டபோது, அவரைப் பூசாவுக்கு அனுப்பிவிட்டதாகவும், கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழுடன் அங்கு சென்று பார்வையிடுமாறும் தெரிவித்தனர்.

எனது கணவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து, போர் நிறைவடைந்த பின்னர் அரசின் புனர்வாழ்வு பெற்று 2011 ஆம் ஆண்டு விடுதலையானவர். எனது கணவரைக் கைது செய்தமைக்கான காரணம் எதுவும் தெரியப்படுத்தவில்லை. அவரைக் கைது செய்து கொண்டு செல்கின்றமைக்கான எந்த ஆவணமும் தரவில்லை. அவர் பூசாவில் இருக்கின்றாரா என்பதும் எமக்குத் தெரியாத நிலைமையே இருந்தது.

இன்று (நேற்று) மாலை, மனித உரிமைகள் சட்டத்தரணிகள் சிலர் வீட்டுக்கு வந்து, எனது கணவர் பூசாவில் தடுத்து வைக்கப்பட்டதை உறுதிப்படுத்தினர் என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கைது செய்வது தொடர்பில், எமக்குத் தகவல் வழங்கப்படமாட்டாது என்று குறிப்பிட்டார். (து-வ-5-ரி4)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 20 . 09 . 1935 | 13 . 04 . 2016 |



### திருமதி புஸ்பவதி சிவபாதம்

தும்பளை வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி சிவபாதம் நேற்று (13.04.2016) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராஜா சிவபாதத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவகுமார் (கனடா), நந்தகுமார் (வலயக்கல்விப் பணிப்பாளர் - வடமராட்சி), சூரியகுமார் (கனடா), விக்கினேஸ்வரி, கலைவாணி, காலஞ்சென்ற கிருஸ்ணகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், அஞ்சலிதேவி (கனடா), ஜமுனா (பிரதி அதிபர், மெ.பெ.உ.த.பா), சீதா (கனடா), தேவராஜா (கிளை முகாமையாளர் ப.நோ.கூ.ச), பாக்கியலக்ஷ்மி (ஜேர்மனி), பகீரதன் ஆகியோரின் மாமியும், சிவாஞ்சன், ரஜீவன், ஜெசிக்கா, சியான், சியாளினி (கனடா), நிர்மலன், நிஷாந்தன், நிலோஜினி (ஜேர்மனி), சிந்துஜன், நிவேதா, கௌசிகா, ஜனனி, தர்ஜனன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.04.2016) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தும்பளை கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 077 6648 734
021 226 4125
(C/22375) (10,17)

தகவல்: சி. நந்தகுமார்
(வலயக் கல்விப் பணிப்பாளர் வடமராட்சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கம்மா கனகராசா

(இளைப்பாறிய ஆசிரியை)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கனகராசா நேற்று (13.04.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகராசாவின் (முன்னாள் பதிவாளர் விவாக, பிறப்பு, இறப்பு - தீவகம்) அருமை மனைவியும், அரசரத்தினம் (ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்-நெடுந்தீவு), கலாநிதி (அதிபர் யா/நெடு. ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், பவுஸ்டாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்) தெட்சணாமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியும், Dr. ராகவன் (IMO-Ayurvedic Teaching hospital-Borella), வானதி (விஞ்ஞானபீடம்-திறந்த பல்கலைக்கழகம்) ஆரதி (CSD-BCAS) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், தம்பிஐயா மற்றும் அன்னபூரணம் காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து அகத்தம்மா எட்வேட் பொன்னுத்துரை, பொன்னம்மா பத்தினிப்பிள்ளை கந்தப்பு, பொன்னம்மா கமலம், காமாட்சி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 15.04.2016 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக கட்டராமன்சல்லி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு.
0776454093, 0776757526.

தகவல்:
குடும்பத்தினர்
(J/340) (10,17)



### திருமதி
### கதிர்காமதேவி செல்லத்துரை

உடுவில் தெற்கு, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமதேவி செல்லத்துரை நேற்று (13.04.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்தாம்பி செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா- நல்லம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான மூத்தாம்பி - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், மங்களேஸ்வரியின் (தொட்டிலடி) பாசமிகு சகோதரியும், கிருபாமூர்த்தி (கொலண்ட்), சுந்தராமூர்த்தி (லண்டன்), சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), முருகமூர்த்தி (வயரிங் மூர்த்தி - கோண்டாவில்), செல்வநாயகி (வட்டுக்கோட்டை), சிவலோகநாயகி (மூளாய்), காலஞ்சென்ற லோகநாயகி (மலர்) ஆகியோரின் அன்புமிகு தாயாரும், விஜயராணி (கல்வியங்காடு), மதிவதனா (சண்டிலிப்பாய்), சுமித்திரா (கைதடி), சுசீலா (கோண்டாவில்), சிறீகாந்திமதி (சுழிபுரம்), தவராசா (மூளாய்), யுகபாலன் (கிளி) ஆகியோரின் அன்பு மாமியும், நிலோஜன், சபேசன், சுதர்சன், பிருந்தா, லிஜிதா, சண்முகப்பிரியன், கஜந்தா, அனோஜன், சுஜீவன், காயத்திரி, சித்திரகலா-சிவானந்தன், விலோஷனி - செல்வசுந்தரா, பிரகாஷினி-திருக்குமரன், கோகுலன், திவாகரன், ஜெனித்தா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கஜலக்ஷன், விதுர்ஜன், லக்ஷ்யா, பானுஜா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.04.2016) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
பாலாவோடை, மானிப்பாய்

தகவல்: குடும்பத்தினர்
077 611 2443
(C/22373) (10,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 14

**அல்ஹிஜிரா வி.கழகத் தொடர்**

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவு னியா முஸ்லிம் மகா வித்தியாலய அஸ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்குஇடம் பெறும் ஆட்டத்தில் ஏ.பி.சி. அணியை எதிர்த்து அல்மதார் அணி மோதவுள்ளது.

**செந்தமிழ் வி.கழகத் தொடர்**

புதுவருடத்தை முன்னிட்டு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு செல்வபுரம் சந்திரன் அணியை எதிர்த்து செம்மலை உதய சூரியன் அணி இன்று மோத வுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆட்டம் இடம் பெறும். (ம-23-102)

# சென்.ஜோன்ஸ் சம்பியனானது; யாழ். வலய கரம் தொடரில்

மாங்குளம், ஏப். 14

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 19வயது ஆண்களுக்கான கரத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத் தைச் சுவீகரித்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த திங்கட்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. முதலாமிடத்தை சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் பெற்றன. (ம-422)



# ஐ.பி.எல். தொடரில் களமிறங்கக்கூடாது மலிங்கவை எச்சரிக்கிறார் சுமதிபால

தமது அனுமதி இல்லாமல் ஐ.பி.எல். தொடரில் விளையாடக் கூடாது என்று மலிங்கவுக்கு இலங்கை கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபையால் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை யின் தலைவர் என்ற அடிப்படையில் திலங்க சுமதிபால மேற்படி குறித்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியில் இடம்பிடித்திருந்த மலிங்க, காலில் ஏற்பட்ட காயம் குணமடையவில்லை என்று தெரிவித்து தொடரில் இருந்தே விலகினார். இதனையடுத்து நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் மத்தியூஸ் தலைமையில் களமிறங்கிய இலங்கை அணி உலகக்கிண்ணத்தில் முதல் சுற்றுடன் நடையைக் கட்டியது. உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்பாக, தான் முழு உடல் தகுதியுடன் இருப்பதாகத் தெரிவித்து பாதியில் விலகிய மலிங்கவின் இந்தச் செயல் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனால் மலிங்கவுக்கு எதிராக போர்கொடி தூக்கப்பட்டுவரும் நிலையில் அவர் தற்பொழுது ஐ.பி.எல். தொடரில் மும்பை அணியைப் பிரதிநிதித்துவம் செய்யத் தயாராகி விட்டார்.

இதனால், காயம் என்ற விடயத்தில் மலிங்க இரட்டை வேடம் போடுகிறாரோ என்ற சந்தேகம் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் எங்களது அனுமதி இல்லாமல் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கு விளையாடச் செல்லக்கூடாது என்று மலிங்கவுக்கு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை கிடுக்குப்பிடி போட்டுள்ளது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சுமதிபால – மலிங்க எங்களது அனுமதி இல்லாமல் ஐ.பி.எல். தொடரில் விளையாடக் கூடாது. அதை மீறி சென்றாலும் அவரால் விளையாட முடியாது. வெளியில்தான் இருக்க வேண்டும். ஏனெனில், அவரது காயத்தன்மை பற்றி ஆய்வு செய்த பிறகே அவருக்கு ஐ.பி.எல். தொடரில் பங்கேற்பதற்கான தடையில்லா சான்றிதழ் வழங்குவது குறித்து முடிவு செய்வோம்– என்று தெரிவித்துள்ளார். (ம)

# வீரர்கள் காரணமில்லை போக்ளேயின் கருத்து



ஐ.பி.எல். வர்ணனையிலிருந்து நீக்கப்பட்ட ஹர்சா போக்ளே, நிச்சயம் தனது நீக்கத்துக்கு வீரர்கள் காரணமாக இருக்க மாட்டார்கள் என்று நம்புவதாக தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக போக்ளே தெரிவிக்கையில் – ஏன் நான் ஐ.பி.எல். கிரிக்கெட் வர்ணனையில் இல்லை என்பது எனக்கு இன்னமும் கூடத் தெரியவில்லை. என்னிடம் தெரிவிக்கப்படவில்லை. என் னைப் பிடிக்கவில்லை என்ற உண்மையை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

கவனிக்க விரும்பும் ஒவ்வொரு கிரிக்கெட் வீரரிடமும் நாம் எல்லாவற்றிலும் ஒத்துப் போக முடியாது என் பதைக் கூறிவிடுவேன். ஆனால் அவர்கள் நன்றாக ஆட வேண்டும் என் பதை உண்மையில் விரும்புபவன் நான். நான் அவர்கள் ஓட்டங்கள் குவிப்பதையோ, இலக்குகள் கைப்பற்றுவதையோ தடுக்க முடியாது. அதனைச் செய்வது அவர்கள் வேலை. அவர்கள் களத்தில் என்ன செய்தார்கள், அல்லது என்ன செய்யவில்லை என் பதை எடுத்துச் சொல்வது என் வேலை. எங்களது பாதைகள் பாராட்டுதல்களாலும் கருத்து வேறுபாடுகளாலும் நிறைந்தவையே. (ம)

# ஆவரங்கால் இந்து இளைஞர், அச்சுவேலி தோப்பு அணிகள் சம்பியனாகின அரியாலையின் கரப்பந்தில்

யாழ்ப்பாணம், ஏப். 14

அரியாலையின் சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் ஏ, பி என இரு பிரிவாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் பி பிரிவில் அச்சுவேலி தோப்பு அணியும் வெற்றி பெற்றுச் சம்பியனாகின.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற பி பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் மல்லாகம் நியு வொரியர்ஸ் அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு அணி மோதிக் கொண்டது. இதில் அச்சுவேலி தோப்பு அணி 3:1 என்ற செற் கணக்கில் சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற ஏ பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர்அணியைஎதிர்த்துஇளவாலை மத்திய அணி மோதிக் கொண்டது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# ஸ்டோக் சிற்றியை வென்றது லிவர்பூல் இங்கிலாந்து பீறிமியர் லீக் கால்பந்தில்


இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக் கிடையே இடம்பெற்று வரும் இங்கிலாந்து பிறீமியர் லீக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற லிவர்பூல்,ஸ்டோக் சிற்றி ஆகிய அணிகளுக்கிடையிலான ஆட்டத் தில் லிவர்பூல் வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய லிவர்பூல் 4:1 என்ற கோல்கணக்கில் ஸ்டோக் சிற்றியை வென்றது. லிவர்பூல் சார்பாகக் களமிறங்கிய மாற்று வீரர் டிவோக் ஒரிஜி இரண்டு கோல்களையும் அல்பேர்ட்டோ மொரேனோ, டானியல் ஸ்டர்ரிஜ் ஆகியோர் தலா ஒரு கோலையும் பதிவு செய்தனர். இந்த வெற்றியுடன் 48 புள்ளிகளைப் பெற்றுள்ள லிவர்பூல், இங்கிலாந்து பிறிமியர் லீக் புள்ளிகள் தர வரிசையில் எட்டாம் இடம் வகிக் கின்றது. (ம)



# வேகம் குறைந்த பந்துகள்தான் தனது ஆயுதமென்கிறார் பிராவோ

ரி-20 ஆட்டங்களில் 300 இலக்குகள் என்ற மைல் கல்லை எட்டுவதற்கு, வேகம் குறைந்த பந்துகள், தாழ்வான பந்துகள்தான் அதிகம் உதவுவதாக பிராவோ தெரிவித்துள்ளார்.



ஐ.பி.எல். தொடரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் நான்கு இலக்குகளைக் கைப்பற்றிய பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில் – எமது ஒவ்வொரு பந்து மூலமும் இலக்கு வீழ்த்தப்பட வேண்டும் என்று எண்ணக்கூடாது. இயலுமானவரை எதிர்முனையில் இருப்பவரை கட்டுப்படுத்தவே எண்ண வேண்டும். எமது சிந்தனைக்கு ஏற்ப அவரை செயற்பட வைக்க வேண்டும். இலக்குச் சரிவை ஏற்படுத்தக்கூடிய பந்தை திடீரென வீழ்த்த வேண்டும். இந்த வகையில் வேகம் குறைந்த பந்துகள், தாழ்வான பந்துகளை நான் எனது ஆயுதமாகக் கொள்கின்றேன். அவை எனக்குப் பெரிதும் உதவுகின்றன என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனானது விக்னேஸ்வரா வி.கழகம் கோப்பாய் பிரதேச கால்பந்தாட்டத்தில்



மாங்குளம், ஏப். 14

கோப்பாய் பிரதேச செயலககழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் புத்தூர் விக்னேஸ்வரா அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

புத்தூர் விக்னேஸ்வரா கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வராஅணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன்அணிமோதியது. 7ஆவது நிமிடத்தில் திருக்குமரன் அணியின் சார்பாக முதல் கோல் பதிவானது. பத்தாவது நிமிடத்தில் பதில் கோலைப் பதிவுசெய்தது விக்னேஸ்வரா. வேறெந்த கோல்களும் பதியப்படாததால் 1:1 என முடிவுகண்டது முதல் பாதி.

இரண்டாம் பாதியிலும் இந்த சமநிலைத் தன்மையென்பது நீடித்துச் சென்றது. பலத்த போராட்டத்தின் மத்தியில் 18ஆவது நிமிடத்தில் விக்னேஸ்வரா அணி பிறிதொரு கோலைப் பதிவுசெய்தது. முடிவில் அந்த அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)



## குசல் குறித்து இன்னமும் முடிவாகவில்லை -மகேல

குசல் ஜெனித் பெரேராவுக்கு நான்கு வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகிவந்த நிலையில் குறித்த தகவல்களை மகேல மறுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் இலங்கை அணியின் அதிரடி வீரரான குசல் பெரேரா ஊக்கமருந்து எடுத்துக் கொண்டதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக நடத்தப்பட்ட பரிசோதனையில் அவர் ஊக்க மருந்து எடுத்துக்கொண்டது நிரூபிக்கப்பட்டதால் அவர் இடைநிறுத்தப்பட்டார். இந்த விவகாரத்தில் குசல் பெரேராவுக்கு 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பில் விசாரணைகள் ஏதும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும், இந்த தகவல் உறுதியானது இல்லை எனவும் மகேல தெரிவித்துள்ளார்.

மகேல தனது டுவிட்டர் பக்கத்தில் – நான் குசலிடம் பேசினேன். அவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார். இந்த விவகாரத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பு மே மாதம் தான் வரும். சர்வதேச கிரிக்கெட் சபை அவரது எதிர்காலம் குறித்து முடிவெடுக்கும். குசலின் தகவல்படி இன்னும் அவருக்கு தடை ஏதும் விதிக்கப்படவில்லை. என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## வேம்படி மகளிர் அணி சம்பியனானது மேசைப்பந்தில்

மாங்குளம், ஏப். 14

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 15வயதுப் பெண்களுக்கான மேசைப்பந்தாட்டத்தில் வேம்படி மகளிர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் முதலாமிடத்தை வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியும், இரண்டாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் பெற்றன. (ம-422)

## கிண்ணம் இந்து மகளிரிடம்

மாங்குளம், ஏப். 14

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 19வயதுப் பெண்களுக்கான மேசைப்பந்தாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் முதலாமிடத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியும், மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் பெற்றன. (ம-422)

## ஞானம்ஸ், கலையொளி அணிகள் வென்றன நாமகளின் துடுப்பாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 14

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் கரவெட்டி ஞானம்ஸ், தெல்லிப்பழை கலையொளி அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

**கண்ணகி - ஞானம்ஸ்**

ஆட்டங்கள் தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வித்தகபுரம் கண்ணகி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய வித்தகபுரம் கண்ணகி விளையாட்டுக்கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணியின் சார்பில் சுரேந்திரன் 4 இலக்குகளையும், அனுரதன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

31 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி 2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இலக்குகளை இழக்காமல் இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக துவரகன் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

**கலையொளி - ஸ்ரார்**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை கலையொளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மாவிட்டபுரம் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை கலையொளி அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மது 26 ஓட்டங்களையும் அகில் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மாவிட்டபுரம் ஸ்ரார் அணியின் சார்பில் சஞ்ஜீத் 3 இலக்குகளையும் தாஸ், டினோ இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

79 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மாவிட்டபுரம் ஸ்ரார் அணி நிர்ணயிக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும், 61 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக கொலின் 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தெல்லிப்பழை கலையொளி அணியின் சார்பில் நதிகரன் 3 இலக்குகளையும் தர்சன், ரதன், அகில் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம-23)



## யங்ஹென்றிஸை வீழ்த்தியது நீக்கிலஸ்


யாழ்ப்பாணம், ஏப். 13

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் நாவாந்துறை சென்.நிக்கிலஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென். நிக்கிலஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## ஐ.பி.எல். கிண்ணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாய்னா விலகல்

சிங்கப்பூர் பூப்பந்தாட்டத் தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார் இந்திய வீராங்கனையான சாய்னா நேவால்.
மலேசிய பூப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியில் தோல்வியடைந்தபிறகு ஓய்வு எடுக்க விரும்பிய சாய்னா, சிங்கப்பூர் தொடரில் இருந்து விலகியுள்ளார். அதே நேரம் இந்த மாதம் 26ஆம் திகதி சீனாவின் வுகான் நகரில் நடைபெறவுள்ள ஆசிய பூப்பந்தாட்டத் தொடரில் தான் கலந்துகொள்ளுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# வெற்றிக்குத் திரும்பியது மும்பை கொல்கத்தாவை நேற்று வீழ்த்தி

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற கொல்கத்தா, மும்பை அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்றது மும்பை.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்யதது. ஆரம்ப வீரர்களாக உத்தப்பா மற்றும் கம்பீர். உத்தப்பா நேற்று நிலைக்கவில்லை. எட்டே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கம்பீர், பாண்டே இணை தடுமாற்றத்தில் இருந்து கொல்கத்தாவை இலகுவாக மீட்டெடுத்தது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க இணைப்பாட்டமாக நூறு ஓட்டங்கள் பகிரப்பட்டன. பாண்டேயின் ஆட்டத்தில் அனல் பறந்தது. 190 என்ற சராசரியைவிட்டு ஒருபோதும் அவரது இன்னிங்ஸ் மாறவில்லை. கம்பீரின் இன்னிங்ஸில் சிக்சர்கள் பெரிதாக இல்லாவிடினும் பவுண்டரிகள் அங்கம் வகித்தன. 52 ஓட்டங்களுடன் பாண்டேயை அனுப்பி வைத்தார் ஹர்பஜன் சிங். வழக்கம் போல இறுதிக்கட்ட மிரட்டலைத் தொடர்ந்தார் ரசல். அவர் 17 பந்துகளில் 4 சிக்சர்கள் அடங்கலாக 36 ஓட்டங்களைக் குவித்தார். 64 ஓட்டங்களுடன் கம்பீர் ஆட்டமிழக்க முடிவில் கொல்கத்தா 187-5.
பந்துவீச்சில் மும்பை அணியின் சார்பாக மக்கலிநகன் 2 இலக்குகளையும், பாண்டியா, ஹர்பஜன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கியது மும்பை. ஆரம்ப வீரராக இருந்த சிம் மொன்ஸ் வெளியேற்றப்பட்டு பதில் வீரராகப் பார்திவ் பட்டேல் சேர்க்கப்பட்டிருந்தார். இதனால் ஆரம்ப இணையாக ரோகித் மற்றும் பட்டேல். இலக்கை எட்டும்படியான நம்பிக்கை கொடுத்தது இணைப்பாட்டம். பவர் பிளேய் முடிவில் (6 பந்துப்பரிமாற்றங்கள்) இலக்கை இழக்காமல் 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தது மும்பை. 23 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் பார்திவ் பட்டேல். பாண்டியா நேற்றும் மூன்றாம் நிலை வீரராகக் களமிறக்கப் பட்டார். 9 ஓட்டங்களே பாண்டியாவிடம் இருந்து கிடைக்கப் பெற்றன. மத்திய வரிசையில் களமிறக்கப்பட்டார் மக்கலிநகன். எதிர்பார்ப்புக்கு ஏற்ற பலன் கிடைத்தது. எட்டுப் பந்துகளில் மூன்று சிக்சர்கள் அடங்கலாக 20 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். இணைந்தது ரோகித் - பட்லர் இணை. இறுதி 5 பந்துப்பரிமாற்றங்களில் 49 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை. பட்டலர் ஆட்டமிழந்தாலும் 5 பந்துகள் மீதமிருக்க ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் ரோகித். அவர் 80 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.
பந்துவீச்சில் கொல்கத்தா அணியின் சார்பாக ரசல், சாவ்லா, யாதேவ் மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (ம)



இலங்கையில் முதல் தடவையாக
ஒளிஅழகன் ஸ்ருடியோவும்
British College of Beauty Studies உம்
இணைந்து நடத்தும் பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரி.

★ அழகுக்கலையில் மட்டும் பல பிரிவுகளை வடிவமைத்துள்ளோம்.
★ கற்பித்தலின் பின்னர் வேலைவாய்ப்பு.
★ கற்பித்தல் உபகரணங்கள் இலவசம்.
★ Skin Therapist, Hair Therapist, Makup Artist, Hair Dresser, Therapist என பன்முக தகைமையாளராக முடியும்.
உங்கள் பெயருடன் பெயர் சேர்க்க முடியும்.
★ சாதாரண நிலையிலிருக்கும் ஒருவரை தன்னுள்ளிருக்கும் திறமைகளை, அறிவுகளை வெளிக்கொண்டு சுயமாக சிந்திக்க தூண்டும் அளவிற்கு கற்பித்தலை வடிவமைத்து இலங்கையிலே வேறெங்கும் கிடைக்காத வகையில் கற்பித்தலை வழங்கி British College of Beauty Studies பெருமிதத்துடன் நிற்கின்றது.
Courses - Diploma in Beauty Theraphy & Hairdressing
★ Advance Diploma in Beauty Theraphy & Hairdressing தனிப் பிரிவுகளாக வடிவமைத்துள்ள விதம்.
★ Basic Makup - 10
★ Advance Makup - Airbrush, Hd Makup, Como Flage, Color Correetio, 3D Mackup, Tv Mackup, Water Proof Mackup, Basic 25 hairstyles, Hair Colouring, Machinery - முக சுருக்கங்களை இல்லாமல் ஆக்குதல், தளும்புகளை மறைத்தல், பருக்களை இல்லாமல் ஆக்குதல். இன்னும் பல Advance ம் எம்மிடம் மட்டுமே.

புதிய பிரிவுகள் ஆரம்பம் இன்றே முந்துங்கள்
குறிப்பிட்டளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
Palaly Road, Thirunelvely Junction
T.P: 076 7011 645

# அக்தரின் கோரிக்கையை நிராகரித்தார் கோக்லி

பாகிஸ்தானின் துடுப்பாட்ட வீரர்களுக்கு ஆலோசனை கூறவேண்டும் என்ற அக்தரின் கோரிக்கையை நிராகரித்துள்ளார் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான கோக்லி.
பாகிஸ்தான் அணியின் மோசமான பெறுபேறுகள் குறித்து அக்தர் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்தார். அந்தப் பேட்டியில் - பாகிஸ்தான் அணியில் இருக்கும் செசாட், அக்மல் போன்ற வீரர்கள் விராட் கோக்லிக்கு நிகரான திறமையைக் கொண்டுள்ளனர். ஆனால் தங்கள் திறமையைச் சரியாக பயன்படுத்தி ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் திணறி வருகிறார்கள்.
நான் விராட் கோக்லியைச் சந்தித்த போது பாகிஸ்தான் வீரர்களுக்கு ஆலோசனை கூறலாமே என்று கேட்டேன். ஆனால் அவர் பாகிஸ்தான் வீரர்களைச் சந்திக்கும் போது உலகத்தின் எந்த விடயத்தைப் பற்றி வேண்டுமானாலும் பேசுவேன். ஆனால் கிரிக்கெட் குறித்து பேசமாட்டேன். கிரிக்கெட் குறித்துப் பேசுவதற்கு பாகிஸ்தான் வீரர்கள் கொஞ்சம் கூட ஆர்வம் காட்டுவதில்லை என்று தெரிவித்து விட்டார் என்றார். பாகிஸ்தான் வீரர்கள் ஆர்வம் இல்லாமல் விளையாடி வருவதாக இருக்கும் குற்றச்சாட்டை விராட் கோக்லியின் பதில் உறுதிப்படுத்தும் விதமாக உள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.